உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

2314

பஞ்சதந்திரம்.

இது

வித்வான் - தாண்டவராய முதலியாரவர்கள்

இயற்றியது.

சென்னைக் கிறிஸ்டியன் காலேஜ்

தலைமைத் தமிழ்ப்பண்டிதராயிருந்த

வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியாரவர்கள், பி. ஏ.

பார்வையிட்டது.

இரண்டாம்பதிப்பு.

சென்னை:

தாம்ஸன் கம்பெனியாரால்

மினேர்வா அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1906

விலை அணா 4.

பொருளடக்கம்.

	பக்கம்.
முகவுரை	v.
வரலாறு	1.
மித்திரபேதம்	4.
சுகிர்ல்லாபம்	33.
சந்திவிக்கிரகம்	51.
லப்தஹானி	80.
அசம்பிரேக்ஷிய காரித்துவம்	99.

முகவுரை

பஞ்சதந்திரம் என்பது உதாரணமுகத்தால் உலகியனெறியும் உயர்ந்தநீதியும் உணர்த்தி மக்கட்கு உறுதிபயப்பதொரு நூலாம். இஃதினிய செந்தமிழ் வசன நன்னடையிலெழுதப்பட்டு யாவராலும் நன்குமதிக்கப்பட்டு விளங்குகின்றது. இவ்வசனநூல் ஆதியில் வெளிப்படுமுன்னரே வீரமார்த்தாண்ட தேவரென்னு மொருபுலவராற் செய்யப்பட்டுச் செய்யுள் ரூபமாயுள்ள பஞ்சதந்திரமொன்றுளது. அதுமிகவு மெளியநடையி லெழுதப்பட்டிருப்பவும் அதனைப் பயில்வார் தொகை நாடோறுஞ் சுருங்குதல்கண்டும், ஆங்கிலம் முதலிய பிறபாஷைகளில் வசனநடையாற் பெரும்பயன்கள் விளைதல்கண்டும், பஞ்சதந்திரத்தைத் தாமும் வசனநடையில் வரையின் தந்நாட்டினரும் அதனைப் பெரிதும் பயிறல் தலைப்பட்டு நற்பெரும்பயன்களை நாளும் நண்ணுவரென்றோர்ந்து கடைப்பிடித்து வித்துவான் தாண்டவராய முதலியாரவர்களியற்றியதாம் இவ் வுரைநடைப்பனுவல். இந்நூலாசிரியர் தொண்டைமண்டலத்திற் புதுவைமாநகரையடுத்த சூணாம்பேட்டையைச் சார்ந்த வில்லியம்பாக்கம் என்ற வில்லிநல்லூரில் வேளாளர்குலத்திற் சித்தாந்தசைவர்மரபிற் கல்வியறிவொழுக்கங்களாற் சிறந்த கந்தசாமி முதலியார்தம் அருந்தவத்துதித்த கனிட்டகுமாரர். இவர்தந் தமயனார் முனியப்பமுதலியார் என்போர். இவர் தமக்கு மிக்க இளமைப்பருவத்திலேயே தமது தந்தையாரை யிழக்குந் தௌர்ப்பாக்கியஞ் சம்பவித்தமையாற் பொன்விளைந்த

களத்தூர்சென்று ஆண்டிருந்த தமது அம்மான் குமாரசாமி உபாத்தியாயருடைய மேற்பார்வையிற்றங்கி, அவர்தம்பா லெழுதப்படிக்கக் கற்றுக்கொண்டனர். அதன்பின்னர்த்தமி ழ்க்கல்வியின்மீது தமக்குள ஆர்வம் அதிகரிக்கவே, நமது நூலாசிரியர் அந்தககவி வீரராகவ முதலியாரது நான்காம் வமிசத்தினராய உழலூர் - வேலப்பதேசிகரிடம் இலக்கண விலக்கியம் பயின்றனர். இனி அத்துணையோடு நின்றுவிடா மற் கல்வி நிரம்புதற்பொருட்டுச் சென்னைமாநகரஞ்சென்று சிந்தாதிரிப்பேட்டையிற் போந்திருந்த புதுவை - விசுவ நாத பிள்ளையிடத்தும் கூனிமேடு - வித்துவான் இராமாநுச முதலியாரிடத்துஞ் செந்தமிழிலக்கியங்களை மேன்மேலும் பயின்று, அக்காலத்துத் தொல்காப்பியம் வரதப்ப முதலி யாரெனச் சிறப்புப்பெயர்பெற்றுத் திகழாநின்ற புலவர்பெரு மானிடம் தொல்காப்பியத்தில் எழுத்ததிகாரமுஞ் சொல் லதிகாரமும் பாடங்கேட்டு இராமநாடகம் பாடிய அருணாச லக்கவிராயரது மரபினராய சீர்காழி வடுகநாத தம்பிரானெ ன்னும் வித்துவச் சிரோமணியிடத்துத் தொல்காப்பியப் பொருளதிகாரங் கசடறத்தேர்ந்து மிகவும் வல்லராய் மிளிர் ந்தனர்; அதான்றியும், வடமொழி, ஆந்திரம், கன்னடம், இந்துஸ்தானி, மகாராட்டிரம், ஆங்கிலம் முதலிய பிறபா ஷைகளும் பயின்று அவையிற்றின்கட் டேர்ச்சி பெற்றனர்; இவ்வாறு பன்மலரிடத்தும் பைந்தேறல் பருகிக் களிசிறந் துலவுஞ் சுரும்பரெனச் சீர்பெற்று விளங்கினர். அது கண்ட அரசாட்சியோர் இவர்தங் கல்வித்திறத்தினைப் பெரி தும் வியந்துபாராட்டினர். பின்னர்த் தாண்டவராய முத லியார் சென்னைத் துரைத்தனக் கலாசாலையிற் செந்தமிழ்த் தலைமைப் புலமை நடாத்துவான் புகுந்து இயற்றமிழ்ப்புல

வர் திலகர் இராமசந்திர கவிராயரோடு சமபண்டிதராய் விற்றிருந்தனர். இங்ஙனம் இவர் தமிழ்ப்பண்டிதராகிப் பல்லாண்டு கழிந்தபின்றைச் சென்னைத் துரைத்தனக் கலாசாலை யெடுபட்டது. ஆகவே இவர் கி. பி. 1843 - ஆம் வருடம் செங்கற்பட்டுச் சில்லாவிற் சுதேச நீதியதிபரா யமர்ந்தனர். இதற்கிடையில் இவர் தமிழ்ப்பண்டிதராயிருந்துழி முகவை— இயற்றமிழாசிரியர் இராமானுச கவிராயரோடும், திருத்தணிகைக் கல்விக்கடல் சரவணப்பெருமா ளையரோடும், இவர் வாதப்போர் புரியுமாறு நேரிட்டது. இவர் திருத்தணிகை மாலை, திருப்போரூர்ப்பதிகம், கதாமஞ்சரி, இலக்கண வினாவிடை முதலிய பலநூல்களையு மியற்றினர். அன்றியும் திருக்குறள் பரிமேலழகருரை, நாலடியார், சீவக சிந்தாமணி, கல்லாடம், திவாகரம் தொல்காப்பியம் முதலிய தொல்லோர் புனைந்த நூல்களைப் பல பிரதி ரூபங்களைக் கொண்டு பிழையறப் பரிசோதித்து அவற்றுட் சிலவற்றை யச்சிடுவித்தனர். கொட்டையூர்ச் சிவக்கொழுந்து தேசிகர் புரசையம்பதியிலிருந்து கோடீச்சுரக் கோவைபாடியபோது இவர் மிகப்பேருதவிபுரிந்தனரென்ப. இன்னும் இவர் அப்புரசைக் கண்ணே யெழுந்தருளியிருந்த பொன்னம்பல சுவாமிகள் விவிலியநூலிற் குற்றங்காட்டுவான் புக்கு 'வேதவிகற்பம்' என் றொருநூல் வெளிப்படுத்தியபோது பல பாதிரிமாரும் வந்து அதனைப் பூருவபக்கம் பண்ணுமாறு தம்மை வேண்டலும் தாம் அதற்கு மறுப்பாக 'வேதவிகற்பதிக்காரம்' என்ற ஒன்றினை யெழுதி முத்துச்சாமிபிள்ளை யென்பவர் பெயரினாலதனை வெளியிட்டனரென்றுங் கூறுப. இவர் அகப்பொருள் விஷயமாகவுஞ் சிங்காரமாகவும் பல சிறுநூல்களுந் தனிப்பாக்களுஞ் செய்துளர், அவை பற்பலவூர்களிலும் ஆங்காங்

குக் காணப்படும். இவர்தங் கையெழுத்துப் பிரதிகளிற் சில மதுரையம்பதி மகாவித்துவான் சபாபதி முதலியாரவர்க ளிடத்துள்ளன. இது நிற்க இத்துணைச் சிறப்பெய்தி விளங் கிய புலவர்பெருமானைத் தாம் மிகவும் நன்கு மதிப்பதற்கு அறிகுறியாக அவர்செய்த இப்பஞ்சதந்திரத்தினைச் சென் னைச் சர்வகலாசாலையார் பிரவேசபரீட்சைக்குப் பற்பல காலத்தும் பாடமா யேற்படுத்தி வருகின்றனர். இந்நூலாசிரி யர் தாரணவருடம் சித்திரைமாதம் (கி. பி. 1850-ஆம் வரு டம்) தமிழ்நாடுசெய்த தவக்குறைவினாலே அன்றி யெதனா லோ தேகவியோக மாயினர்.

இனிப் பிற்காலத்தினர் இப்பஞ்சதந்திரத்தினை யச்சிடு வான் புக்குத் தமக்குத் தோன்றியவாறெலாம் மாற்றிப் பெரிது பிடர்ப்பட்டனர். அது கண்ட யாம் இப்பதிப்பின் கண்ணே யன்னோரான் நேர்ந்த வழூஉக்களைப் போக்கி யே றக்குறையத் தாண்டவராயமுதலியார் தாமே ஆதியில் அச் சிடுவித்த பிரதிக்கிணங்கச் செய்திருக்கின்றன மென்பது தமிழ் வல்லோர் யாவருங் கவனிக்கற் பாற்று.

வி. கோ. சூ.

ம் ஞானவி[illegible]/

கடவுள் துணை.

பஞ்சதந்திரம்

வரலாறு.

கல்விப் பொருளினுஞ் செல்வப்பொருளினுங் குறைவில்லாதவர்களுக்கு உறைவிடமாயிருக்கின்ற பாடலிபுரமென்னுமொரு பட்டணமுண்டு. அந்தப்பட்டணத்திற் சகல சுகுணங்களோடுங் கூடியிருக்கின்ற சுதரிசனனென்னும் அரசனொருவனிருந்தான். அந்த அரசன் தன் பிள்ளைகள் படியாமல் மூடர்களா யிருந்ததைக்கண்டு, வெகு வியசனத்தோடாலோசிக்கத் தொடங்கினான்: "கல்வியுந் தர்மகுணமு மில்லாத பிள்ளைக ளிருந்தாலென்ன? பால் கொடாத வெருமைகளைக் காப்பாற்றினாற் பலனுண்டோ? வேதசாஸ்திர மறிந்தவனாய் ஒரேபிள்ளை யிருந்தாலு மதனாலே குடும்பமெல்லாஞ் சுகமடையும். இப்படிக்கில்லாத பிள்ளைகள் கர்ப்பத்திலே யழிந்தாலும், அழியாவிட்டாற் பிறந்தவுடனே இறந்தாலும் போவது நல்லது. குலத்திலயோக்கியனை பிள்ளை இருக்கலாகாது. ஜன்மாந்தர புண்ணியத்தினாலே இம்மை மறுமைக்குச் சுகங்கொடுக்கின்ற புத்திரன் பிறக்கின்றான்; பாபத்தினாற் குலத்தைக் கெடுக்கின்ற புத்திரன் பிறக்கின்றான். மேலும் 'இந்தப்பிள்ளையைப் பெற்றவர்க ளென்னதவஞ் செய்தார்களோ' என்று கண்டோர் சொல்லும்படி நடக்கின்றவனல்லனோ பிள்ளை" என்று அவன் தனக்குள்ளே யாலோசித்துப், பெருமூச்சுவிட்டு, பின்பு

சபையைப் பார்த்து, "இளமையுஞ் செல்வமும் இராஜசமும் அறிவில்லாமையு மாகிய இந்த நான்கனு ளொன்றொன்று தானே கேட்டுக்கெல்லாம் ஏதுவாகும். இந்த நான்கும் ஒருவனிடத்திலிருந்தால் அவனென்னபாடுபடான்? பிள்ளை யெண்ணிக்கைக்குப் பிறந்து, துன்மார்க்கர்களா யிருக்கிற என்பிள்ளைகளுக்கு நீதிசாஸ்திரோபதேசத்தினால் எந்த மகாபுருஷன் மறு ஜனனம் வரப்பண்ணுவான்?" என்ற அப்போது, சகல நீதிசாஸ்திரங்களிலும் வல்லவனாகிய சோம சன்மா வென்பவ னெழுந்து, "இவர்களுக்குச் சமானமான அறிவையுடையவர்கள் இவ்வுலகத்திலில்லையென்று சொல் லும்படி நான் ஆறுமாதத்திற் செய்யமாட்டுவேன்; அது வரைக்கும் நீர் நாளை எண்ணிக்கொண்டிரும்" என்று சபதம் பண்ணினான். அதைக்கேட்டு, நடுக்கடலில் திசைதப்பி மயங்கு மானுமிக்கொரு துறைதோற்றினாற்போல, அரசன் மிகவு மனமகிழ்ந்து, அவனுக்கு உபசாரஞ்செய்து, தன் பிள்ளைகளை யவன் வசத்திலொப்பித்தான். சோம சன்மா உடனே யந்தப்பிள்ளைகளைத் தன்வீட்டுக் கழைத் துக்கொண்டுபோய், கருப்பஞ் சாற்றைக் காய்ச்சி யொரு சர்க்கரைக்கட்டியாகத் திரட்டினாற்போல, நீதி சாஸ்திரங்க ளைப் பஞ்சதந்திரக்கதையாகக் கற்பித்து, இராஜ குமாரர் களுக்குச் சொல்லத்தொடங்கினான்.

சோமசன்மா,—"ஓ இராஜகுமாரர்களே! உங்களுக்கு வேடிக்கையாகச் சில கதைகள் சொல்லுகின்றேன்; கேளுங்கள்" என்று சொல்ல, அவர்கள் "அதையென்ன கதை?" என்றார்கள். அதற்கவன், "பஞ்சதந்திரக்கதை" என்று சொன்னான்; அவர்கள், "பஞ்சதந்திர மென்பதென்னை? தெரியச் சொல்லவேண்டும்" என்றார்கள். அதற்கவன், "அதை மித்

திரபேதம், சுகிர்ல்லாபம், சந்திவிக்கிரகம், அர்த்தநாசம் அல்லது லப்தஹானி, அசம்பிரேக்ஷியகாரித்துவம் என்னும் ஐந்துமாம். அவைகளுள் மித்திரபேதமாவது சிநேகத்தைக் கெடுத்துப் பகையுண்டாக்கல்; சுகிர்ல்லாபமாவது தங்களுக்குச் சமானமானவர்களோடு கூடிப் பகையில்லாமல் வாழ்ந்திருத்தல்; சந்திவிக்கிரகமாவது பகைவரை யடுத்து உறவு செய்து வெல்லுதல்; அர்த்தநாசமாவது தன்கையிற் கிடைத்த பொருளை யழித்தல்; அசம்பிரேக்ஷிய காரித்துவமாவது காரியத்தைத் தேறவிசாரியாமற் செய்தல்" என்று சொன்னான். இராஜகுமாரர்கள், "ஐயா! அந்தக்கதைகளை பெங்களுக்கு விளங்கச் சொல்லவேண்டும்" என்றார்கள். சோமசன்மா, உங்களுக்கு "மங்கள முண்டாகுக" என்று ஆசீர்வதித்துச் சொல்லத்தொடங்கினான்.

பஞ்ச தந்திரம்

முதலாவது

மித்திரபேதம்.

"ஒரு காட்டில் ஒரு சிங்கமும் எருதுங் கூடி மிகவு மொருமை யாக வாழ்ந்திருந்தன. அந்தச் சிநேகத்தைக், கோட்சொல்லுதலு முலோபகுணமு முள்ள வொரு நரி வந்து கெடுத்தது" என்று சோமசன்மா சொல்ல, இராஜகுமாரர்கள் "அஃதெப்படி?" என, அவன் சொல்லத் தொடங்கினான்:—

" தென்னாட்டிலே மகிழாருப்பிய மென்னும் பட்டணத்தில் வர்த்தமான னென்ற ஒரு வர்த்தகனிருந்தான். அவனுக்கு வெகு பணமிருந்தும் இன்னுஞ் சம்பாதிக்கவேண்டுமென்ற ஆசையினால் அவன் பின் வருகிறபடி யாலோசிக்கலானான்: " யாதொன்று சம்பாதிப்பது அருமையோ அதைச் சம்பாதிக்க வேண்டும்; சம்பாதித்ததைக் காப்பாற்றவேண்டும்; காப்பாற்றினதை விருத்திபண்ணவேண்டும்; விருத்தி பண்ணினதைத் தானு மனுபவித்து உத்தமபாத்திரத்திற் செலவழிக்கவேண்டும்; காப்பாற்றாத திரவியம் நாசமாகும்; விருத்தி பண்ணாதது குறையும்; தானுமனுபவித்துச் சற்பாத்திரத்திற் செலவழியாதது வீணாகுமெனச் சாஸ்திர மிருக்கின்றது. மேலு மின்பமும் புண்ணியமுங் கீர்த்தியும் மனிதருக்குள்ளே பெருமையு முறவும் நினைத்தது முடித்தலும் யாருக்குண்டு? திரள் திரளாகப் பணங் குவித்தவர்களுக்கேயுண்டு; இல்லாதவர்க ளுலகத்திலே நடைப்பிண மாவார்கள். ஆகையினாலே, மேன்மேலுஞ் சம்பாதிப்பதே யோக்கியம் " என்று ஆலோசித்துக்கொண்டு, தன்னிடத் திருந்த சரக்குகளை வண்டியிலேற்றி அதிற் சஞ்சீவகன், நந்தக

னென்னும் பெயரையுடைய இரண்டெருதுகளைப் பூட்டி நடத்திக்கொண்டு தேசாந்தரம் போனான். போகும்போது ஒருநாள் நெருங்கிய காட்டிலே மிகுந்த பாரத்தினாற் சஞ்சீவக னென்னும் எருது காலிடறி விழுந்து நொண்டியாயிற்று. அப்போது வர்த்தமானன் அந்த எருதுக்குப் பதிலாக வேறோரெருதை வண்டியிற் கட்டி ஓட்டிக்கொண்டு அவ்வெருதுக்கு ஓராளைக்காவல் வைத்துப் போனான். பிறகு அந்தச்சேவகன் வர்த்தகனிடத்துக்கு இரண்டொருநாட் கழித்துப்போய் "அந்த எருது செத்துப்போயிற்று" என்று பொய்சொன்னான். காட்டில் விடப்பட்ட எருதோ, ஆயுர்ப் பலத்தினாற் பிழைத்துப் புல்லு முதலாகிய மேய்ச்சலினால் மிகவும் பருத்துக் கொழுத்து ஒடிந்தகாலுங் கூடி அந்தக் காட்டிலே யதேச்சையாகத் திரிந்துகொண்டிருந்தது. அப்படி யிருக்கையில், இராஜ்ய பட்டாபிஷேகச் சடங்குகளில்லாமல் தன் வல்லமையினால் காட்டிற் சஞ்சரிக்கின்ற பிராணிகளுக் கெல்லாம் இராஜத்துவத்தை யடைந்திருக்கின்ற பிங்கலன் என்னும் சிங்கமானது தன் பராக்கிரமத்தாற் சம்பாதிக்கப்பட்ட இராஜ்யத்தைச் சுகமாக அனுபவித்துக் கொண்டிருந்து ஒருநாள் தாகமெடுத்துத் தண்ணீர் குடிக்க யமுனை யாற்றங் கரைக்குப்போகும்போது அங்கே சடிதியி லென்றைக்குங் கேட்டறியாத பேரிடி முழக்கம்போலும் அந்த இடம் முக்காரம்போட்ட தொனியைக்கேட்டுத் திடுக்கிட்டு "இஃதேது புதிதாயிருக்கின்றது!" என்று பயந்து நடுநடுங்கித் தண்ணீர் குடியாமற் சும்மா அசைவற நின்றுவிட்டது. அப்போ தவ்விடத்திலிருந்த சிங்கத்தினுடைய பிரதான மந்திரி குமாரர்களாகிய கரடகன், தமனகனென்ற நரிகளிரண்டும் இந்த அதிசயத்தை யறிந்து ஒன்றுக்கொன்று பேசத்தொடங்கின.

தமனகன் கரடகனைப்பார்த்து, "நம்முடைய அரசன்தண்ணீர்க்குப் போய்க் குடியாமலேன் சும்மாநிற்கின்றான்?" என, கரடகன் "அதை விசாரிப்பதனால் நமக்காவ தென்னை? இரை யகப்படுமோ? பெருமை யுண்டாகுமா? கினைற்றுத் தவளைக்கு நாட்டு வளப்பமேன்? சும்மாவிரு; தனக்குத்தகாத காரியத்தைச் செய்கிற

வன் கடாவிய ஆப்பைப் பிடுங்கின குரங்கு பட்ட பாடு படுவான்'' என்று சொல்ல, “அஃதென்னை?” என்று தமனகன் கேட்க, கரடகன் சொல்லுகின்றது :—

“மகததேசத்தி லிருக்கின்ற சுதத்தனென்போ னொருவன் கோயிற் றிருப்பணிக்காகக் கொண்டுவந் தறுக்கவிட்ட மரங்களில் வாட்காரன் பிளக்கும்படி முளைக ளடித்துவிட்டுப் போன வொரு மரத்தின்மேல் அந்தக்கோயில் நந்தவனத்திலிருக்கின்ற குரங்குகளி லொன்றுவந்து உட்கார்ந்தது. அஃது அம்மரப்பிளப்பிலடித்த முளை யை யசைத்துப் பிடுங்கினவுடனே பிளப்பு நெருங்கி யுடல் நசுங்கி யிறந்தது. ஆதலால் தனக்குத் தகாதகாரியத்தைச் செய்தால் யார்க்கும் பிராணச்சேதம் வரும்'' என்று சொல்லி “நேற்று நாந் தின்று மிகுந்திருக்கின்ற இரையைத் தின்று சுகமா யிருப்போம் வா'' என்று கரடகனழைத்த பின்பு, தமனகன் கரடகனைப் பார்த்து “சுவாமிகாரியஞ் செய்யாம லிரைதேடுவதையே பெரிதாக நினைக்கலாமோ? ஒருவன் மித்திரர்களுக்கு உபகாரமுஞ் சத்துருக்களுக்கு அபகாரமும் பண்ணவேண்டும்; அதற்கு இராஜசேவையே தக்கது; மேலும் இராஜாவை யடுத்திருக்கையில் வெகுஜனங்களுக்கு நன்மை செய்வதே இராஜசேவைக்குப் பிரயோசனமாம்; நன்மை செய்வதற்கு இடமில்லாவிட்டால் உயிர்பிழைத் திருப்பதனாலென்ன? காக பலியையுமெச்சிலையும் மலத்தையுந்தின்று காக்கையும் ஆயிரவருஷம் பிழைத்திருக்கின்றது; நாயும் பசையில்லாத வெள்ளெலும்பைக் கவ்விக் கடித்துக் கடித்துப் பல்லசைந்தும் பசிதீராமற் சந்தோஷத்தை யடைகின்றது; மேலும் அது யஜமானன் கையிலிருக்கின்ற ஒரு கவளமெச்சிலைப் பார்த்துக் காலில்விழுந்து, வயிற்றை யெக்கிக்கொண்டு எளியமுகத்தைக் காட்டி அவன் முகத்தைப் பார்த்து வாலைக் குழைத்துக் கெஞ்சிக் காத்துக் கிடந்து கொஞ்ச மெச்சிலை வாங்கித் தின்னும். யானையோ, பாகனைப் பாராமலும் அடுக்காமலும் அவன் வேண்டி வேண்டிவலியக் கொடுக்க, கருவத்தோடு வாங்கி நாயைக் காட்டிலு மாயிரம்பங்கு அதிகஞ் சாப்பிடும்; சிங்கம் பசியினாற் சங்கடப்படும்போது, நரி சமீபத்திலிருந்தாலும் அதை யசட்டைபண்ணி

யானையையே கொல்லும்; ஆதலாலுலகத்தில் யார் புகழோடு சீவிக்
கின்றார்களோ அவர்களே பாக்கியவான்கள்; சிறுகுழிகள் கொஞ்
சந் தண்ணீரால் நிறையும்; எலியின் சோங்கை சில தானியத்தால்
நிரம்பும்; அப்படிப்போல மூடன் இதாகிதந் தெரியாமற் கொஞ்
சத்திலே சீவனம் பண்ணுவான்; அவனுக்கும் பசுவுக்கு மென்ன
பேதம்? ஆகையால் இராஜ காரியம் பார்த்துப் பெருமையுடன்
சீவிப்பதே நல்லது” என்றிப்படிச் சொல்லக் கேட்டு, கரடகன்
தமனகனைப் பார்த்து “நல்லது. இந்த யோசனைகளுக்கும் இந்தப்
பேச்சுக்களுக்கும் இப்போது நாம் இராஜகாரியத்தி லிருக்கவில்லை,
இரை தேடுகிற காரியத்தி லிருக்கின்றோம்; அப்படி யிருக்க நீயேன்
வீணான மனோராச்சியம் பண்ணுகின்றாய்? மூடவன் கொம்புத்
தேனுக்கு ஆசைப்பட்டாற் கிட்டுமோ?” என் றிகழ்ந்து சொல்ல,
தமனகன் “நல்லதிருக்கட்டும், பிரதானியுங் காலத்தினால் அப்பிரதா
னியாகின்றான்; தன் முயற்சியினாலுங் குணத்தினாலும் லகுவானவ
னுஞ் சமர்த்தனாகின்றான்; யாரும் மேலான காரியத்தையே யாலோ
சிக்க வேண்டும்; அது கைகூடாவிடினும் பெருமை வரும்; புத்தி
சாலிகள் அருமையான காரியங்களைச் செய்வார்கள்; மலையுச்சியி
லொரு பெருங்கல்லை யேற்றுவதரிது; அங்கிருந்து அதைத் தள்
ளுவதெளிது; ஏரியினீரைக் கட்டுதலரிது; உடைத்த லெளிது; பெரு
மையுஞ் சிறுமையு மவராலேயே வரும்; ‘முயற்சியுடையா ரிகழ்ச்சி
யடையார்’ என்னும் பழமொழியையாயினுங் கேட்டிலையோ?” என்
றிப்படிச்சொல்ல, தமனகனைக் கரடகன் பார்த்து “நல்லது. நீபோய்ச்
சிங்கத்தினிடத்தில் எதைக்குறித்துப் பேசுவாய்?” என, தமனகன்
நம்முடைய சுவாமி மூடத்தனத்தாற் பயந்திருக்கின்றான்; அதை நீ
“யெப்படி யறிந்தாயென்று கேட்கின்றாயோ? சொன்னபொருளைப்
பட்சி மிருகங்களும் அறிந்துகொள்ளும்? சொல்லாம லறிகின்றவனே
பண்டிதன்; அப்படியறியாவிட்டாற் புத்தியாற் பிரயோசனமென்ன?
நானு மிங்கே யிருந்தபடியே யறிந்தேன்; இப்போது நானிதை
முன்னிட்டுக்கொண்டு போய்ச் சிங்கத்தைச் சிநேகம் பண்ணிக்
கொள்ளுகின்றேன்” என, தமனகனைப் பார்த்துக் கரடகன் “நம்மு

டைய அரசர்கள் மோந்துகொள்வதுபோற் கடிக்கின்றவர்கள் ; அரசரும் நெருப்பும் பாம்புஞ் சரி ; அப்படியானாற் பழக்க மில்லாமலிருக்கையி லவனை யெப்படிச் சிநேகம் பண்ணிக்கொள்வாய்?" என, அப்போது தமனகன் "நான் பேசுவதிற் சதுரனென் றறியாயோ ? சமர்த்தனுக் கெதுபெரிது ? பறக்கிறபறவைகளுக்கு எதுதூரம்? வித்துவானுக் கெது பரதேசம் ? பிரியமாகப் பேசுகிறவர்களுக் கெவன் சத்துரு ?" என, கரடகன் "அப்படியானாலும் இராஜாக்களிடத்திலகாலத்திற்போனா லவமானநேரிடும்" என்றது. அதற்குத் தமனகன் "அவமானம் வந்தாலும் எஜமானன் சமீபத்திலேயே யிருக்கவேண்டும் ; எவன் சமீபத்தி லிருக்கின்றானோ அவனுடனே அரசர்கள் காரியங்களைச் சொல்லுகின்றார்கள் ; கொடிகள் கிட்டவிருக்கிற மரத்திலேயே படரும் ; அரசர்களும் ஸ்திரீகளுந் தங்களைக் காத்து இங்கிதம் பேசுகின்றவர்க ளிடத்தில் மனமிரங்குவார்கள்" என, கரடகன் "நல்லது, நீ யவனிடத்தி லெப்படிப் பேசுவாய் ?" என்றது. தமனகன் "நல்லமழை பெய்திருக்கையி லெப்படி விதையினின்று முளைகள் புறப்படுமோ அப்படி இராஜாவின் கேள்விக்கேற்க என் வாக்கினின்றும் உத்தரம் புறப்படும் ; ஆயினும் ஒருவேளை பிரகஸ்பதியும் பேச்சில் தவறுவானானால் மற்றவர்களுக்குக் கேட்பானேன்? எப்படியுங் காலமறிந்து பேசினால் யாதோ ரவமானமும் வராது ; அரசர்கள் தங்கள் காரியம் எவனாலே யாகின்றதோ அவனிடத்தில் ஒருவேளை சிறிது குற்றம் நேரிட்டாலும் அதைப் பாராட்டாமல் அவனைப் பரிபாலித்து விருத்தியடையப் பண்ணுவார்கள்" என, கரடகன் "அரசர்கள் மலையைப்போல அனுசரிக்கிறதற்குக் கடினமாயிருக்கின்றார்கள்" என, தமனகன் "ஆயினு மவரவர்கள் சுபாவமறிந்துபேசிநமக்கிதம் பண்ணிக்கொள்ளவேண்டும்," என்று, கரடகனிடத்திற் செலவு பெற்றுக்கொண்டு, சிங்கத்தி னிடத்திற்குப் போய்த் தூரத்திலே நின்று தண்டம் பண்ணி அரசனுத்தரவினா லுட்கார்ந்தவுடனே, சிங்கம் "நெடுநாளா யுன்னைக்காணோம்" என, தமனகன் "இப்போது தேவரீ ரிடத்திற்கு வரத்தக்க காரியம் நேரிட்டதனால் தங்களுடைய திருவடியண்டை வரலானேன் ; இல்லாவிட்டால்

வந்ததற்குப் பிரயோசன மென்ன? இராஜாக்களுக் கொருவராலும் பலனில்லா விட்டாலு மொருவேளை சிறு துரும்பும் பல்லுக்குத்த வுதவும்; மற்றவைகளுக்குக் கேட்பானேன்? மேலு மொருவேளை யரசர்கள் குணவானை யசட்டை பண்ணித் தள்ளிவிட்டாலு மவன் சற்குணம் போய்விடுமோ? நெருப்பைத் தலைகீழாகப் பிடித்தாலு மதன் சுவாலை கீழாகுமோ? ஆதலா லரசர்கள் பரிசோதித்தறிந்து யோக்கியனை நல்ல காரியத்தில் வைத்தா லவன் இராஜாவுக்குக்கீர்த்தியைப் பெருகப் பண்ணுவான்; ஆகையா லென்னைத் தாங்கள் சிறு நரியென் றவமானம் பண்ணலாகாது; விட்டுணு வெடுத்திருந்த வராக வடிவை யுலகத்திற் பூசிக்க வில்லையோ? ரூபத்தைப் பாராமற் குணத்தைப் பார்க்கவேண்டும்; மலைபோலிருக்கின்ற தேர் சிறு சுள்ளாணியால் நிலைபெறும்; நானோ சுவாமி காரியத்திற் பற்றுள்ளவன்; கருவியுங் காலமு மறிந்து கரும முடிக்கு மாற்றலுள்ளவன்; இந்த வல்லமையெல்லா மமதுசார்பிருந்தாற் பிரகாசிக்கும்; வாள் முதலிய ஆயுதங்களும், வீணைமுதலிய வாத்தியங்களும், பூமியும், ஸ்திரீகளும், யோக்கியர்களும், சாஸ்திரங்களுமாகிய இவையெல்லாம் பரிபாலனம் பண்ணுகின்றவர்களாற் பிரகாசிக்கும்; அண்டையிற் சமர்த்தனில்லாத இராஜாவுக்கு அபகீர்த்தி வரும்" என்றிப்படிச்சொல்லக்கேட்டு, சிங்கம் "தமனகா! நீ யென்பிரதானி புத்திரனல்லையோ?" என, தமனகன் "சுவாமி" என்று வணங்கிச் சும்மா விருந்தது. சிங்கம் "ஏதாவது சொல்லவேண்டுவ திருந்தாற் சொல்" என, தமனகன் "தேவரீர் தண்ணீர்க்கு வந்து குடியாமல் மெய்ம் மறந்து சும்மா நிற்கின்றீர்களே" என, சிங்கம் "மெய்தான், நானிந்தக்காட்டில் வெகுநாட் சுகமாயிருந்தேன்; இப்போது இதை விட்டுவிடத் தக்கதாகச் சம்பவித்திருக்கின்றது; என்றைக்குங் கேளாத மேகமுழக்கம்போ லொரு தொனி இன்றைக்குக் கேட்டேன்; அதனாலேதான் அப்படி நின்றேன். அந்த முழக்கம்போலவே யிருக்குமன்றோ அந்தப்பிராணியும் ஆதலா லிதைக்குறித்து என்ன சொல்லுகின்றாயோ அவையே யெனக்குப் பிரமாணம்; இப்போது வழுக்கி விழுகையில் நீ ஊன்றுகோல் போற் கிடைத்தாய்" என, தமனகன் "சுவாமி, தொனியினாலே பயப்

படலாகாது; முன்னொரு நரி ஒரு தொனியைக்கேட்டுப் பயந்து
பிறகு நெருங்கிப் பார்த்தவுடனே யங்கே தோலுங் கோலு மிருக்கக்
கண்டது" என, சிங்கம் "அஃதென்னை ?" என்றுகேட்க, தமனகன்
"ஒருநரி பசியால் வருந்தி யிரைக்காகத் திரிந்து திரிந்து ஒருபோர்க்
களத்தில் வரும்போது அங்கே அசதியிலுண்டான ஒருபெரிய தொ
னியைக்கேட்டு மிகவும் பயந்து 'நான் செத்தே' னென்று திடுக்கிட்
டது. பிறகு சற்றே முன்னேபோனவுடன் அங்கொரு பெரிய பேரிகை
யைப்பார்த்து, அடுத்திருக்கின்ற மரத்தின்கிளை காற்றிலசைந்து அதி
லடிக்கத் தொனியுண்டாயிற்றென்று அறிந்துகொண்டு, அதனருகே
போய்ப்பார்த்து, அங்கே பேரிகையின் றோலுங்கோலுமே யல்லா
மல் வேறொன்று மில்லையெனத் தெளிந்து சந்தோஷ மடைந்தது;
ஆதலாற் சத்தத்தினாலேமாத்திரம் பயப்படலாகாது; தாங்கள் கட்
டளைகொடுத்தால் அந்தச்சத்தத்தின் மூலத்தையறிந்து வருவேன்"
என, சிங்கம் அப்படியே செலவுகொடுத்தது. பிறகு தமனகன் சஞ்
சீவகனென்னு மெருதினிடத்திற்போய்ப் பேசி அதைச் சிநேகம்பண்
ணிக்கொண்டு, சிங்கத்தண்டைவந்து தண்டம்பண்ணி முன்னே நின்
றது. சிங்கம் "நீ யந்தப் பிராணியை யின்னதென் றறிந்துவந்தாயா?"
என, தமனகன் "தங்கள் கட்டளைப்படியே போய்ப்பார்த்தேன்.
முன் தாங்கள் எப்படி நினைத்தீர்களோ அப்படியே புஷ்டியாயிருக்
கின்றான்; அவன் தங்க ணட்பை விரும்புகின்றான், கட்டளையானாற்
றிரும்பிப்போய்த் தரிசனத்துக் கிட்டுக்கொண்டுவருவேன்" என,
சிங்கம் "நல்லது அப்படியே யாகட்டும்" என, மறுபடி தமனகன்
எருதண்டைபோய் உபசாரத்தோடு அழைத்துவந்து இராஜாவைத்
தரிசனம்பண்ணுவித்தது. பிறகு பிங்களனுக்குஞ் சஞ்சீவகனுக்கும்
வெகு சிநேகமுண்டாய் இராஜாவுக்கு மற்ற யாரு மவசியமில்லாமல்
இப்படி வெகுகாலங் கழிந்தது. அப்போது பிரதானி புத்திரர்களா
கிய கரடக தமனக ரென்னு மிரண்டு நரிகளுக்கும் இரையொன்றும்
அகப்படாமையால் ஆலோசிக்கத் தொடங்கின. தமனகன் "நாம்
காட்டிலே தனித்திருந்த சிங்கத்துடனே எருதைச் சிநேகம் பண்ணு
வித்தது, யானையானது தன் மத்தகத்தைக் கொத்துவதற்கு அங்கு

சத்தைத் தானே யெடுத்துப் பாகர் கையிற் கொடுப்பதுபோ லாயிற்று ; மேலும் முன்னே ளாட்டுக்கடாச் சண்டையில் நரிசெத்ததும், ஆஷாடபூதியின் கூட்டுறவாற் சந்நியாசி பொருளிழந்ததும் எப்படியவரவர்கள் குற்றத்தினாலேயோ அப்படியே நமது குற்றத்தினாலேயே நமக்கிரைகிட்டாமற் போயிற்று” என, கரடகன் “அஃதெப்படி ? சொல்” என, தமனகன் சொல்லுகின்றது :—

“ ஒரு தேசத்தில் தேவசர்மா வென்னும் ஒருசந்நியாசி தான் பிச்சையெடுத்துச் சம்பாதித்த திரவியத்தைக் கந்தைக்குள் வைத்து யார்க்குந் தெரியாமல் தைத்துப் போர்த்துக்கொண்டு பின்னும் பிச்சையெடுத்துச் சாப்பிட்டுக்கொண்டு திரிய, அச்சூதையறிந்த ஆஷாடபூதியென்னு மொரு திருட்டுப் பிராமணன் ‘ இந்தக் கந்தையை மாத்திர மெப்படியாயினுந் திருடிக்கொண்டால், நாமெப்போதுந் திருட்டுவேலை செய்யவேண்டுவதில்லை ; நம்முடைய தாசிக்கு வெகுநாளைக்கு நடக்கு’ மென்று ஆலோசித்து ஒரு பிரமசாரியைப்போல அந்தச் சந்நியாசியினிடத்திற்போய் அவன்காலில் வீழ்ந்து ‘ அடியேனுக்கு ஞானோபதேசஞ்செய்து இந்த விஸ்தாரமாகிய சமுசாரசாகரத்தில் நான் இன்னு மலையாமற் சிறிது கடைக்கண்ணாற் பார்த்து என்னைக் கடைத்தேறப்பண்ணுக. ஓ மகானுபாவா ! ஓ பரதுக்கஞ் சகியாத பரமபுருஷா !’ என்றிப்படி யழுதகண்ணுஞ் சிந்திய மூக்குமாகக் கலங்கிநிற்க, அதைப் பாசாங்கென் றறியாத அந்தச் சந்நியாசி இவன்றலைமேற் கையைவைத்துப் ‘பயப்படாதே’ என்றான். அதுமுதலாக ஆஷாடபூதி வெகு பயபத்தியுடனே அவன் காலாவிட்டவேலையைக் கையாற்செய்துகொண்டு, கந்தைக்குச் சமயம்பார்த்துக்கொண்டிருக்குநாளில் ஒருநாள் ஒரு பிராமணன்வீட்டி லிருவரும் விலாப்புறம் வீங்கப் பிட்சை பண்ணிக்கொண்டு வெகுதூரம் வந்தபிறகு ஆஷாடபூதி ஒருவருமறியாமல் ஒரு துரும்பை யெடுத்துத் தன்றலைமேலே வைத்துக்கொண்டு அந்தத்துரும்பைக் குருவுக்கெடுத்துக்காட்டி, ‘ஐயோ ! நமக்குப் பிட்சைகொடுத்த பிராமணன் வீட்டுத் துரும்பு என்றலையி லொட்டி வந்துவிட்டதே, அன்னமிட்ட வீட்டிற் கன்னமிடலாமோ ? ‘ உப்பிட்டவரை யுள்ளளவுநினை’ என்று

பழமொழியுமிருக்கின்றதன்றோ?’ என, வாய்பதற நடுநடுங்கி “இதை அந்த அன்னதாதா வீட்டிற் போட்டுவிட்டு இதோ நொடியளவில் வருவேன்” என்று குருக்கள் பார்க்கும்படி பரபரப்பாகச் சிறிது தூரங் காலடி பிட்டத்திற் படும்படி யோடி, ஒருசெடிமறைவி லுட்கார்ந்திருந்துவிட்டு, பின்பு இளைக்கவிளைக்கவோடிவந்து ஆசாரியன் காலில் விழுந்தெழுந்து, “சுவாமி! உம்முடைய அநுக்கிரகத்தினால் இந்தப் பாவத்திற்குத் தப்பினேன்” என்றான். இதைப்பார்த்து அந்த ஏழைச் சந்நியாசி ஆச்சரியப்பட்டு, இவன் பரசொத்துக் காசைப்படாத பரமாத்துமா வென்று நம்பித் தன்னுயிர்க்குச் சமானமாக நினைத்திருந்த கந்தையைச் சிஷன் கையிற்கொடுத்து, ஒரு குளக்கரையிலிருக்கச்சொல்லித் தான் சலபாதைக்குச் சென்று காலலம்பப்போனவிடத்தில் இரண்டு ஆட்டுக் கடாக்க ளொன்றோடொன்றுமுட்டிச் சண்டைசெய்ய, இவைகளின் மண்டையிலிருந்து ஒழுகுமுதிரத்தை யுண்ணலாமென்று ஒருநரிபோய் இரண்டுக்கும் நடுவி லகப்பட்டிறந்தது. அவன் அந்த அநர்த்தத்தைப் பார்த்துக்கொண்டு சிறிதுநேரமிருந்தான். அப்போ தந்தச் சிஷன் ‘இதுதான் நல்ல சமயம்; இதுவிட்டா லினிக்கிட்டுமா? காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ள வேண்டு’ மென்று நினைத்துக் கந்தையைச் சுருட்டிக்கொண்டு ஓடிப்போனான். உடனே சந்நியாசி வந்துபார்த்துச் சிஷனைக் காணாமல், ஓகோ! நம்மை யாஷாடபூதி யேய்த்தானே, நாம் மோசம்போனோமே’ யென்று திகிற்பட்டு, உப்புக்கண்டம் பறிகொடுத்த பார்ப்பனியைப்போல் ஒருவருடனுஞ்சொல்லாம லிருந்துவிட்டான்” என, இதைக்கேட்டுக் கரடகன் இதற்கு “நான் செய்யத்தக்கதென்னை?” என்று கேட்கத் தமனகன் “யாதொன்று போயிற்றோ அதை மறுபடி சேகரிக்கவேண்டும், எதைச் சம்பாதிக்க வில்லையோ அதைச் சம்பாதிக்க வேண்டும், எதிராகவரும் விக்கினங்களைத் தடுக்கவேண்டும், என் றிப்படி யாலோசித்துப் பண்ணுகின்றவ னல்லனோ மந்திரி? இப்போது பிங்கள சஞ்சீவகர்களுக்குள்ள சிநேகத்தால் நமக்கு எல்லாச் சங்கடங்களு நேரிட்டன; இவர்களுடைய நட்பைப் பிரித்தாற்றான் நமக்கு இவ்வளவேனும் அன்னங்கிடைக்கும்” என்று

சொல்ல, கரடகன் "அந்தப் பிங்கள சஞ்சீவகர்க ளுறவைக் கெடுக்க
யாராலாகும் ? மணியினின்று மொளி பிரிக்கப்படுமோ ? இது முடி
யாத காரியமன்றோ ?" என, தமனகன் "என்ன சொல்லுகின்றாய் ?
உபாயத்தா லாவது பராக்கிரமத்தாலாகுமோ ? ஒரு காகஞ் சொர்ண
மாலையினால் ஒரு கிருஷ்ண சர்ப்பத்தைக் கொன்ற தறியாயோ ?"
என, கரடகன் "அஃதெப்படி ?" என்று ஆவலோடு கேட்கத் தமன
கன் சொல்லத் தொடங்கிற்று :—

"ஒரு பெரிய மரத்திற் கூடு கட்டிக்கொண்டு ஆணும்பெண்ணு
மாகிய இரண்டு காக்கைகள் நெடுநாளாய் வாழ்ந்தன. அந்த மரப்
பொந்தில் ஒருநாகம் வந்துசேர்ந்து அந்தக்காக்கை யிடும் முட்டை
களை யெல்லாங் குடிக்கத் தலைப்பட்டது. இதற்கென்ன செய்யலா
மென்று காகம் மிகவும் வியசனப்பட்டுத் தனக்குச் சிநேகமாகிய
ஒரு நரியினிடத்திற் போய் நடந்த சங்கதிகளைச்சொல்லி, "இப்போ
தாகிலு முட்டைகளைக் காப்பாற்றுகிறதற் கென்ன செய்யலாம் ?"
என, நரி 'ஒரு நண்டானது வெகு நண்டாசையைக் காட்டிக்
கொக்கைக் கொன்றாற்போல் அப்பாம்பினை ஒருபாயத்தாற் கொல்ல
வேண்டும்' என, காகம் "நண்டு கொக்கை எப்படிக் கொன்றது ?
சொல்லுமையா" என, நரி சொல்லுகின்றது:—

"மீன்களையே மிகுதியுந் தின்றுவளர்ந்த வொரு கிழக்கொக்கா
னது குளக்கரையில் வந்து வியசனமாய் நின்றுகொண்டிருந்தது.
அப்போது அதிலிருந்த மீன்கள் கொக்கைப்பார்த்து 'நீ உன்னாகா
ரத்தை விட்டுச் சும்மா இருப்பானேன்? சொல்' என, கொக்கு
"நான் மீன் றின்பது மெய்தான், ஆயினு மின்றைக்கிங்கே செம்ப
டவன்வந்து எல்லாமீன்களையும் பிடிக்க விருக்கின்றதனால் என்னு
டைய இரைகளெல்லாம் நிர்மூலமாய்ப் போகுமே யென்றேங்கிச்
சும்மா இருக்கிறேன்' என, இதைக்கேட்டு மீன்களெல்லாம் கூட்
டங்கூடி 'எவன் நமக்கபாயஞ்சொன்னானோ அவனே யுபாயஞ் சொல்
லுவான்' என்றாலோசித்துப் பிறகு கொக்கைப்பார்த்து, 'நீயே யெங்
களை யிப்போ திரக்ஷி' என, கொக்கு 'நான் செம்படவனோடு சண்
டைபண்ணச் சமர்த்தனல்லேன் ; மேலும் நான் கிழவன் ; உங்களை

வேறோரிடத்திற்குக் கொண்டுபோவேன்; அதனாலெனக்கு மிந்தத் தள்ளாமையான காலத்திற் பரோபகாரி யென்னும் பெயரும் வரும்; நீங்களும் வெகுகாலம் பிழைத்திருப்பீர்கள்' என, அப்போதந்தப் பேதைமையான மீன்களெல்லாம் பிராணனைக் காப்பாற்றும்பொருட்டு அதன் பேச்சை நம்பி 'நல்லது. அப்படியே கொண்டுபோகவேண்டும்' எனக் கெஞ்ச, அந்த வஞ்சனையுள்ள கொக்கு நடைக்கொவ்வொன்றாகக் குளத்திலிருந்த மீன்களை யெல்லாம் மூக்கினாற் கவ்விக்கொண்டுபோய்ச் சில மீன்களைத்தின்று மற்றவைகளை யொருபெரிய பாறையின்மேலுலரவைத்தது. பிறகு அந்தக்குளத்திலிருந்த ஒரு நண்டு இந்தக் கொக்கைப்பார்த்து 'ஓ சீவகாருணியனே! நான் மாத்திரந்தானோ பாபி? அந்த மீன்களை யிரக்ஷித்ததுபோல் என்னையு மிரக்ஷிக்கலாகாதோ? என்னையு மவ்விடத்திற்குக் கொண்டுபோகவேண்டும்" என வேண்டிக்கொள்ள, கொக்கு 'வருங்காலத்தி லெதுவும் வலியவரு மென் றுள்ளுக்குள்ளே சந்தோஷித்து, அப்படியே நண்டையுங் கவ்விக்கொண்டு போகும்போது, வழியில் மீன்கள் செத்துக் கிடப்பதையும் மீன் முட்கள் சிந்திக் கிடப்பதையும் மீன்கள் பாறையின்மே லுலருவதையும் நண்டு பார்த்து, 'ஐயோ! பல மீன்களையும் கொன்று இந்தக்கொக்கு நம்மையுங் கொல்ல வந்தது!; நம்மை இது கொல்வதற்கு முன்னரே நாமிதனைக் கொல்வோம்" என்று ஒருபாயம் நினைத்துக் கொக்கைப்பார்த்து 'என்னை நீ வருத்தப்பட்டு எடுத்துக்கொண்டுவந்தாய்; அங்கே யெனது பரிவாரங்களிருக்கின்றன; ஆகையா லவ்விடத்திற்கே யென்னை நீ மறுபடியுங் கொண்டுபோனா லவைகளையுங் காண்பிப்பேன்' என அதைக்கேட்டுக் கொக்கு பேராசைப்பட்டுத் திரும்பி யந்தக் குளத்திற்கு நேரே வருகையில், நண்டு கொடுக்கினால் அந்தச் சர்வசீவதயாபரக் கொக்கின் கழுத்தை யிரண்டு துண்டாக நறுக்கிக் குளத்தில் வீழ்ந்து சுகமாய் வாழ்ந்தது. ஆகையாலந்தக் கொக்கைப் போலப் பாம்பையுங் கொல்லவேண்டும்" என, காகம் "அப்படிப் பாம்பைக்கொல்ல நான் செய்யவேண்டிய வுபாயமென்னை?" என்று கேட்க, நரி இப்பட்டணத் திராஜகுமாரி குளிக்கின்றமஞ்சனச்சாலைக்

குப்போ; அவள் ஸ்நானம் பண்ணும்போது ஆபரணங்களைக் கழற்றி வைத்திருப்பாள்; அந்த ஆபரணங்களி லொன்றை யெடுத்துச் சனங்கள் பார்க்கும்படி கொண்டுவந்து அந்த மரப்பொந்திற் போடு" என்றுசொல்ல, காக்கையு மப்படியே செய்ய, அந்த இராஜனுடைய வேலைக்காரர் போய் அந்த மரத்தின் பொந்தைப் பிளக்க, நாகஞ் சீறி வந்தது; வரவே அதை அவர்கள் இரண்டு துண்டாக நறுக்கி யெறிந்தார்கள்; இப்படிக் காகத்தின் காரியம் நிறைவேறிற்று; ஆகையா லெல்லா முபாயத்தினாற் கைவசப்படும்; எவன் புத்திமானோ அவன் பலவான். எவனுக்குப் புத்தியில்லையோ அவனுக்குப் பலமெங்கே? பூர்வம் புத்தி பலத்தினாலொரு முயல் சிங்கத்தைக் கொன்றது" என "அஃதெப்படி?" என்று கரடகன் கேட்கத் தமனகன் சொல்லுகின்றது:—

ஒரு நெருங்கிய காட்டில் மதோன்மத்த னென்னுஞ் சிங்கமானது அக்காட்டின் கண்ணுள்ள மிருகங்களைக் கொன்றுதின்று கொழுத்து வெறிகொண்டு திரியுநாளில் மிருகங்களெல்லாமொன்றாகத் திரண்டு அதனண்டை போய் "ஓ மிருகேந்திரா! உமது காட்டிலிருக்கு மிருகங்களையெல்லா மிப்படி இனி நீர் கொன்றால் மிருகங்கள் நிர்மூலமாய்ப்போம்; ஆதலால் நாங்கள் தினமோவ்வொன்றுஉமக்கிரை கொடுத்துக்கொண்டு வருகின்றோம்; அதை நீர் பக்ஷித்துக் கொண்டிருக்கலாம்" என்று பிரார்த்திக்க, சிங்கம் அதற்கிணங்கி 'அப்படியே யாகட்டு', மெனச் சத்தியஞ் செய்து கொடுத்தது. இவ்வாறு மிருகங்கள் ஒவ்வொன்றாகச் சிங்கத்திற் கிரையாய்க் கொண்டு வருநாளில், ஒருநாள் ஒரு கிழமுயலினது முறைவந்தது. அப்போது விலங்குகளெல்லாங் கூடி 'இன்றைக்கு உன்முறை போ' என்றுசொல்ல, முயலானது இன்றைக்கு நமக்கு மரணம் வந்தபடியினால் இதற்கோ ருபாயம் யோசிக்கவேண்டும்; புத்திவானுக்கு எதுதான் கைகூடாது? ஆகையால் நாமிப்போது உபாயத்தாற் சிங்கத்தைக் கொல்வோமென்று ஆலோசித்து, மெள்ள மெள்ள நடந்து அச்சிங்கத்தின் பசிவேளை தப்பிவரச் சிங்கம் அதைப்பார்த்து, "முயலே! யானையானாலு மென்னுடைய பசிவேளை

தப்பி வருவதில்லையே, நீயெவ்வளவு பிராணி? இப்படித் தாமசமாய் வரலாமா?" என்று மிகுந்த கோபத்தோடு கையைத் தரையிலே மோதிக்கேட்க, முயல் 'ஐயனே! இஃது எனது குற்றமன்று; உன்னுடைய பசிவேளைக்கே வந்தேன்; வந்தவழியிலொரு பொல்லாத சிங்கத்தைக் கண்டு பயந்தொளித்திருந்து அந்தச்சிங்கம் போனபின்பு வந்தேன்" என்று சொல்லச் சிங்கம் "என்னையல்லாமல் இந்தக் காட்டில் வேறே சிங்கம் நீ பார்த்தாயா? காட்டு வா" என்றழைக்க அழைத்துக் கொண்டுபோய்ச் சேறு நீரு மிகுந்த வொரு பாழ்ங்கிணற்றைக்காட்டி "இதிலே யிருக்கின்றது" என்னச் சிங்கம் முயலின் பேச்சை நம்பிக் கிணற்றை யெட்டிப்பார்த்து, அதிற்றோன்றின தன்னிழலைக்கண்டு அந்தச்சிங்க மிங்கே யிருக்கிறதென்று நினைத்து அதைக் கொல்லவேண்டுமென்றும் கோபத்தோடு அதிற்பாய்ந்து சேற்றிலழுந்தி யிறந்தது. ஆகையால் எவன் புத்திமானோ அவன் பலவானென்றுனக்குச் சொன்னேன்" என, கரடகன் "சிங்கத்தினிடத்திற்குச்சுகமாய்ப்போ, உனக்கு மங்களமுண்டாகட்டும்" எனப் பிறகு தமனகன் அந்தச் சிங்கந் தனித்திருக்கின்ற சமயம்பார்த்துப் போய்த் தண்டம்பண்ணி, "சுவாமி! உமக்கின்றைக்கொரு பொல்லாங்கு நேரிட்டது, அதை நானறிந்து கட்டளையில்லாமல் விண்ணப்பம் பண்ணிக் கொள்ளலானேன்" என, சிங்கம் "அஃதென்னை? சொல்" என, தமனகன் "உம்முடைய மித்திரனாகியசஞ்சீவகன் உம்மிடத்தில் விசுவாசங் காண்பித்து உம்முடைய இராச்சியத்தைப் பிடுங்கிக்கொள்ள யோசித்திருக்கின்றான்; இதை நீர் பொய்யென்று நினைத்துக் கோபித்தாலும் அல்லது தண்டித்தாலும் இராஜனுக்கொருதுன்பம் வரும்போது தன் நலத்தைப்பாராமல் இராஜனுக்கு நல்ல உபாயங்களைப் போதித்துச் செய்யத்தக்க காரியங்களைச் செய்வித்தல் மந்திரிகளுக்கு நீதித்தொழிலாகையால் உமக்கிதைத் தெரிவித்தேன்" என, பிங்களன் இதைக்கேட்டு ஆச்சரியப்பட்டுச் சும்மா விருந்தது. பின்னுந் தமனகன் "நீர் அவனை முக்கியப் பிரதானியாக்கினீர்; அப்படியேயிருக்கட்டும்; எனக்கென்ன? இராஜாவும் பிரதானியுஞ் சமானமா யிருந்தால், இராஜலட்சுமி அவ்விருவரிலொருவ

னைக் கைவிடுவான்; மேலும் எப்போது இராஜா ஒருவனையே பிரதானியாக்குகின்றானோ அப்போது அந்தப் பிரதானிக்குக் கர்வமுண்டாகின்றது; அவன் சுதந்தரனாய் இராச்சியவாசையால் இராஜாவைக்கொல்ல இச்சிக்கின்றான்; ஆகையா லிப்படிப்பட்ட மந்திரியை வேரோடு களையவேண்டும்; இல்லாவிடின் அவனால் தீங்குநேரிடும். இது தங்களுக்குச் சொல்லவேண்டுமோ? தாங்கள் எல்லாமறிந்திருக்கின்றீர்கள்; உலகத்திற் செல்வத்தை விரும்பாதவன் அரியன்" என்றிப்படியெல்லாஞ் சொல்லக்கேட்டுச் சிங்கம் நகைத்து "எனக்குச் சஞ்சீவகனிடத்தில் இருக்கின்ற சிநேகம் போகாது; மித்திரர்கள் என்ன அநியாயம் பண்ணினாலும் அவற்றை நாம் பிரியமாகவே நினைக்கவேண்டும்" எனத் தமனகன் "இதுதான் புத்திக்குத் தோஷம்; இதனா லுமக்கபாயம் வரும்; சாதுக்களது புத்தியைக் கேளாமல் துட்டர் புத்தியைக் கேட்கின்றவ னெவனோ அவன் மருந்துதின்னாத ரோகியைப்போல விபத்தை யடைவான்; காதுக்கினிமையாயும் இதம்பண்ணுவதாயு மிருக்கின்ற வசனந் துர்லபம்; காதகனுடைய வசனஞ் செவிக்கினிமையாயினும் அதைக் கேட்கலாகாது" எனச் சிங்கம் "நான் அபயங்கொடுத் திரட்சித்தவன் எனக்குத் துரோகம் பண்ணுவானோ? என்னபேச்சுப் பேசுகின்றாய்? போ" என, மறுபடியுந் தமனகன் "துஷ்டர்குணம் மாறுமோ? நாயின் வாலைக் குணக்கெடுக்கலாமோ? எட்டிமரத்தை அமுதம்வார்த்து வளர்த்தாலும் அதற்குத் தித்திப்புண்டாகுமோ? எப்படியும் பிறர்க்கிதம் பண்ணுவது சாதுவுக்கு முக்கியதருமம்; ஆகையால் தாங்கள் கேளாமலிருந்தும் இந்த விருத்தாந்தத்தைச் சொன்னேன்; இனிமே லென்மேற் குற்றமில்லை; ஒருவேளை இராஜா பாமரர்களுடைய புத்தியைக் கேட்டுச் சங்கடப்படும்போது காரியக்காரர்மேற் குற்றஞ் சுமத்துவதுண்டு ஆதலின் நான் சொன்னேன்" என்றிப்படிச் சொல்லிச் சும்மா விருந்தது. அதற்குச் சிங்கம், "இதை நான் சஞ்சீவகனுக்குச் சொல்லவேண்டும்" எனத் தமனகன் "அவனுக்கிதைச்சொன்னா லவன் சாக்கிரதைப்பட்டு வேறோ ருபாயத்தினாற் பொல்லாங்கு தேடுவான்; ஆகையால் இதை யவனுடன் சொல்லா

திருப்பதே யோக்கியம்; இராஜாவின் மந்திராலோசனை யிரகசிய மாகவே யிருக்கவேண்டும்" என, இதைக்கேட்டு மறுபடியுஞ் சிங்கம் "அந்தச் சஞ்சீவகன் விரோதப்பட்டு என்ன செய்யமாட்டுவான்? அவன் சாமர்த்திய மெவ்வளவு?" என்று சொல்ல, நரி "நாமவனை யறியமாட்டோம்; அவனது பராக்கிரமமுஞ் சுபாவமு நமக்கெப்படித் தெரியும்? ஒருவன் குணத்தை யறியாம லவனைச் சேர்க்கலாகாது. சேர்த்தா லொரு சீலைப்பேன் மூட்டைப் பூச்சியைச் சேர்த்துத் தான் நாசமடைந்ததுபோ லாகும்" எனச் சிங்கம் "அஃதெப்படி? சொல்" எனத் தமனகன் "ஓர் இராஜாவின் பஞ்சணையில் மந்தவிசர்ப்பிணி யென்னுமொரு சீலைப்பேன் நெடுநாளாக வாசம்பண்ணிக்கொண் டிருக்கையில் ஒருநாள் அவன் வீட்டுக்கு டிண்டிபனென்னு மூட்டைப் பூச்சி வந்தது; அதைப் பார்த்துச் சீலைப்பேன் 'அப்பா! நீ பொல்லாதவன்; முட்களைப்போன்ற பற்களினாலே தூங்குவதற்கு முன்னரே துடுக்காய்க் கடிப்பாய்; நீ சமயந் தெரியாதவனாதலால் இராஜ சயனத்திலிருக்கத் தக்கவனல்லை; இவ்விடம்விட்டோடிப் போ' என்று கடுகடுத்துச் சொல்ல, மூட்டை 'நானப்படிச் செய்ய வில்லை; நீ சொன்னபடியே கேட்பேன்' என்று காலில் விழுந்து பிரார்த்திக்கச் சீலைப்பேன் மனமிரங்கி 'நல்லது நீ வெடுக்கென்று கடியாமல் நித்திரைசெய்யுஞ் சமயம் பார்த்து மெத்தெனக் கடித்துக் கொஞ்சரத்தங் குடித்திரு' என்று சொல்ல, அப்போ தந்த மூட்டைப் பூச்சி 'நல்லது' என்றிருந்து பிறகு இராஜா விழித்திருக்கும்போதே சுறுக்கென்று கடிக்க, இராஜன் திடுக்கென் றெழுந்திருந்து 'என்னை கடித்தது' என்று சோதனைக்காரருடன் சொல்ல, அவர்கள் விளக்கைக்கொண்டு சோதிக்க, மூட்டை கட்டிற்சந்தி லொளித்துக்கொண்டது; அதற் கிடங்கொடுத்த சீலைப்பே னகப்பட்டது; அவர்களதனை 'நீயன்றோ வெங்களிராஜனைக் கடித்தாய்?' என்று நசுக்கிக் கொன்றார்கள். ஐயோ! அது வகைதெரியாம லிறந்தது. ஆகையா லொருவன் குணத்தை யறிவதற்கு முன்னரே யவனுடன் சகவாசம் பண்ணலாகாது" எனச் சிங்கங்கேட்டு, "அந்தச் சஞ்சீவகனுடைய துஷ்டசுபாவ மின்னபடியென் றெனக்குத் தெரிந்தா லப்போது நீசம்"

என்று சொல்லத் தமனகன் "அந்த எருது தங்களைக்கொல்ல நினைத்துத் தன் கொம்புகளை முன்னிட்டுக் கொண்டு தங்கள் சந்நிதியில் வரும்போது அது தங்களுக்குத் தெரியவரும்" என்று சொல்லி விட்டு, எருதினிடத்திற்குப்போய் அங்கே தன்மனத்தில் மிகவும் வியசனமிருப்பதாகத் தோற்றுவித்தது. அப்போது சஞ்சீவகன் "மித்திரா! சுகமா?" என்று கேட்கத் தமனகன் "சேவகனுக்குச் சுகமெங்கேயிருந்து வரும்? சம்பத்தும் விபத்துங் கூடவேயிருக்கின்றன; இராஜாவுக்குப் பிரியமா யாரிருக்கின்றார்கள்? யாசகன் சம்மானத்தை யடைவானோ? இந்தக்காலமேது? தனக்கு மித்திரன் யார்? தன் வலி யெவ்வள வென் றெப்போதும் விசாரித்துக்கொண்டிருக்க வேண்டும்" என, இதைக்கேட்டுச் சஞ்சீவகன் "இப்படி யென்சொல்லுகின்றாய்?" எனத் தமனகன் "இராஜகாரியத்தி லுண்டாகிய வஞ்சகத்தை மற்றொருவரோடு சொல்லலாமோ? இராஜாவறிந்தாற் கொல்லுவன்; ஆனாலும் நீ யென் னம்பிக்கையாலே சிங்கத்தோடு சிநேகம் பண்ணினதனா லுனக்குச் சொல்லுகின்றேன்; அந்தச்சிங்க முன்மேல் மிகவுங் கோபங்கொண்டு உன்னைக் கொன்று தன்னுடைய சேனைக்கெல்லாம் நல்ல விருந்திட நினைத்திருக்கின்றது" என்றுசொல்ல, அதைக் கேட்டவுடனே சஞ்சீவகன் வருத்தத்தோடு மாலோசித்துக் கொண்டிருந்தது. தமனகன், "வேறே யாலோசனை யென்ன? யாதொன்று சம்பவித்ததோ அதற்குத் தக்கதாக நடக்கவேண்டும்" எனச் சஞ்சீவகன் "நீ சொன்னதெல்லாஞ் சரிதான்; உலகத்திலு மப்படியே யிருக்கின்றன; சாதாரணமாய் ஸ்திரீகள் துர்ச்சனர்களுக்கு வசமாயிருக்கின்றார்கள், இராஜாக்கள் துஷ்டர்களைப் பரிபாலிக்கின்றார்கள்; துஷ்டனுடனே மிகவுஞ் சிநேகித்தா லவன் விபரீதமாக நினைக்கின்றான்; குருடனுக்குக் கண்ணாடியைக் காண்பித்தாலுஞ் செவிடன்காதி லுபதேசித்தாலு மவர்கள் விபரீதமாகவே நினைப்பார்கள்; துஷ்டனுமப்படியே விபரீதமாக நினைக்கின்றான்; எப்படிச் சந்தனமரம் பாம்போடு கூடியிருக்குமோ, எவ்வாறு தாழை முட்களோடு கூடியிருக்குமோ, அப்படியே பெரும்பாலும் இராஜாக்கள் துஷ்டர்களாற் சூழப்பட்டிருக்கின்றார்

கள், ஆனையா லிப்படிப்பட்ட பொல்லாங்கு நமக்கு நேரிட்டது” என, இதைக்கேட்டுத் தமனகன், “அந்தச் சிங்கத்துக்கு வாய்ப் பேச்சுமாத்திரந் தித்திப்பேயல்லாமல் மனம் மிகவுங் கடோரந்தான்; பூர்வம் பிரமா கடலைக்கடப்பதற்குக் கப்பலை யுண்டாக்கினான்; இருட்டைப்போக்கடிக்க விளக்கைச் சிருஷ்டித்தான்; யானையையடக்க அங்குசத்தை நிருமித்தான்; துஷ்டர்களுடைய மனமடங்கும்படி யாதொன்றுஞ் செய்யாமற்போனான்” என, இவையெல்லாங் கேட்டுச் சஞ்சீவகன் பெருமூச்செறிந்து, “பெரிய பொல்லாங்கு நேரிட்டது; இதைத் தப்பித்துக்கொள்ள வெனக்குச் சாமர்த்தியமில்லை; எமனுடையவாயி லகப்பட்டவ னெப்படித் தப்பிப்போவான்? எப்படி யொரு குற்றமு மில்லாத வொட்டையைக் காக முதலானவை கூடிக் கொலைசெய்தனவோ அப்படி வஞ்சனைபண்ணுகின்ற துஷ்டர்க ளொருவனிடத்திற் குற்றமில்லாதிருப்பவும் அவனைக் கொலை செய்கின்றார்கள்” என, “அஃதெப்படி? சொல்லவேண்டும்” என்று தமனகன்கேட்கச் சஞ்சீவகன் சொல்லுகின்றது:—

“ஒரு காட்டில் மதோற்கடனென்னு மொருசிங்கம் நரியையும் புலியையுங் காக்கையையுந் தனக்கு மந்திரிகளாக வைத்துக் கொண்டு அரசாண்டுவந்தகாலத்தில் ஒருநாள் அந்தக்காட்டி லொட்டக மொன்று வழிதப்பிவரக்கண்டு, மந்திரியாகிய காக்கை ‘நீயார்?’ என்று கேட்க, அந்த வொட்டகம் ‘நான் வழிதப்பி வந்துவிட்டேன்’ என்று சொல்லிற்று. காக்கை அதனை யிட்டுக்கொண்டுபோய்ச் சிங்கத்தி னிடத்தில் விட்டு, நடந்த காரியத்தைச் சொல்ல, அதைச் சிங்கங்கேட்டு ஒட்டகத்தைப் பார்த்துப் ‘பயப்படாதே, நம்முடைய மந்திரிகளுடனே நீயுமொரு மந்திரியா யிரு’ என்று அதற்கு அபயங் கொடுத்து, மந்தாரகனென்று பெயரிட்டு, அதைத் தன்னிடத்தில் வைத்துக்கொண்டது. இப்படி வெகுகாலஞ் செல்லுகையில் ஒருநாட் சிங்கத்துக்குச் சரீரம் அசௌக்கியமா யிருந்தபடியினால் அது தன் மூன்றுமந்திரிகளையு மழைப்பித்து ‘இன்றைக் கெம்மா லிரை சம்பாதிக்கக் கூடாது; நீங்கள் போயெனக்கு ஏதாவதிரை கொண்டுவர வேண்டும்; பிறகு நான் தின்று மிகுந்ததை நீங்கள்

தின்னலாம்' என, இம்மூன்றுஞ் சிங்கத்தின் கட்டளைப்படி யந்தக் காட்டிற்போ யிரைதேடிப்பார்த்தும் அகப்படாமையால் அப்போது தங்களோடு கூடவிருந்த மந்தானகனைத் தூரத்திற் போம்படி யொரு வேலையிட்டுக் காகம் மற்றை யிருவரையும் பார்த்து 'இன்றைக்கு நாம் மந்தானகனைக் கொல்லுவோம்; புல்லுந் தழையுந் தின்னுகிறவனால் நமக்குப் பிரயோசன மென்னை?' என, மற்ற இரண்டுஞ் 'சரிதான், அவனுக்கு நம்முடைய இராஜா அபயங் கொடுத்திருக்கின்றதனா லவனை நாமெப்படிக் கொல்லலாம்? கூடாது' எனக் காகம் 'நாமின்றைக்குச் சிங்கத்தின்கையால் தப்பாமல் மரணமடைவோம், பசியெடுத்தாற் றாயும் பிள்ளையை விட்டு விடுகின்றாள், பாம்புந் தானிட்ட முட்டைகளைக் குடிக்கின்றது, ஆகையால் பசியாற் பீடிக்கப்படுகின்றவன் எந்தப் பாதகந்தான் பண்ணமாட்டான்? இஃது உங்களுக்குத் தெரியவில்லையோ?' என்று சொல்லி யுடனே சிங்கத்தண்டைபோய்க் காகம் 'சுவாமீ! இன்றைக் கெதுவுங் கிடைக்கவில்லை' என, 'இதற்கென்ன வுபாயம் பண்ணலாம்?' என்று சிங்கங்கேட்கக் காகம் 'தங்கள் சுவாதீனத்தி லிரையிருக்கையில் தாங்கள் வேறே யாலோசிப்பானேன்? வெண்ணையை வைத்துக்கொண்டு நெய் தேடலாமோ?' எனச் சிங்கம், 'எம்மிடத்து ஆகாரமெங்கே யிருக்கின்றது?' எனக் காகம் 'மந்தானகனென்னு மொட்டை யிருக்கின்றதே' என இதைக்கேட்டுச் சிங்கம் பூமியைக் கையாற்றொட்டுச் 'சிவசிவா' வெனக் காதின்மேற் கையை வைத்து 'நாமவனுக்கு அபயங்கொடுத்திருக்கையில் நீங்களிப்படி விபரீத வார்த்தை சொல்லலாமோ? அடைக்கலம் புகுந்தவர்களைக் கைவிடலாமோ? பசு, பூமி, தானிய மிவற்றின் தானத்தைக் காட்டிலும் அபயதான மதிகம்; அசுவமேத புண்ணியத்தைக் காட்டிலு மிந்தப் புண்ணிய மதிகமென்று சாஸ்திரமு மிருக்கின்றதே' எனக் கேட்டுக் காகம் 'ஐயா! எனதிவ்வொரு விண்ணப்பத்தையுங் கேட்டருளும்; ஒரு குலத்துக்காக வொருவனை விட்டு விடலாம்; ஒரு கிராம ரக்ஷணைக்காக வொரு குடும்பத்தைத் துறக்கலாம்; ஒரு தேச பாலனத்தின் பொருட்டு ஒரு கிராமத்தைக் கைவிடலாம்; தன்

ணிமித்தம் பூமியை விடலாம்; ஆகையா லிது தப்பன்று; ஆகிலு
மவனைத் தாங்கள் கொல்ல வேண்டாம்; நாங்களே கொல்லுவோம்
இல்லாவிட்டாலவனே சாவ வுடன்பட்டு என்னைக் கொல்லுங்க
ளென்பான்; அப்போது நாங்கள் கொல்லுவோம்' என்று சொல்
லச் சிங்கஞ் சும்மா விருந்தது. பிறகு காகம் அதுவேகட்டளையாக
நினைத்துக்கொண்டுபோய், மற்றை மூன்றையு மிட்டுக்கொண்டு
சிங்கத்தின் அருகில்வந்து 'சுவாமீ! இன்றைக்கொன்றும் ஆகாரம்
அகப்படவில்லை; அதனால் தாங்கள் இன்றைக்குப் பட்டினி யிருக்க
லாயிற்று; அப்படியிராம லென்னைப் புசிக்கலாம்' எனச் சிங்கம் "நீ
யெவ்வளவு? உன்னை யுண்டதனா லென்பசி தீருமோ? உன்னுட
லென்கடைவாய்ப் பல்லுக்கேனும் போதுமோ?' என்றுகேட்க,
நரி 'அப்படியானா லென்னைத் தின்னும்' என்று நிற்க, 'நீயு மப்
படித்தான், நீ யதிகமல்லை' என்று மறுக்க, புலி 'இவ்விருவரிலும்
நான் பெருத்திருக்கின்றதனா லென்னைப் பக்ஷித்துப் பசிதீரும்'
என, சிங்கம் 'நீதான் எனக் கெவ்வள வினை? உன்னைப்பெரிதாக
நினைத்துக்கொண்டிருக்கின்றாயோ?' என்று சொல்ல ஒட்டகம்
இதைப்பார்த்து 'நானெல்லாரையுங் காட்டிலும் பெருத்திருக்க
வில்லையோ? சித்தமானா லென்னைக்கொல்லலாம்' என, இதைக்
கேட்டவுடனே புலியும் நரியும் பாய்ந்து விழுந்து அந்தக்ஷணமே,
ஐயோ! அதைக் கொன்று எல்லாம் புசித்தன. ஆகையா லெங்கே
மிகவுங்கீழ்க ளிருக்குமோ அங்கே சுகமிராது. பிராணனுக்கு நா
சம் வருமென்றே நினைக்க வேண்டும். இவ்விடத்திலு மப்படியே
யிருக்கின்றது. துஷ்டர்கள் கையிலகபட்டுச் சும்மா இறப்பதைக்காட்
டிலுஞ் சண்டைசெய்வதே யோக்கியம். ஒருவன் சண்டைமுனை
யிற் செத்தாற்சொர்கமடைகின்றான். சத்துருவைச்சயித்தா லிராச்
சியமடைகின்றான். ஆதலாற் சூரர்களுக்குச் சாவும் பிழைப்புஞ்சமா
னம்" என்றது. அதைக்கேட்டுத் தமனகன் "பகைவர்களுடைய
பராக்கிரமத்தை யறியாமல் எவன் பகைத்துக்கொள்ளுகின்றானோ
அவன் சமுத்திரஞ் சிட்டுக்குருவியினா லெப்படி அவமான மடை
ந்ததோ அப்படியே யவமானமடைவான்" என அப்போது "அஃ

தெப்படி?" என்று சஞ்சீவகன் கேட்கத் தமனகன் சொல்லுகின்றது:—

" சமுத்திரக்கரையில் இரண்டுசிட்டுக்கள் ஆணும்பெண்ணுமாய் ஒருசெடியின்கீழ்க் கூடுகட்டிக்கொண் டிருக்கும்போது பெட்டை ஆண்பறவையைப்பார்த்து ‘ எங்கேமுட்டையிடலாம் ?’ என்றுகேட்க ஆண் ‘இது நல்லவிடம்’ என்று சொல்லப் பெண் ‘ இந்தக் கடற் கரையி லொருவேளை யபாயந்நேரிடும்’ என, ஆண்சிட்டு, ‘சமுத்தி ரத்திற்கு என்னுடனே பகைத்துக் கொள்ளச் சாமர்த்திய மில்லை’ யென, பெண் ‘ உனக்குஞ் சமுத்திரத்திற்கும் வெகு தாரதம்மிய மிருக்கின்றதே ; எவன் தன்வலியும் பிறன்வலியும் பார்க்கின்றதில் லையோ அவன் விபத்தை யடைவான் ; எவன் பார்க்கின்றானோ அவன் சுகமடைவான் ; மேலுந் தனக்கிதம் பண்ணுகின்ற மித்திரன் பேச்சைக் கேளாதவன் ஆமை யெப்படிக் கழியைவிட்டு மரண மடைந்ததோ அப்படியே மரணமடைவான் ’ என, ஆண் ‘ அஃதெப் படி? பெண்ணே! சொல்’ எனப் பெட்டைக்குருவி சொல்லுகின்றது:

‘விகட சங்கடங்கள் என்னு மிரண்டன்னமுங் கம்புக்கிரீவ னென்னு மாமையுஞ் சிநேகமா யொருகுளத்தில் வாழ்ந்து கொண் டிருக்கையில் அன்னங்கள் ‘ இப்போ திங்கே மழைபெய்யாமையாற் குளம் வற்றிப்போமாகையால் இனி வேறொரு குளத்திற் போய்ச் சேர்வன யோக்கிய’மென்று நினைத்து ‘இதை நம்முடைய சிநேகித னுக்குச் சொல்லவேண்டு’மென்று ஆலோசித்து அப்படியே யதற்குச் சொல்லும்போது, கம்புக்கிரீவன் ‘ நீங்கள் செப்பட்டையினாற் பறந்து போவீர்கள் ; நான் வேறோரிடத்திற் கெப்படிப்போவேன் ?’ என, விகடசங்கடங்கள் ‘ எங்கள் வார்த்தையில் நம்பிக்கைவைத்து ஸ்திர மாயிருப்பையாகி லுன்னையுங் கொண்டுபோவோம் ; கொண்டு போ கையில் வழியில் ஏதொன்றும் பேசாமலிருந்தாற் போகக்கூடும்’ என் றுசொல்லி, ஒரு கழிகொண்டுவந்து ஆமையைப்பார்த்து ‘ இந்தக்கழி யைப்பல்லினாலே பலமாய்க்கடித்துப் பிடித்துக்கொள்ளு ; விட்டு விடாதே ; நாங்களிருவரு மிதை யிருபுறத்திலும் மூக்காற் கௌவிக்

கொண்டு ஆகாயமார்க்கமாய்ப் போகின்றோம்' என்று சொல்லி அந்தக்கொம்பை யிரண்டும் பற்றிக்கொண்டு எழும்பிப் பறந்துபோயின. இதனை யொரு பட்டணத்துச் சனங்கள் பார்த்து அதிசயித்து நகைத்து எல்லாரு மொருமிக்க 'இஃதென்னே? ஒருகழியை யிரண்டு பறவைகள் தூக்கிக்கொண்டு அதை யாமையாற் பிடிப்பித்துக்கொண்டு போகின்றன' வென்று இப்படிப் பேரிரைச்சலிட்டுப் பேசினார்கள். அதைக்கேட்டுக் கம்புக்கிரீவன் 'இவ்விரைச்சல் எங்கிருந்துண்டாகின்றது?' என்று சொல்வதற்கு வாய்திறந்தவுடனே கழியினின்றும் விடுபட்டுப் பூமியில்விழுந்தது. அப்போதங்கே யிருந்த புலாற்றின்பவர்கள் உடனே யதைக் கொன்று தின்றார்கள். ஆகையால் தனக்கிதம் பண்ணுகின்றவர்கள் பேச்சை யசட்டைபண்ணலாகாது. மேலும் யாதொரு காரியமும் நேரிடுவதற்கு முன்னேதானே யாலோசிக்கின்றவனும், வருகின்றபோதே யாராய்கின்றவனுஞ் சுகமடைவார்கள். இதைவிட்டு 'யாதொன்று வரத்தக்கதோ அது வரட்டு' மென்று எவன் சொல்லுகின்றானோ அவன் வந்தபின் காப்போனென்னு மீனைப்போல் நாசமடைவான்?" எனச் சேவல் "அஃதெப்படி" யெனப் பெட்டைச்சிட்டுச்சொல்லுகின்றது:—

"ஒரு பெரிய குளத்தில் **வருமுன் காப்போ** னென்றும், **வருங்காற் காப்போ** னென்றும், **வந்தபின் காப்போ**னென்றும் பெயரியமூன்று மீன்கள் அநேகநாளாய் வாழ்ந்துகொண் டிருக்குநாளில் ஒருநாள் வலைஞர்கள்வந்து 'இதிற் றண்ணீர் கொஞ்சமா யிருக்கின்றதாகையால் நாளைவந்து இதிலிருக்கின்ற மீன்களை யெல்லாம் பிடிப்போ' மென்று பேசிக்கொண்டதை வருமுன் காப்போன் கேட்டுத் தன் சிநேகிதரிடத் திற்குப்போய், 'நாமிவ்விடம் விட்டுச் சீக்கிரமாகப் புறப்படவேண்டும்; இனி யிங்கே நிமிஷநேரமு மிருக்க லாகாது' என, இதைக்கேட்டு வருங்காற் காப்போன் 'நமக்கு விபத்து வரும்போது பார்த்துக் கொள்ளுவோம்; காரிய நேரிடும்போது அதற்குத் தக்கதாகப் புத்தி யுண்டாகும்' எனப், பிறகு வந்தபின் காப்போன் 'தன்னிடத்தை விட்டுவிடுகிறதுதான் மூடத்தனம்; எது வரத்தக்க

தோ அது வரவே வரும், யாதொன்று வரத்தகாததோ அது நாம் வருந்தியழைத்தாலும் வாராது; ஆதலால் நான் வரமாட்டேன்' என்று சொல்லி அந்தக் குளத்திலேயே யிருந்தது. பிறகு வருமுன் காப்போன் வேற்றிடத்துக்குப் போய் விட்டது. மறுநாளுதயத்திற் செம்படவர் வந்து வலையெறிந்து மீன்களைப்பிடித்தார்கள். அதில் வருங்காற் காப்போ னகப்பட்டுச் செத்தாற்போற் பாசாங்கு பண்ணிக்கொண்டிருந்தது. அதைப் பார்த்து இது செத்ததென் றெண்ணிக்கொண்டு செம்படவன் அதைக் கரைமேற் போட்டுவைத்தான். இதற்குள்ளே அஃது அவன் கண்ணுக்குத் தப்பித் தண்ணீரிற் புகுந்தொளித்துக்கொண்டது. பிறகு வந்தபின் காப்போன் வலைக்குள் அகப்பட்டு இப்போதென்ன செய்யலாமென் றங்குமிங்குமோட இதைச் செம்படவன் கண்டு, தடியா லடித்துக் கொன்றான். மற்றை யிரண்டுஞ் சுகமடைந்தன. ஆகையா லெதையு மாலோசித்துச் செய்யவேண்டும்" என்று சொல்லிப் பிறகு புருஷன்சொற்படி யங்கே தானே முட்டையிட்டது. அப்பொழுது சமுத்திரம் அதன் வல்லமையை யறியாமல் முட்டைகளை யடித்துக்கொண்டுபோயிற்று. இட்டு அதைப்பார்த்து வெகு துக்கமாய்ச் சேவலுடன் 'சுவாமீ! தங்களுக்குப் பெரிய சங்கடம் வந்தது; முட்டைகளைச் சமுத்திரங் கொண்டு போயிற்று; இப்போ தென்ன செய்யலாம்?' எனச் சேவல் 'நீ பயப்படாதே, நான் முட்டைகளைக் கொண்டுவருவேன்; என் திராணியைப் பார்' என்று சொல்லி யெல்லாப் பறவைகளையுங் கூட்டிக்கொண்டு கருடனைச் சரண மடைந்தது. கருடன் அதை விஷ்ணுவுக்கு அறிவித்து 'அப்பறவை மிகவும் வருத்தப்படுகின்றது; ஆகையா லதன் முட்டைகளைக்கொடுப்பிக்கவேண்டும்' என, விஷ்ணு சமுத்திரத்தைப் பார்த்து, 'அதன் முட்டைகளைச் சீக்கிரமாய்க் கொடு' வென்று கட்டளை யிட்டவுடனே, சமுத்திரம் முட்டைகளைக் கொண்டுவந்து கொடுத்தது. ஆகையாற் சத்துருக்களுடைய பராக்கிரம மறியாமற் பகைத்துக்கொள்ளலாகாது. அந்தச் சிங்கத்திற்கு அகங்காரத்தினாற் றெரியவில்லை' எனக் கேட்டுச் சஞ்சீவகன் தமனகனைப்பார்த்து "நல்லது அந்தச் சிங்கத்தின் சண்டைக்குறிப்பு எப்படி யிருக்கும்? சொல்"

எனத் தமனகன் "எப்போது அவன் காதுகளை நெறித்துக்கொண்டு வாலைத்தூக்குவானோ அப்போது கொல்ல நினைத்தானென்றறிய வேண்டும்; அக்காலத்தி லப்படியே நீயு மவனுக்கு முன்னே யிருக்க வேண்டும்; சுத்தவீரனாகிய வுனக்குத் தெரியாதா? எல்லாந் தெரிந்தவர்களுக்குச் சொல்வானேன்?" எனச் சொல்லி விட்டுத் தமனகன் மறுபடி கரடகனிடத்திற்குப் போயிற்று. அப்போது கரடகன் "என்னாயிற்று? சொல்" எனத் தமனகன் "காரிய முடிந்தது; இருவருடைய சிநேகத்தின் வாயிலும் மண் விழுந்தது; இப்போது நான் சிங்கத்தின் கோபக்குறி யிப்படி யிருக்குமென்று சஞ்சீவகனுக்குச் சொன்னபடியே செய்விக்கின்றேன்" என்று பிங்களனிடத்திற்குப் போய் அப்படியே யதைச் செய்வித்தது. பிறகு சஞ்சீவகன் சிங்க மிருக்குமிடத்திற்குவந்து பார்க்கும்போது, தனக்குத் தமனகன் முன் சொன்னபடியே யிருக்கக்கண்டு, மிகவும் வியசனமடைந்து, பராக்கிரமத்தினாலேயே பிராணனை விடவேண்டு மென்று நிச்சயித்து யுத்தத்திற்கு ஆரம்பிக்கவே இரண்டுக்கும் பெரிய சண்டை விளைந்தது. கரடகன் அதைப்பார்த்துத் "தமனகா! துஷ்டா! உன் சேர்க்கையால் இராஜாவுக்குஞ் சிநேகனுக்குஞ் சண்டையுண்டாயிற்று; இராஜ நீதியிற் சாமதானபேத தண்டமென்னு நான்குபாயங்களிருக்கின்றன; அவைகளிற் சாமமென்னு முபாயம் முக்கியமானது; அதனாற் காரியசித்தி யுண்டாவது போல, மற்றவைகளா லுண்டாகாது; பகையிருந்தாலுஞ் சாம வுபாயத்தாலேயே போம்; இப்படி யிருக்கையில் நீ இராஜாவைப் பெரிய பொல்லாப்பில் வீழ்வித்தாய்; இராஜாக்களிற் சிலர் ஈனர்களுடைய புத்தியைக் கேட்டுச் சங்கட மடைகின்றார்கள்; ஆகையாற் குணவந்தர்களுடைய கூட்டுறவு இராஜாக்களுக் கிருக்கவேண்டும்; கபடியாக விருக்கின்ற பிரதானி புத்திசாலியானாலும் அவனொருபோதும் இராஜாவண்டையி லிருக்கலாகாது; மற்றுந் தானே சம்பத்தை யடைய வேண்டுமென்று நினைத்து, இராஜாவினிடத்தில் வேறொருவன் சேரலாகாதென் றிச்சிப்பவனும் இராஜாவுக்கு உபயோகியாகான்; பலபெயர் சமர்த்தர்கள் இராஜாவினிடத்தி லிருந்தால், இராஜா பிரகாசிப்பான்; ஆகைக்

காரருந் துஷ்டருமாகிய இவர்களுடைய கூட்டுறவால் இராஜா பிரகாசிக்கமாட்டான்; தன்னைவிட இராஜாவினிடத்தில் வேறொருவனிருக்கலாகாதென்று எவன் இச்சிக்கின்றானோ அவனை இராஜாவுக்குஞ் சத்துருவென்று நினைக்கவேண்டும்; அப்படியே நீ யிந்தத் தீங்கு விளைத்தாய், எசமானனுடைய தயையிடைத்தாற் சேவர்கள் கர்வங்கொள்ளாமல் மிகவும் அடக்கமாக விருக்கவேண்டும்; நீ யதைவிட்டு விபரீதமாக நடக்கின்றாய். பிதாவைப்போலிருப்பான் புத்திர னென்பதை நீ பொய்யாக்கினாய்; இப்போதுனக்கு நானென்ன சொல்வேன்? கொக்கு குரங்குக்கு உபதேசம்பண்ணி யெப்படி யிறந்ததோ அப்படி யுன்னாலே நான் மரணமடைவேனென் றெனக்குத் தோன்றுகிறது" என்று இப்படிக் கரடகன் சொன்னதைக்கேட்டுத் தமனகன் "அஃதெப்படி? சொல்" எனக் கரடகன் சொல்லுகின்றது:—

"ஒருநாட் குளிரால் வருத்தப்படாநின்ற குரங்குக்கூட்டம் மின்னும்பூச்சிக்கூட்டத்தைப் பார்த்து இது நெருப்பென்று நினைத்துக் குளிர் காய்வதற்காக அதனருகே போயிற்று. அப்போதங்கே யொரு மரத்தின்மே லிருந்த சூழநனென்னு மொருகொக்கு இதைப் பார்த்துக் குரங்கினருகே வந்து, 'இது மின்மினிப் பூச்சி, நெருப்பன்று' என்று சொன்னவுடனே அந்தக் குரங்குக் கூட்டத்தில் ஒன்று கோபித்து அந்தப் பக்ஷியைப் பிடித்து 'நீ யெனக்குப் புத்தி சொல்லுகிறவனோ?' வென்று கல்லிலறைந்து கொன்றது. ஆகையால் துஷ்டர்களுக்கு உபதேசம் பண்ணலாகாது" என்று கரடகன் சொல்லத் தமனகனொன்றும் பேசாமல் மௌனமாயிருந்தது. மனத்தில் மிகவும் வியசனப்பட்டு "நானிந்தப் பாதகம் பண்ணினேன்" என்றுசொல்ல, மறுபடியுங் கரடகன் "அடா தமனகா! இத்தன்மையான நடக்கையிலே துஷ்ட புத்தியைப்போல் நீயும் நாசமடைவாய்" என அப்போது தமனகன் "துஷ்டபுத்தி யெப்படிக்கெட்டான்? சொல் எனக் கரடகன் சொல்லத்தொடங்கினது:—

"துஷ்டபுத்தி சுபுத்தியென்ற இரண்டு செட்டி பிள்ளைகள் பணஞ் சம்பாதிப்பதற்காகத் தேசாந்தரம் போனார்கள். அவ்விடத்

திற் சுபுத்திக்குப் பூமியில் ஒரு பணப்புதையல் அகப்பட்டது. அதைச் சினேகத்தினாலே சுபுத்தி துஷ்டபுத்திக்கு உடனே சொல்லத் துஷ்டபுத்தி 'அந்தத் திரவியத்தை யிங்கேயே புதைத்து விட்டுக் கொஞ்சம் பணமெடுத்துக் கொண்டு போவோம்' எனச் சுபுத்தி சினேகத்தினால் அதற்குச்சம்மதித்தான். பிறகு அதிற் கொஞ்சம் பணமெடுத்துக்கொண்டு மற்றைப்பணத்தை யொரு மரத்தடியிற் பள்ளந்தோண்டி அதிலே புதைத்துவைத்துப் பின்பு வீட்டுக்குப் போய்ப் பழையபடி சினேகமாயிருக்கையில் ஒருநாள் துஷ்டபுத்தி தனியேபோய் அந்தப் பொருளையெல்லாம் எடுத்துக்கொண்டு வீட்டுக்குவந்து விட்டான். சிலநாட்கழித்துத் துஷ்டபுத்தி சுபுத்தியைப் பார்த்து 'நாமிருவருஞ்சென்று அந்த நம்முடைய திரவியத்தைக் கொண்டுவருவோம். வா " என, இருவரும்போய் அவ்விடத்திற் பார்க்குமளவில் அங்கொன்று மில்லாமையால் துஷ்டபுத்தி மிகவும் வருத்தத்தோடு சுபுத்தியைப்பார்த்து 'இங்கிருந்த பணத்தை நீயே கொண்டுபோனாய்; மேலுங் கபடமாய் வருத்தப்படுகின்றாய்" என்று சொல்லிக் கலகப்பட்டு இதை இராஜாவுக் கறிவித்தான். இராஜா நியாயாதிபதியை யழைப்பித்து 'இதைப் பஞ்சாயத்தில் தீர்க்கவேண்டு' மெனக் கட்டளையிட, அவன் 'ஐந்து நாளைக்குள்ளே தீர்த்துப்போடுகிறே' னென்று இராஜாவின் முன்னே கெடுவைத்துக்கொண்டு வந்து பஞ்சாயத்துக்கு ஆரம்பித்தான். அப்போது துஷ்டபுத்தி 'எனக்குச் சாக்ஷியிருக்கின்றது; அந்த சாக்ஷியை யிப்போதே கேட்கலாம்' எனப் பஞ்சாயத்தார் 'உன்சாக்ஷியைக்கொண்டு வா' எனத் துஷ்டபுத்தி வீட்டுக்குப்போய்த் தன் றகப்பனுடனே சொல்லுகின்றான்: 'அப்பா! உம்முடைய ஒரு பேச்சினா லெனக்குப் பதினாயிரம் வராகன் கிடைக்கும்' எனக் கிழவன் 'எப்படிக் கிடைக்கும்? சொல்' எனத் துஷ்டபுத்தி 'நீர் மரப்பொந்தி விராத்திரிக்குப்போயுட்கார்ந்திருக்க வேண்டும்; அங்கே நியாயாதிபதிமுதலானோர் வந்து அங்கிருந்த பணத்தை யார் கொண்டுபோனார்க ளென்னும் போது, நீர் சுபுத்திகொண்டுபோனா னென்றாற் காரியமாகும்' என இதைகேட்டுப் பிதா 'பொல்லாங்கு நேரிடுகிற காரியத்தைப் பண்

ணிச் சுகமடைய வேண்டுமென்று இச்சிப்பது கொக்கைப்போல் மூடத்தனமா யிருக்கின்றது' எனத் துஷ்டபுத்தி 'அஃதெப்படி?' எனப் பிதா சொல்லுகின்றான் :—

“தான் பொரிக்குங் குஞ்சுகளையெல்லா மொரு பாம்பு தின்னப் பறிகொடுத்துக்கொண்டு வந்த ஒரு மூடக்கொக்கு அப்போது பொரித்த தன் குஞ்சுகளைக் காப்பாற்றுவதைக் குறித்து என்ன செய்யலாமென்று பெண் கொக்கோடேகூட ஒரேரி கரையி லுட்கார்ந்து ஆலோசித்துக்கொண் டிருக்கையில் அக்கொக்கின் சிநேகனாகிய குளிர னென்னும் பெயரையுடைய நண்டானது கொக்குகளைப் பார்த்து 'இன்றைக்கேன் நீங்கள் வியாகுலமா யிருக்கின்றீர்கள்?' என, அவைகள் தங்கள் விருத்தாந்தமெல்லாஞ் சொல்லுங் குளிரன் அதைக்கேட்டு ஆண் கொக்கைப்பார்த்து, 'நல்லது' உனக்குப் பாம்பைக் கொல்லுகின்ற உபாயமொன்று சொல்லுகின்றேன் ; கீரிப்பிள்ளையின் வளைமுதற்கொண்டு பாம்பிருக்கும் இடமட்டும் மீன்களை யிறைத்து வைத்தாற் காரியஞ் சித்தியாகும்' என்றது. கொக்கு அப்படியே செய்யக் கீரிப்பிள்ளை தன்வளையினின்றும் புறப்பட்டு மீன்களைத் தின்று கொண்டே போய்ப் பாம்பையுங் கடித்தெறிந்துவிட்டுக் கொக்கின் குஞ்சுகளையுஞ் சாப்பிட்டது. ஆகையால் இப்படிப்பட்ட ஆலோசனை பண்ணலாகாது” எனத் துஷ்டபுத்தி பிதா சொன்னதைக் கேளாமல் அவனை வலிவி லிழுத்துக்கொண்டுவந்து, மரப்பொந்தி லுட்காருவித்து, விடியற் காலத்தில் நியாயாதிபதி முதலானபேரையுஞ் சுபுத்தி முதலானோரையு மவ்விடத்திற்கு இட்டுக்கொண்டுபோய்ச் 'சாட்சி இந்த மரத்தைக் கேளுங்கள்' என்றான். அப்போது அந்த மரத்திலிருந்து 'இங்கிருந்த பணமுழுதுஞ் சுபுத்தியே கொண்டுபோனான்' என்றொரு சத்தம் புறப்பட்டது. சுபுத்தி 'ஈதென்ன மோசமாயிருக்கின்றது! இங்கேயொருபிராணியு மில்லாமல் தொனி எங்கேயிருந்து புறப்பட்டது? இது தெய்வீகமாக இருந்தால் மெய்யன்றோ சொல்லவேண்டும்?' என்று இப்படித் தனக்குள்ளே எண்ணமிட்டுக்கொண்டு அந்த மரத்தின்மே லேறிச் சோதிக்கையில் அதிலொரு பொந்து காணப்பட்டது. உடனே

இங்கே இருத்திரம மிருக்குமென் றெண்ணி அங்கே நெருப்பை மூட்டிப் பற்றுவித்தான். உள்ளே யிருந்த கிழவன் பாதிவேகிறமட்டும் பல்லைக் கடித்துக்கொண்டிருந்து, பொறுக்கமுடியாமல் அலறிக்கொண்டு வெளியேவந்து விழுந்தான். அப்போது அங்கிருந்தோரெல்லோரும் 'இஃதென்னை இஃதென்னை?' எனக் கேட்கக்கிழவன் 'என்பிள்ளை துஷ்டபுத்தி கபடத்தினு லென்னைப் பலாத்காரமாகக் கொண்டுவந்து இங்கே வைத்தான்' என்று சொல்லி இறந்துபோனான். நியாயாதிபதி இதைப்பார்த்து, இராஜாவுக்கு விண்ணப்பம் பண்ணினான். பிறகு துஷ்டபுத்தி வாயினாலேயே இராஜா எல்லாவற்றையும் அறிந்துகொண்டு அவனைக் கழுவிலேற்றினான்'' என்று சொல்லிப் பின்னுங் கரடகன் தமனகனைப்பார்த்துப் "பாம்பை வெகுநாள் வளர்த்தாலும் அஃதெப்படியும் வளர்த்தவனையே கடிக்கும்; ஆகையால் எனக்கு உன்னிடத்திற் பயந்தோன்றுகின்றது; இனிமேல் உன்னிடத்தில் தேவதத்தனைப்போல் நடந்துகொள்ள வேண்டும்'' என, அதைக்கேட்டுத் தமனகன் "தேவதத்தன் எப்படி நடந்து கொண்டான்? சொல்'' எனக் கரடகன் சொல்லுகின்றது:—

"ஒரு பட்டணத்தில் தேவதத்தனென்னு மொரு சாவகாரி தான் திரவியவீனனாய்ப் போனதனால் மறுபடி திரவியஞ் சம்பாதிக்க நினைந்து, தேசாந்தரம்போகப் புறப்படும்போது, தன் வசத்திலிருந்த ஆயிரம் இருப்புக்கம்பிகளையும் அவ்விடத்திருந்த தன் சிநேகிதனிடத்தில் வைத்துவிட்டுப்போனான். போனவிடத்தில் திரவிய சம்பாத்தியத்தைக்குறித்து அநேக வுபாயம்பண்ணியும், பண மகப்படாமையால் மீண்டும் வீட்டுக்குவந்து தன்னுடைய இருப்புக்கம்பிகளைக்கேட்டான். வைத்துக்கொண்ட சிநேகிதன் மிகுந்த துராசையினால் 'இருப்புக்கம்பிகளை எலிகள் தின்றுவிட்டன'வென்றான். இவன் இந்த அபூர்வத்தைக்கேட்டு 'நல்லது, இருக்கட்டும்' என்று சொல்லி வீட்டுக்குப் போனான். பிறகு ஒருநாட் சிநேகிதன் பிள்ளையை விளையாடுகிறதற்காக அவனிடத்திலிருந்து எடுத்துக்கொண்டு போய் மற்றொரு வீட்டி லொளித்துவைத்துப் பின்பு சிநேகிதனிடத்தில் வந்து உட்கார்ந்தான். அவன் 'உன்னிடத்திலிருந்த என்

பிள்ளை யெங்கே?' யெனச் சாவகாரி ' உன் பிள்ளையைப் பறவை தூக்கிக்கொண்டு போயிற்று' என்றான். இதை யவன் கேட்டு மிகவுங் கிலேசப்பட்டு இவனை யிழுத்துக்கொண்டு ஊரதிகாரியண்டைபோய் ' இந்தத் துஷ்டன் என் பிள்ளையைக்கொண்டுபோய் ஒளித்து வைத்துவிட்டுப் பிள்ளையைப் பட்சி யெடுத்துக்கொண்டு போயிற்று என்கின்றான்; என் பிள்ளையை யெனக்குக் கொடுப்பிக்கவேண்டும், என, அதிகாரி இதைக் கேட்டுச் சாவகாரியை யழைத்து ' இவன்பிள்ளை யெங்கேயிருக்கின்றது? சொல் ' என, அவன் ' இவன் பிள்ளையை பட்சிகொண்டு போயிற்று ' என, அதிகாரி யிதைக்கேட்டுக் குலுங்க நகைத்து 'இந்த அசம்பவம் இதுவரைக்கும் உலகத்தில் இல்லை, அப்படியிருக்க நீ யெப்படிச் சொல்லுகிறாய்?' என அப்போது அவன் ' இஃதோ ராச்சரியமா? எப்படி இருப்புக்கம்பிகளை யெலிகள் தின்று விட்டனவோ அப்படியே யிதுவுஞ் சம்பவித்தது, ஆண்டவனே!' என, இதைக் கேட்டு நியாயாதிபதி முன்னடந்தவைகளை விசாரித்தறிந்து கொண்டு 'அவனுடைய இருப்புக்கம்பிகளை நீ கொண்டுவந்து கொடுத்தால் அவன் உன் பிள்ளையைக் கொண்டுவந்து கொடுப்பான்' என்றவுடனே அவ்விருவரும் அப்படியே செய்து தங்கள் வீட்டுக்குப் போனார்கள்" என்று இப்படிப்பட்ட கதைகளைச் சொல்லிப் பின்னுந் தமனகனுக்குக் கரடகன், "சொன்னபொருளைத் தெரிந்து கொள்ளாதவன் கல்லுக்குச்சமானம்; அவனுக்கு உபதேசித்துப் பலனில்லை" என்று சொல்லிக் கரடக தமனக நரிகளிரண்டும் பிங்கள னிடத்திற்குப் போகும்போது, சிங்கஞ் சஞ்சீவகனோடுகூடச் சண்டைபண்ணி அதைக் கொன்றுவிட்டு வியசனமா யுட்கார்ந்திருந்தது. இதைக்கண்டு தமனகன் இராஜாவைப் பார்த்துச் "சுவாமி! தாங்கள் சத்துருவைக் கொன்று துக்கப்படுகின்றீர்கள்; இது நியாயமன்றே; சத்துருவைக் கொல்லவேண்டு மென்று சாஸ்திர மிருக்கின்றது; பிதாவானாலும், பந்துவானாலும், புத்திரனானாலு மித்திரனானாலும் அவர்களில் எவன் தன்னைக் கொல்லப் பிரவர்த்திக்கின்றானோ அவனை இராஜா கொல்லவேண்டும்; சுதந்தரையா

யிருக்கின்ற பெண்சாதியுந் துஷ்டசினேகிதனும் விபரீதசேவகனும் அசாக்கிரதையுள்ள மந்திரியும் நன்றியறியாதவனும் இருத்தலாகாது ; மேலும் மெய், பொய், கடுமை, மென்மை, கொலை, தயை உதாரத்துவம், உலோபத்துவம், பலவழியாகத் திரவியம் சம்பாதித்தல், வெகு பெயருடைய சிநேகிதம் இப்படிப்பட்ட பல குணங்களும் இராஜாவுக் கிருக்கவேண்டுமென்று இராஜநீதி முறையிடுகின்றது ; அப்படியே தாங்கள் இது செய்தீர்கள்" என்று சொல்லித் தமனகன் சிங்கத்தைச் சந்தோஷிப்பித்தது. பிறகுசிங்கம் அந்தக் காட்டில் முன்போலத் தன்னிராச்சியத்தை யனுபவித்துக்கொண்டு சுகமாயிருந்தது.

இரண்டாவது

ஸுஹிர்ல்லாபம்.

அல்லது

நட்புப்பேறு.

"புத்திசாலிகளா யிருக்கின்ற ஸ்நேகிதர்கள் திரவிய மில்லா திருந்தாலும், வேறே சாதனங்க ளில்லாதிருந்தாலுங் காகமும் எலி யும் ஆமையும் மானும் நட்பினால் ஒன்றையொன்று காப்பாற்றினாற் போல் ஒருவர்க்கொருவர் உதவுவார்கள்" என்று சோமசன்மா சொல்ல, இராஜகுமாரர்கள் "அஃதெப்படி?" யென அவன் சொல் லத் தொடங்கினான்:—

"கோதாவரி நதிக்கரையில் ஒரு பெரிய வன்னிமரத்தில் இலகுபதனனென்னுங் காகம் வாசஞ்செய்துகொண் டிருக்கையில் ஒருநாள் விடியற்காலத்தில் அங்கே யமனைப்போல மிகவும் பயங் கரமான ஒருவேடன் வந்தான். இலகுபதனன் அவனைப்பார்த்துப் பயப்பட்டு, 'இந்தத் துராத்மா என்ன பண்ணுவானோ? தெரிய வில்லை: ஆகையால் இதைச் சோதிக்கவேண்டும்' என்று இரை தேடுகிற யத்தனத்தை விட்டிருக்க, இதற்குள்ளே அவ்வேடன் வலையை விரித்துப் பலவகைப்பட்ட தானியங்களையுந் தெளித்து அங்கே யொரு செடிமறைவிற் பதுங்கிக்கொண்டிருந்தான். அதன் பிறகு தன் பரிவாரத்தோடு அந்த மரத்தில் வந்திறங்கின சித்திரக் கிரீவனென்னும் புறாவரசு அங்கே யிறைத்திருக்குந் தானியத்தைப் பார்த்துத் தன் பரிவாரப் புறாக்களுடனே 'இந்த நிர்மானுஷ்ய மான காட்டில் தானியமெப்படிவரும்? யாராகிலுங் கொண்டு வந்து போட்டிருக்கவேண்டும்; இது நமக்குத் தெரிந்தாலல்லாமல் இதைப் பக்ஷிக்கலாகாது; ஒரு பிராமணன் பொற்காப்புக்கு ஆசைப் பட்டுப் புலியினால் எப்படி மரணமடைந்தானோ அப்படி இஃது ஏதோ ஒரு விபரீதமாகத் தோன்றுகின்றது" என, புறாக்கள் அதைக்

கேட்டு ‘அஃதெப்படி? இராஜாவே!’ எனச் சித்திரக்கிரீவன் சொல்லுகின்றது.—

“நான் தென் காட்டின் மேய்ந்துகொண் டிருக்கையிற் பார்த்தேன். அதைக் கேளுங்கள்: ஒரு கிழப்புலி பலவீனத்தால் ஆகாரஞ் சம்பாதிக்கக்கூடாமல் ஓரேரிக் கரையில் நீராடிக் கையில் தருப்பையை வைத்துக்கொண்டு உட்கார்ந்திருக்கையில் ஒரு பிராமணன் அந்த வழியில் வந்தான்; புலி யவனைப்பார்த்து, ‘ஓ பிராமணா! இந்தப் பொற்காப்புத்தருகிறேன். வா’ என, இதைக்கேட்டு அந்தப்பிராமணன் ‘இந்தக் காப்பு நமக்கு வலியக்கிடைக்கின்றது; மரணத்துக் கிடமாகிய புலியின்கிட்டப் போகலாகாது; ஆகையால் இந்தக் காப்பில் ஆசைவைக்கலாகாது என்போமானால் மரணத்துக்குநாலண்டையும் வழியாகையால் இதைக்குறித்துப் பிரயத்தனம் அவசியம் பண்ணவேண்டும்’ என்று தன் துராசைக்கேற்பத் தனக்குள்ளே யாலோசித்து நிச்சயித்துக்கொண்டு புலியை நோக்கி ‘ஓ புலியாரே! காப்பெங்கேயிருக்கின்றது?’ என, புலி கையில்வைத்துக்கொண்டு ‘இதோ பாரும்பிராமணோத்தமரே! எனக்காண்பித்தது. பிராமணன் ‘உன்னிடத்தி லெனக்கெப்படி நம்பிக்கையுண்டாகும்?’ என, புலி ‘நான் வைகறையில்மூழ்கி நித்தியதானம் பண்ணிக்கொண்டிருக்கின்றேன்; நகமும் பல்லும் போன கிழவனாயிருக்கின்றேன்; இப்போது என்னிடத்தில் நம்பிக்கை யில்லையா? வேட்டல், ஓதல், கொடுத்தல், தவம், சத்தியம், உறுதி, பொறுமை, ஆசையின்மையென்னு மிவ்வெட்டுத் தருமங்களையும் நான் அறிந்திருக்கின்றேனாதலின் இந்த அபூர்வ வஸ்துவை யார்க்காகிலுங்கொடுக்க இச்சிக்கின்றேன்; இதனால் என்னிடத்தில் நற்குணமிருக்கிறதென்றும் எவ்வளவானாலுந் துர்க்குண மில்லையென்றும் அறியவில்லையா?’ என அப்போது பிராமணன் ‘இது மெய்தான், ஆனாலும் புலி மனிதரையடித்துத் தின்னுகிறதென்று மிகவும் லோகாபவாத மிருக்கின்றதே’ எனப் புலி ‘நான் தருமசாஸ்திரமு மறிந்திருக்கின்றேன்; தன் பிராணன் தனக்குஎப்படித் தித்திப்போ அப்படியே யெல்லார்க்கு மிருக்கு

மென்றறிந்து, சாதுக்கள் பிராணிகளிடத்தில் தயையா யிருக்கின்றார்கள்; தன்னைப்போலச் சுகதுக்கங்களைப் பிறரிடத்தில் நினைக்கின்றார்கள்; நீ மிகவுந் தரித்திரனாகையால் உனக்குக்கொடுக்க யத்தனிக்கின்றேன்; சாஸ்திரமு மிப்படியே யிருக்கின்றது; எப்படியு மேழைக்கே கொடுக்க வேண்டும்; செல்வமுள்ளவனுக்குக் கொடுக்கலாகாது; மருந்து நோயாளிக்கு எப்படிக் குணங்கொடுக்குமோ அப்படி நோயில்லாதவனுக்காகுமோ? நீ இந்த ஏரியிலே மூழ்கிவந்து காப்பை வாங்கிக்கொண்டு வீட்டுக்குப்போ' என்றவுடனே, ஐயோ! பிராமணனுக்குப் பின்புத்தியாகையாற் பிராமணன் புலியின்பேச்சை நம்பி ஸ்நானம் பண்ணுகிறதற்காக ஏரியி லிறங்கினவுடனே, உளையிற் புதைந்து காலைப்பிடுங்கிக்கொண்டு வரக்கூடாமல் திகைத்தான். புலி யதைப்பார்த்து, 'பிராமணா! பயப்படாதே. நானுன்னைச் சேற்றினின்று மெடுக்கின்றேன்; சற்றிரு' என்று சொல்லிக்கொண்டு மெல்லெனப்போய் அவனைப் பிடித்துக்கொண்டது. அப்போது பிராமணனெண்ணமிடுகின்றான்: 'துஷ்டர்கள் வேதாத்தியயநம் பண்ணியிருந்தாலுந் தருமசாஸ்திரம் அறிந்திருந்தாலும் அவர்கள் வார்த்தையில் நம்பிக்கை வைக்கலாகாது. எவன் சுபாவமெப்படியோ அஃதெப்போதும் போகாது. இப்படி யிருக்கையில் நம்முடைய சாதிக்கியல்பா யிருக்கின்ற பேராசையினால் இந்தத் துஷ்டனிடத்தில் விசுவாசம் வைத்து மோசம்போனேம்' என்று இப்படிப் பச்சாத்தாபப் பட்டுக்கொண்டிருக்கையில் அந்தப் புலி அவனைக் கொன்று தின்றது. ஆகையால் மிகவும் ஆலோசனை பண்ணி யாதொன்று செய்யத் தக்கதோ அதைச் செய்யவேண்டும் அப்படிச் செய்தால் யாதொரு தீங்கும் நேரிடாது' என்றிப்படிச் சித்திரக்கிரீவன் சொன்ன வார்த்தையைக்கேட்டு ஒரு புறா கர்வத்தோடு 'இப்படி யாலோசித்தால் ஒரிரையும் நமக் ககப்படாது; மேலும் வெட்கப் படுகின்றவன், பொறாமை யுள்ளவன், சந்தோஷப்படாதவன், குரோதமுள்ளவன், நிராச் சந்தேகமுள்ளவன், பிறர் பொருளாற் சீவிக்கின்றவன் இந்த ஆறுபேருந் துக்கத்தையே யநுபவிப்பார்கள்" என, இதைக்கேட்டுப் புறாக்களெல்லாந் தானி

யத்தைத் தின்னும்பொருட்டுப் போய் நிலத்திலிறங்கி வலையிலகப்பட்டன. புறவரசன் அதைப்பார்த்து 'எல்லாரும் என்சொல்லைக் கேளாமற் போனார்கள், இப்போது நான் ஒன்றியாயிருந்து பலனில்லை' யென்று சொல்லி அதுவும் வலையில் வந்தகப்பட்டது. வேடன் பக்ஷிகள் வலையிற் சிக்கிக்கொண்டதைப்பார்த்து அதனிடத்திற்கு வரத் தொடங்கினான். அதைப் புருக்கள் கண்டு, சித்திரக்கிரீவனைப்பார்த்து, "நாங்கள் நின் புத்தியைக்கேட்டு உன்னை அவமானம் பண்ணினோம்; அதன் பலன் பிராப்தியாயிற்று" என, அப்போது சித்திரக்கிரீவன் "இப்போது இதைச்சொல்லிப் பயனென்னை? இதற்கோருபாய மிருக்கின்றது; எல்லோரும் வலையோடுகூட ஒருமிக்கப் பறந்து வேற்றிடத்திற்குப் போகவேண்டும்; அப்படிச் செய்தாற் பிராணனைக் காப்பாற்றலாம்" என, இதைக்கேட்டவுடனே யெல்லாப் பறவைகளும் வலையோடுகூடச் சடிதியிற் பறந்துபோயின. அதை வேடன் தூரத்திலிருந்து கண்டு ஆச்சரியப்பட்டு 'இவைகள் ஒரேமனமாய் வலையைக் கொண்டுபோயின. ஆயினும் இவைகளில் ஒன்றுக்கொன்று சண்டைநேரிடும்; அப்போது என்கையில் அகப்படு'மென நினைத்துக்கொண்டு அவைகளின் பின்னேயோடும்போது புருக்கள் கண்ணுக்கு எட்டாமல் மறைந்து போய்விட்டன. பிறகு அவன் வருத்தப்பட்டுத் திரும்பிவந்துவிட்டான். இவ்வாச்சரிய மெல்லாம் பார்த்திருந்த இலகுபதனென்னுங் காகம் அந்தப் புருக்களின்பின்னே போயிற்று. கபோதராஜன் தன்கூட்டத்தைப் பார்த்துக் "கண்டகி நதி தீரத்திலிருக்குஞ் சித்திரவனத்தி லென் சிநேகிதனான இரணியகனென்னு மோரெலியரச னிருக்கின்றான்; அவன் பல்லினாலே நம்முடைய வலையை யறுப்பான்; அங்கே நடப்பீர்கள்" என, இதைக்கேட்டு அப்படியே சென்று எலியரசன் வளையண்டை யிறங்கின. அப்போது எதாவது ஆபத்து நேரிடும் என்பதைக் குறித்துத் தன் வளைக்கு நூறு வழி செய்துகொண்டு உள்ளேயிருந்த எலியரசன் புருக்களிறங்கின சப்தத்தைக் கேட்டுப் பயந்தடங்கி யிருக்கையிற் சித்திரக்கிரீவன் "சிநேகிதா! இரணியகனே! எங்களோடே யேன் பேசவில்லை?"

என, இதைத் தன் சிநேகனுடைய தீங்குரலென்றறிந்து சந்தோஷத்தோடேகூடச் சீக்கிரமாக வளையினின்றும் வந்து "நான் புண்ணியவானாகையாற் சித்திரக்கிரீவனென்னு மித்திரனென் வீட்டுக்கு வந்தான்; இவ்வுலகத்தில் மனமொத்த மித்திரனோடு சம்பாஷிப்பதினும் வேறேயானந்தமேது?" என்று உபசாரஞ்சொல்லிப் பிறகு அதனுடைய அவஸ்த்தையைப்பார்த்து மிகவும் துக்கித்து "மித்திரா! நீ யாவரினும் மிக்க சமர்த்தனாயினையே; உனக்கு இப்படிப்பட்ட காரிய மெப்படி நேரிட்டது?" என, புறா "எந்தக்காலத்திலெது நடக்குமோ அது நடக்கும்; விதி வலிது; அதன்முன் யாருடைய உபாயம் நடக்கும்? கடல்பெருகி மேலிட்டால் அதற்குக் கரையேது?" என, இரணியன் "இந்தப்பேச்சு மெய்யே; நூறு நாழிகைவழித் தூரத்திலிருந்து வஸ்துக்களைத் தெரிந்துகொண்டுபோகின்ற நீ யின்றைக்கு வேடன் வலையிற் பாராமற் சிக்கிக்கொண்டையே பார்; சந்திர சூரியர்களுக்கு இராகுகேதுக்களாற் பீடை வருவதாலும் யானையும் பறவையும் பாம்புங் கட்டுப்படுதலும் புத்திசாலிகளுக்கு வறுமை வருதலுந் தெய்வத்தின் மகிமையேயல்லாமல் வேறன்று" என்று சொல்லிச் சித்திரக்கிரீவன் கட்டுண்டிருக்கின்ற வலைக்கயிற்றை யறுக்கத்தொடங்கிற்று. அப்போது சித்திரக்கிரீவன் "மித்திரா! முன்னே யென் பரிவாரத்தினுடைய கயிற்றை யறு; பிறகு என் பாசத்தைத்துணி" யெனக்கேட்டு எலி "என்பற்கள் மிகவும் மெதுவானவை; அவற்றிற்குப் பலமுங்கொஞ்சம்; இத்தனைபெயருடைய பந்தனைகள் எனக்கெப்படி யறுபடும்? உன்றளையை யறுத்ததன்பின் என் சாமர்த்தியத்துக்குத் தக்கவாறு அவர்களுடைய தளையையும் அறுப்பேன்" என, சித்திரக்கிரீவன் "நல்லது, முன்னே யிவர்களுடைய பாசத்தை யறு" என, இரணியகன் "தன்னைக் காப்பாற்றிக்கொண்டு தன் பரிவாரங்களைக் காப்பாற்ற வேண்டும்; அறம் பொருள் இன்பம் வீடாகிய இவைகளுக்குப் பிராணன் முக்கிய சாதனமாகையால் அதைக் காப்பாற்றினு லெல்லாவற்றையுங் காப்பாற்றினுற்போலாகின்றது" என, சித்திரகிரீவன் "இந்த நீதி சரிதான்; ஆயினும் இப்படிப்பட்ட வேதனையினின்

றும் பாலனம் பண்ணுவதற்காகவன்றோ என்னை யிவர்கள் இராஜாவாக நினைக்கின்றார்கள்? ஆகையா லென் பிராணனிடத்தி லிச்சையைவிட்டு இவர்களைப் பிழைப்பிப்பாய்” என, அதைக்கேட்டு எலி “நீ பரம சாது; ஆச்ரித்தவர்களை யாதரிக்கின்றவனா யிருக்கின்றாய்; எசமானனிடத்தில் விசுவாசமாயிருக்கின்ற சேவகனும் சேவகனிடத்திற் பிரீதியா யிருக்கின்ற எசமானனுஞ் சுகமடைவார்கள்” என்று சொல்லி எல்லாவற்றின் பாசங்களையும் அறுத்துச் சித்திரக்கிரீவனுடைய கட்டையுஞ் சேதித்தது. பிறகு ஒன்றுக்கொன்று தழுவிக்கொண்டு பிரியவார்த்தைகள் சொல்லின. சித்திரக்கிரீவன் பரிவாரத்தோடுகூடத் தன்னிடத்திற்குப் போயிற்று. இலகுபதனனென்னுங் காகம் இவற்றையெல்லாம் பார்த்துஆச்சரியப்பட்டு இரணியகனைநோக்கி “நீ பாக்கியவானா யிருக்கின்றாய்; ஆகையால் நானும் உன் சிநேகத்தை விரும்புகின்றேன்; நீ தயைசெய்து எனக்குச்சிநேகனாகவேண்டும்” என அப்போது இரணியகன் “நீ யார்?” எனக் காகம் “நான் இலகுபதனனென்னுங் காக்கை” என, அதைக்கேட்டு எலி “உனக்கு மெனக்கும் வெகுதூரம்; உலகத்திற் சமானஸ்தர்களுக்குள்ளேயே சிநேக முண்டாகின்றது; நானுனக்கிரை; நீ யென்னைத் தின்கிறவன்; இப்படி யிருக்கையி லஃதெப்படியாகும்? ஆபத்துக்கே முகாந்தரமாம்; நரியின் சிநேகத்தினால் ஒருமான் வலையிலகப்பட்டதுபோல் உன்னா லெனக்குப் பொல்லாங்குநேரிடும்” என, இலகுபதனன் அதைக்கேட்டு “மானெப்படி வலையிற் சிக்கிக்கொண்டது?” என, எலி சொல்லத் தொடங்கிற்று:—

“மகததேசத்திற் சண்பகவனத்தில் மானுங் காகமும் ஒன்றுக்கொன்று நட்பா யிருந்தன. அப்படி யிருக்கையில் அந்தமான் தன் மனத்தின்படி புல் முதலானவைகளை மேய்ந்து கொழுத்திருப்பதை ஒரு நரி பார்த்துத் தனக்குள்ளே ஆலோசித்து ‘இவன் நமக்கு அசாத்தியனாயிருக்கின்றான்; ஆகையா லிவனை வஞ்சனையாற் கொல்லவேண்டு’ மென்று இப்படி நிச்சயித்து அதன் சமீபத்திற் போய்ச் ‘சிநேகிதா! சுகமா?’ என, அதைக்கேட்டு மான் ‘நீ யார்?’

என, நரி 'நான் க்ஷுத்திரபுத்தி யென்னும் நரி; இந்தக் காட்டில் யாருமற்ற பாவியாய் ஒருவனாகத் திரிந்துகொண்டிருந்தேன்; இன்றைக்கு உன்னைப்பார்த்து மிகுந்த சந்தோஷத்தை யடைந்தேன்; இப்போது உனக்கு வேலைசெய்துகொண்டு உன்னிடத்திலிருக்க இச்சிக்கின்றேன்' என, இதைக்கேட்டு மான் 'நல்லது' என்றபொழுது போனவுடனே யிரண்டுஞ் சண்பகமரத்தின் கீழேவந்தன. அம்மரத்தின்மேல் வாசம்பண்ணிக்கொண் டிருக்கின்ற மானின் சிநேகிதனாகிய சுபுத்தி என்னுங் காகம் இவ்விரண்டையும் பார்த்து மானை நோக்கி 'ஓ மித்திரா! உன்னண்டையி லிருக்கின்றவன் யாவன்?' என வினவ, 'இந்தச் சம்புக னென்னுடன் சிநேகிக்க விரும்புகின்றான்' என, அப்போது காகம், 'மித்திரனே! சடிதியில்வந்த பழக்கமில்லாதவனை நம்பலாகாது; ஒருவன் குலமுங் நடத்தையுந் தெரியாமல் அவனுக்கிடங்கொடுத்தால் ஒரு பூனைக்குச் சரற்கவ னென்னுங் கழுகு இடங்கொடுத்து இறந்தாற்போல நேரிடும்' என, அதைக்கேட்டு மான் 'சரற்கவனெப்படிச் செத்தான்?' என, காகம் சொல்லுகின்றது:—

“பாகீரதி தீரத்தில் திரிகூடமென்னு மலையில் ஒரு முதிய அத்திமரத்தின் பொந்தில் வாசம் பண்ணிக்கொண்டிருந்த நகமுங் கண்ணுமில்லாத சரற்கவனென்னு மொரு கிழக்கழுகானது மற்றைப் பக்ஷிகள் தன்னிடத்தில் இரக்கம் வைத்துத் தங்களாகாரத்திற் கொஞ்சங்கொஞ்சம் நெருக்கிக் கொடுக்கத் தின்றுகொண்டு ஜீவித்திருக்கையில் ஒருநாள் நெடுஞ்செவிய னென்னும் பூனை பறவைகளுடைய குஞ்சுகளைத் தின்னவேண்டி அந்த மரத்தின் கீழே வர அதைக் குஞ்சுகள் பார்த்துப் பயந்து பெருங்கூச்சலிட்டன. கழுகு கேட்டு 'நீங்களேன் பயப்படுகிறீர்கள்? இங்கே எவன் வந்தான்?' என, இதற்குள்ளே பூனை சரற்கவனைப்பார்த்து 'நான் செத்தே' னெனப் பயப்பட்டு, உடனே மனத்தில் தைரியம் பண்ணிக்கொண்டு, 'இந்தச் சத்துருவைத் தப்பித்துக்கொண்டு ஓடுவதற்கு நமக்குச் சக்தியில்லை, ஆகையால் இவன் சமீபத்திற் போக

வேண்டும், பின்னர் எஃதுண்டாகுமோ அஃதுண்டாகட்டு' மென்று இப்படி நிச்சயித்து அந்தக் கழுகின் அருகிற்போய், 'சமர்த்தனே ! உனக்கு வந்தனம் பண்ணுகின்றேன்' என, கழுகு அதைக்கேட்டு 'நீ யார் ?' என, அப்போது பூனை 'நெடுஞ்செவிய னென்னும் பூனை' என, பின்பு சரற்கவன் 'நீ சீக்கிரமாய் இவ்விடம் விட்டு ஓடிப்போ, இல்லாவிட்டாற் சாவாய்' என, பூனை 'நான் என் விருத்தாந்தத்தைச் சொல்லுகின்றேன் அதைக் கேள் ; பிறகு என்னைக் கொல்லுதல் தக்கதானாற் கொல்லு ; சாதி பேதத்தினாலேயே பிராணிகளைக் கொல்லுவதாவது பூசிப்பதாவது யோக்கியமன்று ; ஆதலால் அவனவன் நடத்தையைப்பார்த்து எது செய்யத்தக்கதோ அதைச் செய்யவேண்டும்' என, கழுகு இதைக்கேட்டுப் பூனையைப் பார்த்து 'நீ யேன்வந்தாய் ? சொல்' எனப் பூனை நான் கங்காதீரத்தில் நித்யஸ்நானம் பண்ணிச் சாந்திராயண முதலாகிய விரதங்கள் ஆசரித்துக்கொண் டிருக்கின்றேன் ; நீ மிகவுந் தருமவானாயிருக்கின்றாயென்று பக்ஷிகளால் எப்போதுங் கேள்விப்பட்டதனாலும் வயது முதிர்ந்த வித்துவான்க ளிடத்தில் தருமங்கேட்க வேண்டுமென்று சாஸ்திர மிருப்பதனாலும் நான் உன்னிடத்திற்கு வந்தேன் ; நீ தர்மத்தைவிட்டு என்னைக் கொல்லத் துணிந்தாய் ; இப்படி யில்லறத்தாருடைய ஆசாரம் யானெங்கும் பார்த்ததில்லை ; சத்துருவுந் தன் வீட்டுக்கு வந்தாற் சாதுக்கள் அவனுக்குச் சன்மானம் பண்ணுவார்கள் ; மரந் தன்னை வெட்டுகின்றவனுக்கு நிழல் கொடுக்கவில்லையோ ? சாதுக்கள் தங்கள் வீட்டுக்கு எவன்வந்தாலும் பூசிக்கின்றார்கள் ; குறையொன்றும் பண்ணுகின்றதில்லை ; அதிதி எவனுடைய வீட்டுக்குவந்து முகம் வாடிப்போகின்றானோ அவ்வீட்டு எசமானனுக்குத் தன் பாவத்தைக் கொடுத்து அவன் புண்ணியத்தைத் தான் கைக்கொண்டு போகின்றானாகையாற் சாதுக்கள் யாவரிடத்திலுந் தயைசெய்கின்றார்கள் ; சந்திரன் சண்டாளன் வீட்டிலும் பிரகாசிக்கின்றான்' என, இதைக்கேட்டுக் கழுகு 'பூனை யிறைச்சிகளைத் தின்னும் ; மேலுங் கொலை செய்யுமென்று நினைத்து இப்படி நான் சொன்னேன்' என. அதைக்கேட்டு நெடுஞ்

செவியன் பூமியைத் தொட்டுச் 'சிவசிவ !' வென்று உச்சரித்துக் காதின்மேற் கையைவைத்து, 'நான் தரும சாஸ்திரங்கள் கேட்டுமிருந்த வைராக்யமடைந்து பொல்லாத கருமங்களை யெல்லாம் விட்டுவிட்டேன் ; அநேக சாஸ்திரங்களிற் கொலைசெய்வதுபோல வேறொரு பாதகமில்லையென்று சொல்லி யிருக்கின்றது ; எவர்கள் மற்றொருவனைக் கொன்று தங்களுக்குச் சுகத்தை விரும்புகின்றார்களோ அவர்கள் நரகத்தையடைகின்றார்கள் ; ஆகையாற் கொலைசெய்யாமலிருப்பதுபோல வேறொரு தருமமில்லை யென்று நினைத்துக் காட்டிலிருந்துகொண்டு காய் கனி கிழங்குகளைச் சாப்பிடுகின்றவர்கள் பாதகமெப்படிப் பண்ணுவார்கள் ?' என்று சொல்லிக் கழுகுக்கு நம்பிக்கைவரப்பண்ணி யதன் வீட்டிலிருந்தது. பிறகு அந்த ருத்திராக்ஷப்பூனை பட்சிகளின் குஞ்சுகளை நாடோறும் அங்கே கொண்டுவந்து தின்றுகொண்டிருக்கத் தலைப்பட்டது. அப்போது குஞ்சிழந்த பறவைகளெல்லாங் கிலேசப்பட்டு ஒன்றாய்க்கூடித் தங்கள் குஞ்சுகளைச் சோதிக்கத் தொடங்கின. பூனை இதையறிந்து அவ்விடம்விட்டு ஓடிப்போயிற்று. அந்தப் பக்ஷிகள் அங்கங்கே பார்த்துக்கொண்டே கழுகின் பொந்தண்டை வந்து பார்க்கையில் அக்குஞ்சுகளுடைய எலும்புகளும் சிறகுகளும் விழுந்து கிடக்கக்கண்டு, 'நம்முடைய குஞ்சுகளை யிந்தத் துரோகிக் கழுகே பக்ஷித்தது ' என்று நிச்சயித்து அந்தக் கழுகைக் கொத்திக் கொன்றன. ஆகையால் ஒருவனுடைய குணந் தெரியாமல் அவனுக்கிடங் கொடுக்கலாகாது" என, அப்போது நரி "ஒருவன் சுபாவஞ் சிநேகிப்பதற்குமுன்னே தெரியுமோ ? நல்லோர்களுக்குச் சுபாவத்தினாலே காரியமில்லை ; அவர்களுடைய சிநேகங் கண்டமாத்திரத்தினாலேயே யாகின்றது" என, மான் அதைக்கேட்டுக் காகத்தைப்பார்த்து "எப்படி நீ யெனக்கு மித்திரனோ அப்படியே யிவனுமிருக்கட்டும் ; நீ யொன்றுக்குந் தடை சொல்லாதே" என்று சொல்லி நரியைத் தன்னிடத்தில் வைத்துக்கொண்டது. பிறகு மூன்றுந் தங்கள் மார்க்கத்தின்படி வயிற்றை நிரப்பிக்கொண்டு இராத்திரிக்கு அந்தவிடத்தில் வந்துகொண்டிருந்தன. இப்படியிருக்கையில் ஒருநாள் நரி மானைப்பார்த்து "மித்திரா

இந்தக் காட்டில் இளவிளவென்று நேர்த்தியான பயிரிருக்கின்றது ; அதை யுனக்குக் காண்பிக்கின்றேன், வா” என்று சொல்லி யதை இட்டுக்கொண்டுபோய்க் காட்டிற்று. அன்றுமுதலாய் அந்த மான் போய்த் தினமானம் பயிரை மேய்ந்துகொண்டிருக்கையில் அதைக் கொல்லைக்காரன் பார்த்து அங்கே வலை கட்டினான். பின்பு மான் அங்கே வழக்கப்படி மேயப்போய் அதிற் சிக்கிக்கொண்டு ‘இப்போ தென்னை மித்திரனைத்தவிர யாவன் விடுவிப்பா’ னென்று மனத்தி லெண்ணிக்கொண் டிருக்கையில் அங்கே நரிவந்து ‘என்னுடைய மனோரதம் நிறைவேறிற்று ; இப்போது, நான் இதன் எலும்பையும் மாமிசத்தையும் நிரம்பத் தின்னுவே’ னென்று வாயூற மனத்தி லெண்ணிக்கொண்டு சும்மா விருந்தது. அதைக்கண்டு மான் ‘மித்திரா ! என் சும்மாவிருக்கின்றாய் ? என்னுடைய தலையைச் சீக்கிரமாய் அறுத்தென்னை விடுவி ; சங்கடகாலத்திற் சிநேகிதர்கள் உடையிழந்தவன் கைபோ லுதவுகின்றார்கள்’ எனச் சம்புகன் ‘ஆம் நீ சொல்வதெல்லாம் மெய்யே; ஆயினும் எனக்கு இன்றைக்குவிரததினமாகையால் நானிந்தத் தோல்வலையைத்தீண்டமாட்டேன் ; நாளைக்கு என்ன சொன்னாலுங் கேட்பேன் ; சிநேகிதனுக்காக நான் பிராணனை விடத்தக்கவன்’ என்றுசொல்லி அதன் கண்ணுக்குத் தப்பித்துக்கொண்டு அங்கே யோரிடத்தில் ஒளிந்துகொண் டிருந்தது. காகம் இராத்திரிக்கு மான் வரவில்லையென்று அதைத் தேடும்பொருட்டு இங்கு மங்குந் திரிந்துகொண்டு அங்கே வருகையில் அந்த மானின் அவஸ்தையைப்பார்த்துச் ‘சிநேகிதா ! உனக்கிந்த அவஸ்தை யிப்படியேன் வந்தது ?’ என, மான் ‘இஃதுன் வார்த்தையைக் கேளாமையால் வந்தபலன்’ என, காகம் ‘உன் கூட்டாளியான சம்புக னெங்கே போனான் ?’ என, மான் ‘என்னுடைய இறைச்சியைத் தின்பதற்காக இங்கேதானே யொளிந்துக்கொண்டிருப்பான்’ என, அதைக்கேட்டுக் காகம் ‘தனக்கிதம்பண்ணுகின்ற மித்திரன் பேச்சைக் கேளாதவனுக்கு விபத்துச் சீக்கிரமாக வரும் ; பின்னுமவன் சத்துருவுக்குச் சந்தோஷம் வருவிக்கின்றான்’ எனச்சொல்லிக்கொண்டிருக்கையிற் கொல்லைக்காரன் கையி லொருதடியை யெடுத்

துக்கொண்டுவர, அவனைப்பார்த்துக் காகம் மானுக்கு 'மித்திரா! நீ இப்போது மூச்சை யடக்கிக்கொண்டு செத்தவனைப்போலக் கிடந்தால் அவ னுன்னைப்பார்த்து நீ செத்தாயென் றெண்ணிக்கொண்டு கட்டிய வலையை யவிழ்த்துச்சுருட்டி வேறோரிடத்தில் வைக்கப்போவான்; அப்போது நான் கத்துகின்றேன்; அதைக் கேட்டமாத்திரத்தில் நீ மிகவும் விரைவா யோட்டம்பிடி' யென்று சொல்லித் தான் அப்படியே பொய்யாக மானின்கண்ணைக் குத்திக்கொண்டிருந்தது. இதற்குள்ளே வந்த கொல்லைக்காரன் மானைப்பார்த்துச் செத்ததென்றெண்ணிக் கட்டியிருந்த வலையை யவிழ்த்து ஓரிடத்தி லொன்றாகக் கூட்டி வைக்கப்போனான். காகம் அதைப்பார்த்துச் சங்கேதப்படி கத்த, மான் அதைக் கேட்டவுடனே யோட்டம் பிடித்தது; அதைக் கொல்ல நினைத்து அந்தக் குடியானவன் தடியை விசிறியெறிய அது பதிவிருந்த நரிமேற் படலும் அந்நரி இறந்தது. ஆகையாற் புண்ணியமாவது பாவமாவது மிகுதியானல் அதன்பலன் உடனே யுண்டாகின்றது" என்று சொல்லிப் பின்னும் எலி "இப்படி மானுக்கு நரியின் சிநேகம்போ லுன்னுறவும் எனக்கு உபயோகமன்று" என, காகம் "உன்னைத் தின்று லெனக்குப் போதுமோ? நீ பிழைத்திருந்தால் நான் சித்திரக்கிரீவனைப்போலச் சுகமடைவேனென்று உன்னட்பை விரும்புகின்றேன்" எனப் பின்னு மிரணியகன் "நீ யெனக்குப்பகைவன்; உன்னுடனே நான் சிநேகம் பண்ணுவேனல்லேன்; சத்துரு தனக்கு அநுகூலமாயிருந்தாலும் அவனோடே சிநேகிக்க லாகாது; தண்ணீர் வெந்நீரானாலும் நெருப்பை யவிக்கும்; எது தக்கதோ அதைச் செய்யவேண்டும்; தண்ணீரில் வண்டியும் பூமியின் மேற் கப்பலும் நடக்குமோ? இதனாற் சத்துருக்களிடத்திலும் வியபிசாரி யிடத்திலும் நம்பிக்கை வைக்கலாகாது" என்று இப்படிப் பலவிதமாகச் சொல்லக் காகம் "நானுன்னுடனே சிநேகிப்பேன், அல்லாவிட்டாற் பட்டினியாகவிருந்து இங்கேயே பிராணனை விடுவேன்; நெருப்பின் வெப்பத்தினாற் பொன் முதலானவை யுருகியொன்றாகின்றன; யாதேனு மொரு நிமித்தத்தினாலே விலங்கு பறவைகள் மித்திரத்துவத்தை யடைகின்றன; பயத்தினாலாகிலும் யா

தோ ராசையினாலாகிலு மூடர்களுக்குச் சிநேக முண்டாகின்றது ; சாதுக்களுடைய சிநேகமோ கண்டமாத்திரத்தி லுண்டாகின்றது. மண்பானை சீக்கிரமாயுமுடையும் ; பிறகு பொருந்துகிறதுமில்லை. மற்றுப் பொற்குடமோ சீக்கிரத்தி லுடையாது ; உடைந்தாலு மொன்றும் ; இப்படியே துர்ச்சன சர்ச்சனர்களுடைய சிநேகமு மிருக்கின்றது" என, இதைக்கேட்டு இரணியகன் "உன் வார்த்தையால் நான் சந்தோஷ மடைந்தேன் ; இப்போதுனக்கும் எனக்குஞ் சிநேகத்துவமிருக்கட்டும். இனிமேல் நாமிருவரு மொருமனதினராயிருக்க வேண்டும் ; உபகாரம் பண்ணுகின்றவன் மித்திரனென்றும், அபகாரம் பண்ணுகின்றவன் சத்துருவென்றும் அறிந்து மனக்களங்கமில்லாமல் நடக்கவேண்டும்" என்று இப்படிப்பேசி நிச்சயித்து இரணியகன் இலகுபதனனுக்குச் சிறிது ஆகாரங் கொடுத்துத் தன் வளையிற் போயிற்று. சிநேகலாபம் பெற்ற காகமும் அதனிடத்திற் செலவு பெற்றுக்கொண்டு தன்னிடத்திற்குப் போயிற்று. அதுமுதலாய் இவைகள் அத்தியந்தச் சிநேகமாய் ஒன்றுக்கொன்று ஆகாரங் கொடுத்துக்கொண்டு பலபல வார்த்தைகள் பேசிக்கொண் டிருக்கையில் ஒருநாள், இலகுபதனன் எலியைப்பார்த்து, "மித்திரா ! இப்போது இங்கே யிரை யகப்படாமையால் வேறோரிடத்திற்குப்போக இச்சிக்கின்றேன்" என, அதைக்கேட்டு இரணியகன் "எங்கேபோகின்றாய் ?" என, அப்போது அது "தண்டகாரணியத்திற் கர்ப்பூரகௌரமென்னுந் தடாகத்திலிருக்கின்ற ஆமையாகிய மந்தரனென்பவன் எனக்குச் சிநேகிதனாயிருக்கின்றான். அவனெனக்கு விதவிதமான மீன்களைக் கொடுத்துப் போஷிப்பான் ; அதைக்குறித்து நானவனிடத்திற்குப் போகின்றேன்" எனக் கேட்டு இரணியகன் "மித்திரா ! அவ்விடத்திற்கு என்னையுங் கொண்டுபோக வேண்டும்; நான் தேசாந்தரம்போக விரும்புகின்றேன்" என, அப்போது காக்கை "நீ யப்படி விரும்புவானேன் ?" என, இரணியகன் "அங்கே போனபின்புசொல்லுவேன்" என, இலகுபதனன் இரணியகனை யெடுத்துக்கொண்டு அவ்விடத்துக்குப் போயிற்று. அவைகளைப் பார்த்து மந்தரன் அவ்விரண்டிக்கும் ஆதித்யம் பண்ணிற்று ;

அப்போது இலகுபதனன் மந்தரனைப்பார்த்து "இந்த விரணியகன் மிகவும் பரோபகாரி; இவன் சித்திரக்கிரீவனை அவன் கூட்டத்தோடுகூட வலையினின்றும் விடுவித்தவன்; அப்போது இவன் நட்புநிலைமையைப் பார்த்து நானு மிவனுடனே நட்புக்கொண்டேன்" என, அதைக்கேட்டுக் கூர்மஞ் சந்தோஷப்பட்டு இரணியகனைப்பார்த்து "மித்திரா! நீ யிந்த மனித சஞ்சாரமில்லாக் காட்டில் வருவானேன்?" என, அப்போது எலி சொல்லுகின்றது:

"சம்பகாவதி யென்னும் பட்டணத்திற் சூடாகர்ணனென்னு மொரு சந்நியாசி யிருந்த சோற்றைக் கப்பரையிற் போட்டு உறியின்மேல் வைத்து விட்டு நித்திரை பண்ணிக்கொண்டிருப்பான்; பின்பு அந்தச் சோற்றை நான் தின்றுகொண்டு சுகமாக இருக்கிற நாளில் அங்கே வீணாகர்ணனென்னு மொருசந்நியாசி வந்த அவனோடுகூட அநேக கதாப்பிரசங்கம் பண்ணிக்கொண்டிருக்கையில் அந்தச் சூடாகர்ணன் கையிலொரு தடியினாலே பூமியைத் தட்டிக்கொண்டு சோற்றைக் காப்பாற்றிக்கொண் டிருந்தான்; அப்போது வீணாகர்ணன் 'என்னுடைய கதையை யநாதரவுபண்ணி நடுவே வேறேயென்ன வியாபாரத்தி லிருக்கின்றாய்?' என, சூடாகர்ணன் 'உன் வார்த்தையை யநாதரவு பண்ணவில்லை; இவ்வெலி யென் பாத்திரத்திலிருக்கின்ற அன்னத்தை நாடோறுந் தின்னுகின்றது; அதையோட்டுகின்றேன்' என, வீணாகர்ணன் அப்போது உறியைப் பார்த்துக் 'கொஞ்ச பல முள்ள இந்த வெலி யிவ்வளவு உயரம் எப்படிக் குதிக்கின்றது? இதற்கேதோ வொரு காரணமிருக்க வேண்டும்; அதுதான் எதுவா யிருக்கலாமென்று ஆலோசித்துப்பார்த்தால் மிகவு மிங்கே திரவிய மிருக்கவேண்டும்; உலகத்தில் திரவியமுள்ளவர்கள் பலமுள்ளவர்களா யிருக்கின்றார்கள்; அசாத்தியமான காரியங்களைச் சாதிக்கின்றார்கள்; இராசத்துவத்துக்கு மிதுகாரணமாகும்; எல்லா மிதனாலாகின்றன' என்று சொல்ல, அந்தச் சந்நியாசி யிதைக் கேட்டு மெய்தானென்று நம்பிப் பூமியை வெட்டி, ஐயோ! என் திரவியத்தை யெடுத்துக்கொண்டான்; அன்று தொடங்கி நானினைத்

துப்போனேன்; பின்பு எனக் கிரையுங் கிடையாததனால் மெள்ள மெள்ள நடந்துகொண்டிருக்கையி லந்தச் சந்நியாசி பார்த்துப் 'பார் இந்த வெலி யிப்போது தன்னுடைய சாதித் தன்மையை யடைந் திருக்கின்றது; முன்னிருந்த தனமதம் போய்விட்டது; ஆகையாற் பணமில்லாதவர்களை யெல்லோரும் அற்பமாய் நினைக்கின்றார்கள்' என, இதைக்கேட்டு நானிப்போது இங்கே யிருப்பது சரியன்று; இதை வேறொருவரோடுஞ் சொல்லலாகாது; பொருளிழவுங் கிருகச் சித்திரமுந்தானமும் மானமும் அவமானமும் ஆயுளுந் தனமுமாகிய விவைகளைப் புத்திமான் வெளிப்படுத்த லாகாது; தன்விதி பிரதிகூலமா யிருக்குங்காலத்திற் பராக்கிரமமும் முயற்சியும் வீணாகின்றன; பணமில்லாதவனுக்கு வனவாசத்தைக்காட்டிலுஞ் சுகமில்லை; எந்த விடத்தில் நாம் பணக்காரராயிருந்தோமோ அந்த விடத்திலேழையா யிருப்பது உத்தம மன்றென்று மறுபடி யிழந்த பணத்தை யெடுத்துக்கொள்ள ஆயத்தப்பட்டேன்; அப்பேது சந்நியாசி யென்னைத் தடியா லடித்தான்; அதனாலே மிகவும் துக்கப்பட்டு உன் சிநேகிதனோடேகூட விங்கே வந்தேன்" என, மந்தரன் "மித்திரா! நீ யிதனால் அதைரியப்பட்டு உறைவிடந்துறந்தோ மென்று வருத்தப்படவேண்டாம்; சாதுக்களெங்கேபோனாலு மரியாதை பெறுகின்றார்கள்; சிங்கம் வேறொருகாட்டுக்குப்போனாலும் புல்லைத்தின்பதில்லை, யானையையே தின்னும்; உற்சாகமுள்ளவன், சந்தோஷமுள்ளவன், தைரியசாலி, சூரன், களங்கமில்லாதவ னிவர்களிடத்திலே இலட்சுமி தானேவந்து அடைகின்றாள்; நீ பணமிழந்தாலும் எப்போதுஞ் சந்தோஷத்தோடே கூடியிருக்கின்றாய்; ஆகையால் உனக்கிருக்கின்ற சுகம் பணத்தாசையால் மயங்குகின்றவர்களுக் கில்லை. இன்னுங்கேள்: மேகச்சாயை, துஷ்டனுடையதயை, இளம் புல், பாலஸ்திரீ,யௌவனம், தனம்இவைகள் வெகுநாளைக்கு நில்லா; ஆகையால் இவை யிழந்துபோனால் அழுதுகொண்டு ஆகாரத்தைக் குறித்து ஏங்கி யிருக்கலாகாது; எவன் கர்ப்பத்தி லிடுகின்றானோ அவன் பிறக்கிறதற்கு முன்னே தானே தாய்முலையிற் பாலை யமைத்து வைக்கின்றான்; அப்படிப்பட்டவன் ஆயுளுள்ளவரைக்கும் காப்

—ற்றமாட்டாரோ? நீ நல்ல விவேகியாயிருக்கின்றாய், ஆதலினிவையெல்லா முனக்குத் தெரிந்தேயிருக்கும்; இனியசிநேகமாய் என்னிடத்திற்சுகமாயிரு" என, இவையெல்லாங்கேட்டு இலகுபதனன் "மந்தரா! நீ சகல குண சம்பன்னன்; மேலுஞ் சற்குணன்; சாதுக்களுக்கு வந்த ஆபத்தைச் சாதுக்களே நிவர்த்தி பண்ணுகின்றார்களென்றறிந்து நாங்களுன்னை நாடிவந்தோம்" என்று சொல்லி, நீண்டபெரிய மரத்தின்மேற்போய் உட்கார்ந்து தன் சுபாவப்படியேயிங்குமங்கும் பார்த்துக்கொண்டிருக்கையில் ஏதோ ஒரு பயமுகாந்தரத்தை யறிந்து அவ்விரண்டுக்கும் "நீங்களுங்களிடத்திலொளித்துக் கொண்டிருங்கள்" என, மந்தரன் தண்ணீரிற்போயிற்று; எலிவளையினுழைந்தது. காகம் விருட்சத்தின் நுனியிலிருந்து பார்க்கையில் ஏதொன்றுங் காணப்படாமையாற் பின்பு அம்மூன்றுமொன்றுக்கொன்று பேசிக்கொண்டிருக்கையி லங்கு அவைகளின் சமீபத்திற் சித்திராங்க னென்னுமொரு கலைமான் வந்து "நான் வேடர் பயத்தால் உங்களிடத்திலிருக்கலாமென்று வந்தேன்" என, அதைக்கேட்டு மந்தர னதற்குச் சன்மானம் பண்ணி "இஃது உன்வீடு, நான் உன் சேவகனென் றெண்ணிக்கொண்டு சுகமா யிருக்கவேண்டும்" என, முகமலர்ந்து மனங்கலந்த வின்சொற் சொல்லப் பிறகு அதுவும் இவைகளுடன் நட்புக்கொண்டிருந்தது. அப்படியிருக்கையில் ஒரு நாட் சித்திராங்கனென்னு மான் புன்மேய வேறோரிடத்திற்குப் போய் மீண்டு சாயங்காலம் வாராமையால் ஆமை 'மேயப்போன மான் இன்றைக்கேன் சாயந்திரம் வரவில்லை?' யென்று விசனப்பட அதையறிந்து எல்லாம் விசனமடைந்தன. மறுநாள் விடியற்காலத்திற் காக்கை பறந்து நாலு பக்கத்திலும் பார்த்துக்கொண்டு போகையிற் சித்திராங்கன் தோல்வலையி லகப்பட்டிருப்பதைக் கண்டு அதனருகிற்போய் "மித்திரா! உனக்கிந்த அவஸ்தையெப்படிநேரிட்டது?" என, மான் "இப்போது இதைக்கேட்டுப் பிரயோசனமில்லை; நீ போய் இரணியகனைச் சீக்கிரமா யிட்டுக்கொண்டுவந்தால் அவன் வேடன் வருகிறதற்குள் என் பாசத்தையறுத்து என்னையும் விடுவிப்பான்; வேடன் வந்தால் ஒருபாயமும் நட

வாது” என, இதைக்கேட்டவுடனே விரைவாகப்போய் அவைக ளுடனே நடந்த காரியத்தைச் சொல்லி யிரணியகனை யிட்டுக்கொண் டு வந்தது. அந்த இரணியகன் மானைப்பார்த்து “நீ சமர்த்தனு யிருக்கையில் வலையி லெப்படி யகப்பட்டாய்?” என, மான் “வல்ல மையிருந்தாலும் வருவது வரும்; இப்போதென்னைச் சீக்கிரமாய் விடுவி; எனக்குப் பழைய பய மிருக்கின்றது; முன் குட்டியா யிருக் கையில் வேடன் வலைகட்டி யென்கூட்டத்தை வளைத்தான்; மற்ற வைகள் பெரிய மான்களா யிருந்தபடியாற் குதித்து வலையைத்தாண் டிப்போயின; எனக்குக் குதித்தோடச் சக்தியில்லாதிருந்ததாதலால் வேடன் பிடித்து இராஜனிடத்திற் கொண்டுபோனான்; இராஜா வாங்கித் தன் பிள்ளை கையிற்கொடுக்க, அங்கே நான் வெகுநாளிருக் கையில் ஒரு நாள் மேககர்ச்சனையைக்கேட்டு மிகவுஞ் சஞ்சலப்பட் டுக் காற்றுமழையாற் பீடிக்கப்பட்டு மான் கூட்டங்கள் ஓடும்போது அவற்றின் பின் நான் ஓடுவேனோ வென்று மனுஷ பாஷையினு லெனக்குள்ளே பேசிக்கொண்டேன்; இராஜகுமாரன் இதைக்கேட் டு நாற்றிசையும் பார்த்து என்னையும் பார்த்தான்; பின்பு சற்று நேரஞ் சும்மாவிருந்து இது மனுஷனைப்போ லெப்படி யுச்சரித்தது? ஆகையால் இஃது ஒரு விசித்திரப் பிராணியா யிருக்கின்றதென்று நினைத்துப் பயத்தினுற் சுரத்தில் விழுந்தான்; பிறகு விடியற்காலத் திற் சோதிஷர்களை யழைப்பித்து அவர்களுடனே யிதைச்சொல்ல, அவர்களெல்லாம் ‘மிருகங்களும் மனிதரைப்போற் பேசுகின்றன; ஆயினும் நமக்கு முன்னே பேசுகின்றதில்லை; அதுவு முன்னைப்பா ராமற் பேசிற்று; இதற்காக நீ பயப்படவேண்டாம்; இது யாதொரு விசித்திரப்பிராணியும் அன்று; இதனாலுனக்கு எவ்வளவும் பய மில்லை’ யென இதைக்கேட்டு இராஜகுமாரன் என்னைவிட்டு விட் டான்; பிறகு இக்காட்டில் வந்தேன்; இப்படி முன்னொருதரம் வலையிலகப்பட்டேன் ஆகையால் என்னைச் சீக்கிரமாக விடச்சொல் லுகின்றேன்” என, இதற்குள்ளே மித்திரத்துவத்தினாலே மந்த ரனும் அங்கேவந்து இரணியகனைப் பார்த்து, “மித்திரா! இப்ப டித் தாமசம் பண்ணுகிறது சரியன்று; இப்போது வேடன் வந்

தால் நாமெல்லாம் ஓடிப்போவோம், வலையிலகப்பட்ட சித்திராங்கனைப் பிடித்துக்கொள்வான், இதைக்குறித்து எனக்குக் கிலேசமாயிருக்கின்றது; நினைப்பின்படி மனத்திலிருப்பதை யறிகின்ற சிநேகிதனும் மனோகரமான ஸ்த்ரீயும் பிறர் துக்க மறிகின்ற பிரபுவுங் கிடைப்ப தருமை" என்று இப்படி மந்தரன் சொல்லிக் கொண்டிருக்கையில் வேடன் சடிதியில் எமனைப்போல் தூரத்தில் வருவதை லகுபதனன் கண்டு எலியைப் பார்த்து, "மித்திரா! வேடன் வந்தான்; இப்போது பெரிய சங்கடம்நேரிட்டது" என, அதைக் கேட்டு இரணியகன் அதிசீக்கிரமாய்ச் சித்திராங்கன் வலையை யறுத்தது. அறுத்தவுடனே, அருகில்வந்த வேடனைப் பார்த்து எல்லாம் ஓட்டம் பிடிக்க, அப்போது அவன் வியசன மடைந்து நாலண்டையும் பார்க்கையில், மந்தரன் றன்னடையின்படி நடந்துகொண்டிருந்தது. வேடன் அதைப் பார்த்துத் தன் வில்லிலதைச் சேர்த்துக் கட்டிக்கொண்டு கொஞ்சஞ் சந்தோஷத்தோடே போகும்போது, அதைப்பார்த்து மானு மெலியுங் காகமும் மிகவு மனவருத்தப்பட்டு 'இப்போது என்ன செய்யலாம்?' என்று வேடன் பின்னேபோகத் தொடங்கின. அப்போது இரணியகன் "ஒரு சங்கட நிவர்த்தியாகிறதற்குள்ளே மற்றொன்று வந்து நேரிட்டது; ஆகையால் ஜீவனுக்குத் தேகத்தோடு கூட அநேகந் துக்கங்களை யனுபவிக்க வேண்டி யிருக்கின்றது; இந்தத் துன்பஞ் சினேகத்தில் நமக்கு வந்தது; எவன் மித்திரனிடத்தில் விசுவாசம் வைக்கின்றானோ அவனுக்கு அந்த விசுவாசம் தாய் தந்தை சகோதரன் பிள்ளை சுற்றங்களிடத்திலு மிராது" என்றிப்படி வெகுவிதமாய்த் துக்கித்துப் பின்னும் "வேடன் தூரமாகப் போவதற்கு முன்னே மந்தரனை விடத்தக்க வுபாயம் பண்ணவேண்டும்; பிறகு ஆகமாட்டாது" என, அப்போது அவைகள் "என்ன செய்யலாம்? சொல்" என, எலி, "சித்திராங்கன் ஏறிகரையிற் செத்தவனைப்போலக் கிடக்கவேண்டும்; அதன்மேற் காக முட்கார்ந்துகொண்டு பொய்யாகக் குத்த வேண்டும்; அப்படியிருந்தால் அதை வேடன் பார்த்து மந்தரனைப் பூமியில் வைத்துவிட்டு மானண்டை போவான்; இதற்

குள்ளே நான் ஆமையின் கட்டைச் சேதிப்பேன்; பிறகு அவ்வாமை தண்ணீரி லோடிப்போம்" என, இதைக்கேட்டு எல்லாம் அவ்வாறே செய்து மந்தரனை விடுவித்தன. பிறகு அந்த வேடன் வாய்த் தவிடும்போய் அடுப்பு நெருப்பு மிழந்தவள்போல வெட்கி மிவும் வருத்தமடைந்து "கைக்கு வாராத பெரிய லாபத்தை யிச்சித்துக் கைக்குவந்த சிறியலாபத்தை யிழந்தேனே! யார்க்கும் அதிக ஆசை அதிக நஷ்டம்; கிடைத்தமட்டும் போதுமென்று நினைக்கின்றவனே மகாபுருஷன்" என்று இங்ஙனமெண்ணிக்கொண்டு தன் வீட்டுக்குப் போனவுடனே அந்தக்காகமும் ஆமையும் மானும் எலியும் மிகவுஞ் சந்தோஷமடைந்து தங்களிடத்தில் முன்போல வாழ்ந்திருந்தன."

மூன்றாவது

சந்திவிக்கிரகம

அல்லது

அடுத்துக்கெடுத்தல்

"முன்னே பகையாளிகளா யிருந்தவர்களுடைய விசுவாசத்தில் நம்பிக்கை வைக்கலாகாது; நம்பினால் எப்படிக் காகங் கோட்டான்களின் குகையைக்கொளுத்தி நாசம் பண்ணினதோ அப்படி நேரிடும்" என, அதைக்கேட்டு இராஜகுமாரர்கள் "அஃதெப்படி? சொல்லும்" எனச் சோமசன்மா சொல்லுகின்றான்:—

"தென்றேசத்தில் மயிலை நகரத்தின் சமீபத்தில் ஒரு பெரிய ஆலமரத்தில் மேகவர்ண னென்னுங் காகராஜன் றன் கூட்டங்களோடு இருக்கையில் அங்கே உருமர்த்தன னென்னும் இராஜ கோட்டான் கூட்டத்தோடு மலைக்குகையி லிருந்துவந்து ஆலமரத்தை வளைத்துக்கொண்டு இராத்திரியி லகப்பட்ட காகத்தையெல்லாங் கொன்றுவிட்டு நாடோறும் போய்க்கொண்டிருந்தது. அதுபற்றி அவ்விடத்தை விட்டுவிடும்படி காக்கைகட்கு நேரிட்டதனால் மேகவர்ணன் றன் மந்திரிகளையழைத்து "நம்பகைவர் நாடோறு மிங்கிராத்தோறும்வந்து காக்கைகளைக் கொல்லுகின்றார்கள்; நமக்கோ இரவிற் கண் தெரிகின்றதில்லை; மேலுமவர்க ளிருப்பிடமு மறியோம்; அறிந்தாலங்கேபோய் அவைகளைக் கொல்லலாம்; பகைவரையசட்டை பண்ணினால் அது நோய்போற் பெருகிப் பொல்லாங்கு விளைவிக்கும்; ஆதலா லிப்போழ்து சந்திவிக்கிரகம், பேதம், கலகமென்னு மிவற்றுள் தக்கது இதுவென்று சொல்லுவீர்கள்" என, இதைக் கேட்டு மந்திரிகள் "அரசன்கேட்பதற்கு முன்னேதானே பிரதானிகள் இதஞ்சொல்லவேண்டும்; இல்லாவிடிற் கேட்டபிறகாயினும் விரைவாய்ச் சொல்லவேண்டும்; அப்படிச்செய்யாமற் சும்மா இச்சகம் பேசுகின்றவனை அரசனுக்குச்சத்துருவென்று நினைக்கவேண்

டும்" என்று இவ்வாறு சொல்லிப் பின்பு மந்திரிகள் ஐந்தும் 'என்ன செய்வோம்?' என்று ஒன்றுக்கொன்று ஆலோசிக்கத் தொடங்கின. அப்போது அவைகளில் உத்தமசீவியென்பது அரசனைநோக்கி "மகாராஜாவே! வலியர்வர்களுடனே பகைபண்ணலாகாது; சமாதானமே தகுந்தது; பகைவர்களை வணங்கிக் காலம்பார்த்து மோசம் பண்ணுகின்றவர்கள் சுகமடைகின்றார்கள்; ஆற்றில் தண்ணீர் நிரம்பிப் பெருகி வருகையில் வணங்கியசெடி நாசமடையாமற் பின்பு முன்போல் நிமிர்ந்திருக்கின்றதே; நெருக்கமானகாலத்தில் துஷ்டர்களுடனே சமாதானம்பண்ணி யுயிரைக் காப்பாற்றினாற் பின்பு எல்லாச் செல்வமுஞ் சம்பாதிக்கலாம்; மேலுந் தனக்குப் பல பேர் பகைவர்க ளிருந்தால் அவர்களி லொருவனோடு உறவுகொண்டு எல்லாரையுங் கெடுக்கவேண்டும்; நிலமும் நட்பும் பொருளுமாகிய இவற்றி னிருப்பைத் தன்னிடத்திலும் மாற்றானிடத்திலும் இவ்வளவென்று ஆராய்ந்துகொண்டு கூடுமானாற் பின்பு அவனுட னெதிர்க்க வேண்டும்; இல்லாவிடில் முதலிற் கூர்மவிருத்தியை யநுசரித்துப் பின்னர்த்தனக்குப்பலமுள்ள காலத்திற் கிருஷ்ணசர்ப்பத்தின்வியாபாரத்தை யநுசரிக்கவேண்டும்; கெலிப்புந் தோற்பு மொருவன் பங்கல்ல; ஆதலான் மாற்றானுடைய வலியும் வலியின்மையும் பார்த்து எது செய்யத்தக்கதோ அதைச்செய்யவேண்டும்; அச்சமயத்திற் கொக்குப்போ லுறங்கியிருந்து சமயத்தில் அதன் குத்தைப்போ லிருக்கவென்று பெரியோருஞ் சொல்லியிருக்கின்றார்களே" என இப்படியதன் வாக்கியத்தைக்கேட்டு இரண்டாம் பிரதானியைப்பார்த்து "உன் கருத்தென்ன? சொல்" என, இரண்டாம் மந்திரி "அவன் சொன்னவற்றிற் சிறிதும் நன்மையில்லை; நெருப்பினாற் காய்ச்சின நீர் அந்தநெருப்பை யவியாதோ? நம்மைக் கோட்டான்கள் வருத்துகின்றன வென்று அவர்களோடு சந்தி பண்ணினாற் கொல்லுவார்கள்; விஷமச்சுரம் அப்பியங்கனத்தால் வளர்வதுபோலவும் நெய்யினால் நெருப்பு விருத்தியாவதுபோலவும் பொல்லாங்கு சம்பவிக்கும்; சத்துரு வலியவன் நாமெளியோ மென்பீரானா லதற்குச் சிந்தையில்லை; யானை பெரியதாயிருந்தாலு மதைச் சிங்கக்குட்டி கொல்

டிப்பட்ட விஷித்தத்தைத் தோண்மேலேன் சுமந்து போகவேண்டும் ?" என, அப்போதும் அந்தப் பிராமணன் அப்படியே சொல்லிவிட்டுப்போகத் தொடங்கினன். உடனே மூன்றுங்கபடி யெதிரிட்டு ஓ ஐயனே ! கழுதையைத் தீண்டுகிறவனுக்குச் சசேலஸ்நானஞ் சொல்லியிருக்க, நீ யதை யெப்படிக் கொண்டுபோகத் துணிந்தாய்?' என, அந்தணன் இந்த ஆட்டைக்குறித்து மனிதர்கள் பலவிதமாகத் தர்க்கிக்கின்றபடியால் இஃது ஏதோ வோர் இராட்சசனு யிருக்கும் என்றெண்ணி, அதைப் பூமியில்விடுத்துவிட்டுத் தன் வீட்டுக்குப்போனன்; அதன்பின் அவ்வஞ்சகர்கள் அதைக் கொன்று தின்றார்கள். ஆகையால் நான் சத்துருவை வஞ்சித்து உன் கருமத்தை முடிப்பேன்; நான் என்ன உபாயஞ் சொல்லுகின்றேனே அதன்படியே செய்; நீ சத்துருபக்ஷத்தி லிருக்கின்றாயென்றென்னை நிந்தித்து வேறொன்றனிரத்தத்தை யென்மேலெல்லாம் பூசி யாலமரத்தின் கீழே யெறிந்துவிட்டு, நீ கூட்டங்களோடுகூடமலையின்மேற் போயிருந்தாற் கோட்டான்கள் தங்கள் பகைவர்களுக்கு இவன் விரோதியா யிருக்கின்றானென் றெண்ணிக்கொள்ளுவார்கள்; பிறகு நானவர்கட்கு நம்பிக்கை வருவித்துத் துர்க்கமுதலானவற்றின் உளவறிந்து சத்துருநாசம் பண்ணுவேன்; அதுவரைக்கும் நீ யங்கேயிரு; இவ்வாலோசனை நான் முன்னமேசெய்து இப்போது உனக்குச் சொன்னேன்" என, அப்படி யதனுள்ளுறையைக்கேட்டு மேகவர்ணன் "அத்தியந்தம் பிரியமான உன் பிராணனை நீ துரும்புபோல் நினைத்தாய்" என, பிரதானி "இராசகாரியத்துக்காகச் சேவகர்கள் இப்படியே செய்யவேண்டும்; இடர்வருங்காலத்திற் சேவகர்கள் உதவுவார்களென்று அரசர்கள் தாம் அபிமானத்தினு லவர்களைப் பரிபாலிக்கின்றார்கள்; அப்படி யுதவாவிட்டாற் பரிபாலனத்துக்குப் பயனென்னை ?" என்று இப்படிச்சொல்லிப் போய்க் கலகத்துக்கு ஆரம்பித்தது. இவ்விரகசிய மிரண்டாம்பேருக்குத் தெரியாது. அதனால் மற்றைப்பறவைகளதைக் கொல்லத் தீர்மானிக்க, அப்போது மேகவர்ணன் "நீங்களவனைத் தண்டிக்கவேண்டாம்; இவன் பகையாளிக்கு நன்மைபண்ணுகின்ற

டிப்பட்ட விஷித்தத்தைத் தோண்மேலேன் சுமந்து போகவேண்டும் ?" என, அப்போதும் அந்தப் பிராமணன் அப்படியே சொல்லிவிட்டுப்போகத் தொடங்கினன். உடனே மூன்றாங்கபடி யெதிரிட்டு ஓ ஐயனே ! கழுதையைத் தீண்டுகிறவனுக்குச் சசேலஸ்நானஞ் சொல்லியிருக்க, நீ யதை யெப்படிக் கொண்டுபோகத் துணிந்தாய்?' என, அந்தணன் இந்த ஆட்டைக்குறித்து மனிதர்கள் பலவிதமாகத் தர்க்கிக்கின்றபடியால் இஃது ஏதோ வோர் இராட்சசனு யிருக்கும் என்றெண்ணி, அதைப் பூமியில்விடுத்துவிட்டுத் தன் வீட்டுக்குப்போனன் ; அதன்பின் அவ்வஞ்சகர்கள் அதைக் கொன்று தின்றார்கள். ஆகையால் நான் சத்துருவை வஞ்சித்து உன் கருமத்தை முடிப்பேன் ; நான் என்ன உபாயஞ் சொல்லுகின்றேனே அதன்படியே செய் ; நீ சத்துருபக்ஷத்தி லிருக்கின்றாயென்றென்னை நிந்தித்து வேறொன்றனிரத்தத்தை யென்மேலெல்லாம் பூசி யாலமரத்தின் கீழே யெறிந்துவிட்டு, நீ கூட்டங்களோடுகூட மலையின்மேற் போயிருந்தாற் கோட்டான்கள் தங்கள் பகைவர்களுக்கு இவன் விரோதியா யிருக்கின்றானென் றெண்ணிக்கொள்ளுவார்கள் ; பிறகு நானவர்கட்கு நம்பிக்கை வருவித்துத் துர்க்கமுதலானவற்றின் உளவறிந்து சத்துருநாசம் பண்ணுவேன் ; அதுவரைக்கும் நீ யங்கேயிரு ; இவ்வாலோசனை நான் முன்னமேசெய்து இப்போது உனக்குச் சொன்னேன் " என, அப்படி யதனுள்ளுறையைக்கேட்டு மேகவர்ணன் " அத்தியந்தம் பிரியமான உன் பிராணனை நீ துரும்புபோல் நினைத்தாய் " என, பிரதானி " இராசகாரியத்துக்காகச் சேவகர்கள் இப்படியே செய்யவேண்டும் ; இடர்வருங்காலத்திற் சேவகர்கள் உதவுவார்களென்று அரசர்கள் தாம் அபிமானத்தினு லவர்களைப் பரிபாலிக்கின்றார்கள் ; அப்படி யுதவாவிட்டாற் பரிபாலனத்துக்குப் பயனென்னே ?" என்று இப்படிச்சொல்லிப் போய்க் கலகத்துக்கு ஆரம்பித்தது. இவ்விரகசிய மிரண்டாம்பேருக்குத் தெரியாது. அதனுல் மற்றைப்பறவைகளதைக் கொல்லத் தீர்மானிக்க, அப்போது மேகவர்ணன் " நீங்களவனைத் தண்டிக்கவேண்டாம் ; இவன் பகையாளிக்கு நன்மைபண்ணுகின்ற

டிப்பட்ட நிஷித்தத்தைத் தோண்மேலேன் சுமந்து போகவேண்டும் ?" என, அப்போதும் அந்தப் பிராமணன் அப்படியே சொல்லி விட்டுப்போகத் தொடங்கினான். உடனே மூன்றாங்கபடி யெதிரிட்டு ஓ ஐயனே ! கழுதையைத் தீண்டுகிறவனுக்குச் சசேலஸ் நானஞ் சொல்லியிருக்க, நீ யதை யெப்படிக் கொண்டுபோகத் துணிந்தாய்?" என, அந்தணன் இந்த ஆட்டைக்குறித்து மனிதர்கள் பலவிதமாகத் தர்க்கிக்கின்றபடியால் இஃது ஏதோ வோர் இராட்சசனா யிருக்கும் என்றெண்ணி, அதைப் பூமியில்விடுத்துவிட்டுத் தன் வீட்டுக்குப்போனான்; அதன்பின் அவ்வஞ்சகர்கள் அதைக் கொன்று தின்றார்கள். ஆகையால் நான் சத்துருவை வஞ்சித்து உன் கருமத்தை முடிப்பேன்; நான் என்ன உபாயஞ் சொல்லுகின்றேனோ அதன்படியே செய்; நீ சத்துருபக்ஷத்தி லிருக்கின்றாயென் றென்னை நிந்தித்து வேறொன்றனிரத்தத்தை யென்மேலெல்லாம் பூசி யாலமரத்தின் கீழே யெறிந்துவிட்டு, நீ கூட்டங்களோடுகூட மலையின்மேற் போயிருந்தாற் கோட்டான்கள் தங்கள் பகைவர்களுக்கு இவன் விரோதியா யிருக்கின்றானென் றெண்ணிக்கொள்ளுவார்கள்; பிறகு நானவர்கட்கு நம்பிக்கை வருவித்துத் துர்க்கமுதலானவற்றின் உளவறிந்து சத்துருநாசம் பண்ணுவேன்; அதுவரைக்கும் நீ யங்கேயிரு; இவ்வாலோசனை நான் முன்னமேசெய்து இப்போது உனக்குச் சொன்னேன்" என, அப்படி யதனுள்ளுறையைக்கேட்டு மேகவர்ணன் "அத்தியந்தம் பிரியமான உன் பிராணனை நீ துரும்புபோல் நினைத்தாய்" என, பிரதானி "இராசகாரியத்துக்காகச் சேவகர்கள் இப்படியே செய்யவேண்டும்; இடர்வருங்காலத்திற் சேவகர்கள் உதவுவார்களென்று அரசர்கள் தாம் அபிமானத்தினு லவர்களைப் பரிபாலிக்கின்றார்கள்; அப்படி யுதவாவிட்டாற் பரிபாலனத்துக்குப் பயனென்னை ?" என்று இப்படிச்சொல்லிப் போய்க் கலகத்துக்கு ஆரம்பித்தது. இவ்விரகசிய மிரண்டாம்பேருக்குத் தெரியாது. அதனால் மற்றைப்பறவைக ளதைக் கொல்லத் தீர்மானிக்க, அப்போது மேகவர்ணன் "நீங்களவனைத் தண்டிக்கவேண்டாம்; இவன் பகையாளிக்கு நன்மைபண்ணுகின்ற

டிப்பட்ட விஷித்தத்தைத் தோண்மேலேன் சுமந்து போகவேண்டும் ?" என, அப்போதும் அந்தப் பிராமணன் அப்படியே சொல்லி விட்டுப்போகத் தொடங்கினன். உடனே மூன்றாங்கபடி யெதிரிட்டு ஓ ஐயனே ! கழுதையைத் தீண்டுகிறவனுக்குச் சசேலஸ் நானஞ் சொல்லியிருக்க, நீ யதை யெப்படிக் கொண்டுபோகத் துணிந்தாய்?' என, அந்தணன் இந்த ஆட்டைக்குறித்து மனிதர்கள் பலவிதமாகத் தர்க்கிக்கின்றபடியால் இஃது ஏதோ வோர் இராட்சசனு யிருக்கும் என்றெண்ணி, அதைப் பூமியில்விடுத்துவிட்டுத் தன் வீட்டுக்குப்போனன்; அதன்பின் அவ்வஞ்சகர்கள் அதைக் கொன்று தின்றார்கள். ஆகையால் நான் சத்துருவை வஞ்சித்து உன் கருமத்தை முடிப்பேன்; நான் என்ன உபாயஞ் சொல்லுகின்றேனே அதன்படியே செய்; நீ சத்துருபக்ஷத்தி லிருக்கின்றாயென் றென்னை நிந்தித்து வேறொன்றனிரத்தத்தை யென்மேலெல்லாம் பூசி யாலமரத்தின் கீழே யெறிந்துவிட்டு, நீ கூட்டங்களோடுகூட மலையின்மேற் போயிருந்தாற் கோட்டான்கள் தங்கள் பகைவர்களுக்கு இவன் விரோதியா யிருக்கின்றானென் றெண்ணிக்கொள்ளுவார்கள்; பிறகு நானவர்கட்கு நம்பிக்கை வருவித்துத் துர்க்கமுதலானவற்றின் உளவறிந்து சத்துருநாசம் பண்ணுவேன்; அதுவரைக்கும் நீ யங்கேயிரு; இவ்வாலோசனை நான் முன்னமேசெய்து இப்போது உனக்குச் சொன்னேன்" என, அப்படி யதனுள்ளுறையைக்கேட்டு மேகவர்ணன் "அத்தியந்தம் பிரியமான உன் பிராணனை நீ துரும்புபோல் நினைத்தாய்" என, பிரதானி "இராசகாரியத்துக்காகச் சேவகர்கள் இப்படியே செய்யவேண்டும்; இடர்வருங்காலத்திற் சேவகர்கள் உதவுவார்களென்று அரசர்கள் தாம் அபிமானத்தினு லவர்களைப் பரிபாலிக்கின்றார்கள்; அப்படி யுதவாவிட்டாற் பரிபாலனத்துக்குப் பயனென்னே ?" என்று இப்படிச்சொல்லிப் போய்க் கலகத்துக்கு ஆரம்பித்தது. இவ்விரகசிய மிரண்டாம்பேருக்குத் தெரியாது. அதனுல் மற்றைப்பறவைகளதைக் கொல்லத் தீர்மானிக்க, அப்போது மேகவர்ணன் "நீங்களவனைத் தண்டிக்கவேண்டாம்; இவன் பகையாளிக்கு நன்மைபண்ணுகின்ற

சிலர் தண்ணீர்க்காகச் செத்தார்கள்; ஆகையால் மிகவுந் தண்ணீருள்ள இடந்தேடிப்போ யிருப்போமானால் எல்லாருஞ் சுகமடைவோம்' என இவற்றின் பேச்சைக்கேட்டுத் தன் மனத்தில் யோசித்து 'இதற்கைந்துநாளைப்பயணதூரத்தி லொரு பெரியமடு பாதாளகங்கையினால் நிறைந்திருக்கின்றது. அங்கேபோனால் எல்லோர்க்கும் மிகவுந் தண்ணீர் கிடைக்கு' மென்று இப்படி யுறுதிசெய்துகொண்டு அவைகள் அப்படியே யங்கேபோய்த் தெளிந்த நீரைக் கண்டு அந்திவரைக்குஞ் சலக்கிரீடை செய்துகொண்டிருந்து கரையில் வந்திருந்தன. அப்போது அங்கே வாசம் பண்ணிக்கொண்டிருந்த வெகுமுயல்களிற் சில யானைகளின் காலின்கீழ் அகப்பட்டிறந்தன; சிலச்சில முயல்களுக்குக் கால்கைகள் ஒடிந்தன; சிலவற்றிற்கு உடல்கள் நொறுங்கின; சிற்சிலவற்றிற்கு குடல்கள் சரிந்தன; சிலச்சில இரத்தங்கான்று இறந்தன. இப்படி பொல்லாங்கு நேரிட்டவுடனே, சில முயல்கள் ளொன்றுய்க்கூடி 'இன்றைக்கு யானைக்கூட்டம் வந்து நம்மை யழித்தது; இப்படியே தினமுமிருக்கும். இங்கே கிட்ட வேறே தண்ணீரில்லை; இதனால் நமக்கு மீளாச்சங்கடம் நேரிட்டது; யானை தொட்டாலும், பாம்பு மோந்தாலும், அரசன் நகைத்தாலும் துர்ஜனர் மரியாதை பண்ணினாலு முயிர்ச்சேதம் வரும்; ஆனதனால் இதற்கேதாவது உபாயம் யோசிக்கவேண்டும்' என, அப்போது சில முயல்கள் 'உயிரைக்காப்பாற்றும் பொருட்டுப் பூமியை விட்டுவிடலாமென் றிருக்கின்றதனால் இவ்விடத்தை விட்டுவிடவேண்டும்' என, இதைக்கேட்டு வேறுசிலமுயல்கள் 'நம்முடைய பெரியோர்கள் வாழ்ந்த இடத்தைவிட்டு வேறிடத்திற் போகாமல் யானைகள் அஞ்சத்தக்க தந்திரமெடுக்கவேண்டும்; நஞ்சில்லாப் பாம்பும் படமெடுத்தா லதற்கு நஞ்சில்லா திருந்தும் பயங்கரமாயிருக்கின்ற படத்தின் வடிவைப்பார்த்து மனிதர்கள் பயப்படுகின்றார்கள்' என அதைக்கேட்டு ஒருமுயல் 'யானைகள் பயப்படும்படி ஓருபாயஞ் சொல்லுகின்றேன்: விசயதத்த னென்னும் பெரிய நம்முடைய சுவாமி சந்திரமண்டலத்தி லிருக்கின்றான்; அவன் தூதனுப்பினானென்று ஒரு நிமித்தம் வைத்து ஒரு பொய்த்தூதனை யவர்களிடத்துக்

டிப்பட்ட விஷத்தத்தைத் தோண்மேலேன் சுமந்து போகவேண்டும் ?' என, அப்போதும் அந்தப் பிராமணன் அப்படியே சொல்லி விட்டுப்போகத் தொடங்கினன். உடனே மூன்றுங்கபடி யெதிரிட்டு ஓ ஐயனே ! கழுதையைத் தீண்டுகிறவனுக்குச் சசேலஸ்நானஞ் சொல்லியிருக்க, நீ யதை யெப்படிக் கொண்டுபோகத் துணிந்தாய்?' என, அந்தணன் இந்த ஆட்டைக்குறித்து மனிதர்கள் பலவிதமாகத் தர்க்கிக்கின்றபடியால் இஃது ஏதோ வோர் இராட்சசனு யிருக்கும் என்றெண்ணி, அதைப் பூமியில்விடுத்துவிட்டுத் தன் வீட்டுக்குப்போனன் ; அதன்பின் அவ்வஞ்சகர்கள் அதைக் கொன்று தின்றார்கள். ஆகையால் நான் சத்துருவை வஞ்சித்து உன் கருமத்தை முடிப்பேன் ; நான் என்ன உபாயஞ் சொல்லுகின்றேனே அதன்படியே செய் ; நீ சத்துருபக்ஷத்தி லிருக்கின்றாயென்றென்னை சிந்தித்து வேறொன்றனிரத்தத்தை யென்மேலெல்லாம் பூசி யாலமரத்தின் கீழே யெறிந்துவிட்டு, நீ கூட்டங்களோடுகூட மலையின்மேற் போயிருந்தாற் கோட்டான்கள் தங்கள் பகைவர்களுக்கு இவன் விரோதியா யிருக்கின்றானென் றெண்ணிக்கொள்ளுவார்கள் ; பிறகு நானவர்கட்கு நம்பிக்கை வருவித்துத் துர்க்கமுதலானவற்றின் உளவறிந்து சத்துருநாசம் பண்ணுவேன் ; அதுவரைக்கும் நீ யங்கேயிரு ; இவ்வாலோசனை நான் முன்னமேசெய்து இப்போது உனக்குச் சொன்னேன் " என, அப்படி யதனுள்ளுறையைக்கேட்டு மேகவர்ணன் " அத்தியந்தம் பிரியமான உன் பிராணனை நீ துரும்புபோல் நினைத்தாய் " என, பிரதானி " இராசகாரியத்துக்காகச் சேவகர்கள் இப்படியே செய்யவேண்டும் ; இடர்வருங்காலத்திற் சேவகர்கள் உதவுவார்களென்று அரசர்கள் தாம் அபிமானத்தினு லவர்களைப் பரிபாலிக்கின்றார்கள் ; அப்படி யுதவாவிட்டாற் பரிபாலனத்துக்குப் பயனென்னை ?" என்று இப்படிச்சொல்லிப் போய்க் கலகத்துக்கு ஆரம்பித்தது. இவ்விரகசிய மிரண்டாம்பேருக்குத் தெரியாது. அதனல் மற்றைப்பறவைகளதைக் கொல்லத் தீர்மானிக்க, அப்போது மேகவர்ணன் " நீங்களவனைத் தண்டிக்கவேண்டாம் ; இவன் பகையாளிக்கு நன்மைபண்ணுகின்ற

டிப்பட்ட விஷித்ததைத் தோண்மேலேன் சுமந்து போகவேண்டும்?" என, அப்போதும் அந்தப் பிராமணன் அப்படியே சொல்லி விட்டுப்போகத் தொடங்கினன். உடனே மூன்றாங்கபடி யெதிரிட்டு ஓ ஐயனே! கழுதையைத் தீண்டுகிறவனுக்குச் சசேலஸ் நானஞ் சொல்லியிருக்க, நீ யதை யெப்படிக் கொண்டுபோகத் துணிந்தாய்?' என, அந்தணன் இந்த ஆட்டைக்குறித்து மனிதர்கள் பலவிதமாகத் தர்க்கிக்கின்றபடியால் இஃது ஏதோ வோர் இராட்சசனு யிருக்கும் என்றெண்ணி, அதைப் பூமியில்விடுத்துவிட்டுத் தன் வீட்டுக்குப்போனன்; அதன்பின் அவ்வஞ்சகர்கள் அதைக் கொன்று தின்றார்கள். ஆகையால் நான் சத்துருவை வஞ்சித்து உன் கருமத்தை முடிப்பேன்; நான் என்ன உபாயஞ் சொல்லுகின்றேனே அதன்படியே செய்; நீ சத்துருபக்ஷத்தி லிருக்கின்றாயென் றென்னை நிந்தித்து வேறொன்றனிரத்தத்தை யென்மேலெல்லாம் பூசி யாலமரத்தின் கீழே யெறிந்துவிட்டு, நீ கூட்டங்களோடுகூட மலையின்மேற் போயிருந்தாற் கோட்டான்கள் தங்கள் பகைவர்களுக்கு இவன் விரோதியா யிருக்கின்றானென் றெண்ணிக்கொள்ளுவார்கள்; பிறகு நானவர்கட்கு நம்பிக்கை வருவித்துத் துர்க்கமுதலானவற்றின் உளவறிந்து சத்துருநாசம் பண்ணுவேன்; அதுவரைக்கும் நீ யங்கேயிரு; இவ்வாலோசனை நான் முன்னமேசெய்து இப்போது உனக்குச் சொன்னேன்" என, அப்படி யதனுள்ளுறையைக்கேட்டு மேகவர்ணன் "அத்தியந்தம் பிரியமான உன் பிராணனை நீ துரும்புபோல் நினைத்தாய்" என, பிரதானி "இராசகாரியத்துக்காகச் சேவகர்கள் இப்படியே செய்யவேண்டும்; இடர்வருங்காலத்திற் சேவகர்கள் உதவுவார்களென்று அரசர்கள் தாம் அபிமானத்தினு லவர்களைப் பரிபாலிக்கின்றார்கள்; அப்படி யுதவாவிட்டாற் பரிபாலனத்துக்குப் பயனென்னை?" என்று இப்படிச்சொல்லிப் போய்க் கலகத்துக்கு ஆரம்பித்தது. இவ்விரகசிய மிரண்டாம்பேருக்குத் தெரியாது. அதனால் மற்றைப்பறவைகளதைக் கொல்லத் தீர்மானிக்க, அப்போது மேகவர்ணன் "நீங்களவனைத் தண்டிக்கவேண்டாம்; இவன் பகையாளிக்கு நன்மைபண்ணுகின்ற

டிப்பட்ட விஷித்ததத்தைத் தோண்மேலேன் சுமந்து போகவேண்டும் ?" என, அப்போதும் அந்தப் பிராமணன் அப்படியே சொல்லிவிட்டுப்போகத் தொடங்கினன். உடனே மூன்றாங்கபடி யெதிரிட்டு ஓ ஐயனே ! கழுதையைத் தீண்டுகிறவனுக்குச் சசேலஸ்நானஞ் சொல்லியிருக்க, நீ யதை யெப்படிக் கொண்டுபோகத் துணிந்தாய்?' என, அந்தணன் இந்த ஆட்டைக்குறித்து மனிதர்கள் பலவிதமாகத் தர்க்கிக்கின்றபடியால் இஃது ஏதோ வோர் இராட்சசனு யிருக்கும் என்றெண்ணி, அதைப் பூமியில்விடுத்துவிட்டுத் தன் வீட்டுக்குப்போனன் ; அதன்பின் அவ்வஞ்சகர்கள் அதைக் கொன்று தின்றார்கள். ஆகையால் நான் சத்துருவை வஞ்சித்து உன் கருமத்தை முடிப்பேன் ; நான் என்ன உபாயஞ் சொல்லுகின்றேனே அதன்படியே செய் ; நீ சத்துருபக்ஷத்தி லிருக்கின்றாயென்றென்னை சிந்தித்து வேறொன்றனிரத்தத்தை யென்மேலெல்லாம் பூசி யாலமரத்தின் கீழே யெறிந்துவிட்டு, நீ கூட்டங்களோடுகூட மலையின்மேற் போயிருந்தாற் கோட்டான்கள் தங்கள் பகைவர்களுக்கு இவன் விரோதியா யிருக்கின்றானென் றெண்ணிக்கொள்ளுவார்கள் ; பிறகு நானவர்கட்கு நம்பிக்கை வருவித்துத் துர்க்கமுதலானவற்றின் உளவறிந்து சத்துருநாசம் பண்ணுவேன் ; அதுவரைக்கும் நீ யங்கேயிரு ; இவ்வாலோசனை நான் முன்னமேசெய்து இப்போது உனக்குச் சொன்னேன் " என, அப்படி யதனுள்ளுறையைக்கேட்டு மேகவர்ணன் " அத்தியந்தம் பிரியமான உன் பிராணனை நீ துரும்புபோல் நினைத்தாய் " என, பிரதானி " இராசகாரியத்துக்காகச் சேவகர்கள் இப்படியே செய்யவேண்டும் ; இடர்வருங்காலத்திற் சேவகர்கள் உதவுவார்களென்று அரசர்கள் தாம் அபிமானத்தினு லவர்களைப் பரிபாலிக்கின்றார்கள் ; அப்படி யுதவாவிட்டாற் பரிபாலனத்துக்குப் பயனென்னை ?" என்று இப்படிச்சொல்லிப் போய்க் கலகத்துக்கு ஆரம்பித்தது. இவ்விரகசிய மிரண்டாம்பேருக்குத் தெரியாது. அதனல் மற்றைப்பறவைக ளதைக் கொல்லத் தீர்மானிக்க, அப்போது மேகவர்ணன் " நீங்களவனைத் தண்டிக்கவேண்டாம் ; இவன் பகையாளிக்கு நன்மைபண்ணுகின்ற

டிப்பட்ட விஷித்தத்தைத் தோண்மேலேன் சுமந்து போகவேண்டும் ?" என, அப்போதும் அந்தப் பிராமணன் அப்படியே சொல்லி விட்டுப்போகத் தொடங்கினன். உடனே மூன்முங்கபடி யெதிரிட்டு ஓ ஐயனே ! கழுதையைத் தீண்டுகிறவனுக்குச் சசேலஸ் நானஞ் சொல்லியிருக்க, நீ யதை யெப்படிக் கொண்டுபோகத் துணிந்தாய்?' என, அந்தணன் இந்த ஆட்டைக்குறித்து மனிதர்கள் பலவிதமாகத் தர்க்கிக்கின்றபடியால் இஃது ஏதோ வோர் இராட்சசனு யிருக்கும் என்றெண்ணி, அதைப் பூமியில்விடுத்துவிட்டுத் தன் வீட்டுக்குப்போனன்; அதன்பின் அவ்வஞ்சகர்கள் அதைக் கொன்று தின்றூர்கள். ஆகையால் நான் சத்துருவை வஞ்சித்து உன் கருமத்தை முடிப்பேன்; நான் என்ன உபாயஞ் சொல்லுகின்றேனே அதன்படியே செய்; நீ சத்துருபக்ஷத்தி லிருக்கின்றுயென் றென்னை சிந்தித்து வேறொன்றனிரத்தத்தை யென்மேலெல்லாம் பூசி யாலமரத்தின் கீழே யெறிந்துவிட்டு, நீ கூட்டங்களோடுகூட மலையின்மேற் போயிருந்தாற் கோட்டான்கள் தங்கள் பகைவர்களுக்கு இவன் விரோதியா யிருக்கின்றுனென் றெண்ணிக்கொள்ளுவார்கள்; பிறகு நானவர்கட்கு நம்பிக்கை வருவித்துத் துர்க்கமுதலானவற்றின் உளவறிந்து சத்துருநாசம் பண்ணுவேன்; அதுவரைக்கும் நீ யங்கேயிரு; இவ்வாலோசனை நான் முன்னமேசெய்து இப்போது உனக்குச் சொன்னேன்" என, அப்படி யதனுள்ளுறையைக்கேட்டு மேகவர்ணன் "அத்தியந்தம் பிரியமான உன் பிராணனை நீ துரும்புபோல் நினைத்தாய்" என, பிரதானி "இராசகாரியத்துக்காகச் சேவகர்கள் இப்படியே செய்யவேண்டும்; இடர்வருங்காலத்திற் சேவகர்கள் உதவுவார்களென்று அரசர்கள் தாம் அபிமானத்தினு லவர்களைப் பரிபாலிக்கின்றூர்கள்; அப்படி யுதவாவிட்டாற் பரிபாலனத்துக்குப் பயனென்னை ?" என்று இப்படிச்சொல்லிப் போய்க் கலகத்துக்கு ஆரம்பித்தது. இவ்விரகசிய மிரண்டாம்பேருக்குத் தெரியாது. அதனுல் மற்றைப்பறவைகளதைக் கொல்லத் தீர்மானிக்க, அப்போது மேகவர்ணன் "நீங்களவனைத் தண்டிக்கவேண்டாம்; இவன் பகையாளிக்கு நன்மைபண்ணுகின்ற

டிப்பட்ட விஷித்தத்தைத் தோண்மேலேன் சுமந்து போகவேண்டும் ?" என, அப்போதும் அந்தப் பிராமணன் அப்படியே சொல்லி விட்டுப்போகத் தொடங்கினன். உடனே மூன்றாங்கபடி யெதிரிட்டு ஓ ஐயனே ! கழுதையைத் தீண்டுகிறவனுக்குச் சசேலஸ் நானஞ் சொல்லியிருக்க, நீ யதை யெப்படிக் கொண்டுபோகத் துணிந்தாய்?" என, அந்தணன் இந்த ஆட்டைக்குறித்து மனிதர்கள் பலவிதமாகத் தர்க்கிக்கின்றபடியால் இஃது ஏதோ வோர் இராட்சசனு யிருக்கும் என்றெண்ணி, அதைப் பூமியில்விடுத்துவிட்டுத் தன் வீட்டுக்குப்போனன்; அதன்பின் அவ்வஞ்சகர்கள் அதைக் கொன்று தின்றார்கள். ஆகையால் நான் சத்துருவை வஞ்சித்து உன் கருமத்தை முடிப்பேன்; நான் என்ன உபாயஞ் சொல்லுகின்றேனே அதன்படியே செய்; நீ சத்துருபக்ஷத்தி லிருக்கின்றாயென் றென்னை நிந்தித்து வேறொன்றனிரத்தத்தை யென்மேலெல்லாம் பூசி யாலமரத்தின் கீழே யெறிந்துவிட்டு, நீ கூட்டங்களோடுகூட மலையின்மேற் போயிருந்தாற் கோட்டான்கள் தங்கள் பகைவர்களுக்கு இவன் விரோதியா யிருக்கின்றானென் றெண்ணிக்கொள்ளுவார்கள்; பிறகு நானவர்கட்கு நம்பிக்கை வருவித்துத் துர்க்கமுதலானவற்றின் உளவறிந்து சத்துருநாசம் பண்ணுவேன்; அதுவரைக்கும் நீ யங்கேயிரு; இவ்வாலோசனை நான் முன்னமேசெய்து இப்போது உனக்குச் சொன்னேன்" என, அப்படி யதனுள்ளுறையைக்கேட்டு மேகவர்ணன் "அத்தியந்தம் பிரியமான உன் பிராணனை நீ துரும்புபோல் நினைத்தாய்" என, பிரதானி "இராசகாரியத்துக்காகச் சேவகர்கள் இப்படியே செய்யவேண்டும்; இடர்வருங்காலத்திற் சேவகர்கள் உதவுவார்களென்று அரசர்கள் தாம் அபிமானத்தினு லவர்களைப் பரிபாலிக்கின்றார்கள்; அப்படி யுதவாவிட்டாற் பரிபாலனத்துக்குப் பயனென்னை ?" என்று இப்படிச்சொல்லிப் போய்க் கலகத்துக்கு ஆரம்பித்தது. இவ்விரகசிய மிரண்டாம்பேருக்குத் தெரியாது. அதனுல் மற்றைப்பறவைக ளதைக் கொல்லத் தீர்மானிக்க, அப்போது மேகவர்ணன் "நீங்களவனைத் தண்டிக்கவேண்டாம்; இவன் பகையாளிக்கு நன்மைபண்ணுகின்ற

டிப்பட்ட விஷித்தத்தைத் தோண்மேலேன் சுமந்து போகவேண்டும் ?" என, அப்போதும் அந்தப் பிராமணன் அப்படியே சொல்லிவிட்டுப்போகத் தொடங்கினன். உடனே மூன்றாங்கபடி யெதிரிட்டு ஓ ஐயனே ! கழுதையைத் தீண்டுகிறவனுக்குச் சசேலஸ்நானஞ் சொல்லியிருக்க, நீ யதை யெப்படிக் கொண்டுபோகத் துணிந்தாய்?' என, அந்தணன் இந்த ஆட்டைக்குறித்து மனிதர்கள் பலவிதமாகத் தர்க்கிக்கின்றபடியால் இஃது ஏதோ வோர் இராட்சசனு யிருக்கும் என்றெண்ணி, அதைப் பூமியில்விடுத்துவிட்டுத் தன் வீட்டுக்குப்போனன் ; அதன்பின் அவ்வஞ்சகர்கள் அதைக் கொன்று தின்றார்கள். ஆகையால் நான் சத்துருவை வஞ்சித்து உன் கருமத்தை முடிப்பேன் ; நான் என்ன உபாயஞ் சொல்லுகின்றேனே அதன்படியே செய் ; நீ சத்துருபக்ஷத்தி லிருக்கின்றாயென்றென்னை நிந்தித்து வேறொன்றனிரத்தத்தை யென்மேலெல்லாம் பூசி யாலமரத்தின் கீழே யெறிந்துவிட்டு, நீ கூட்டங்களோடுகூட மலையின்மேற் போயிருந்தாற் கோட்டான்கள் தங்கள் பகைவர்களுக்கு இவன் விரோதியா யிருக்கின்றானென் றெண்ணிக்கொள்ளுவார்கள் ; பிறகு நானவர்கட்கு நம்பிக்கை வருவித்துத் தூர்க்கமுதலானவற்றின் உளவறிந்து சத்துருநாசம் பண்ணுவேன் ; அதுவரைக்கும் நீ யங்கேயிரு ; இவ்வாலோசனை நான் முன்னமேசெய்து இப்போது உனக்குச் சொன்னேன் " என, அப்படி யதனுள்ளுறையைக்கேட்டு மேகவர்ணன் "அத்தியந்தம் பிரியமான உன் பிராணனை நீ துரும்புபோல் நினைத்தாய் " என, பிரதானி "இராசகாரியத்துக்காகச் சேவகர்கள் இப்படியே செய்யவேண்டும் ; இடர்வருங்காலத்திற் சேவகர்கள் உதவுவார்களென்று அரசர்கள் தாம் அபிமானத்தினு லவர்களைப் பரிபாலிக்கின்றார்கள் ; அப்படி யுதவாவிட்டாற் பரிபாலனத்துக்குப் பயனென்னே ?" என்று இப்படிச்சொல்லிப் போய்க் கலகத்துக்கு ஆரம்பித்தது. இவ்விரகசிய மிரண்டாம்பேருக்குத் தெரியாது. அதனல் மற்றைப்பறவைகளதைக் கொல்லத் தீர்மானிக்க, அப்போது மேகவர்ணன் "நீங்களவனைத் தண்டிக்கவேண்டாம் ; இவன் பகையாளிக்கு நன்மைபண்ணுகின்ற

டிப்பட்ட விஷித்தத்தைத் தோண்மேலேன் சுமந்து போகவேண்டும் ?" என, அப்போதும் அந்தப் பிராமணன் அப்படியே சொல்லி விட்டுப்போகத் தொடங்கினான். உடனே மூன்றாங்கபடி யெதிரிட்டு ஓ ஐயனே ! கழுதையைத் தீண்டுகிறவனுக்குச் சசேலஸ் நானஞ் சொல்லியிருக்க, நீ யதை யெப்படிக் கொண்டுபோகத் துணிந்தாய்?' என, அந்தணன் இந்த ஆட்டைக்குறித்து மனிதர்கள் பலவிதமாகத் தர்க்கிக்கின்றபடியால் இஃது ஏதோ வோர் இராட்சசனா யிருக்கும் என்றெண்ணி, அதைப் பூமியில்விடுத்துவிட்டுத் தன் வீட்டுக்குப்போனான் ; அதன்பின் அவ்வஞ்சகர்கள் அதைக் கொன்று தின்றார்கள். ஆகையால் நான் சத்துருவை வஞ்சித்து உன் கருமத்தை முடிப்பேன் ; நான் என்ன உபாயஞ் சொல்லுகின்றேனோ அதன்படியே செய் ; நீ சத்துருபக்ஷத்தி லிருக்கின்றாயென்றென்னை நிந்தித்து வேறொன்றனிரத்தத்தை யென்மேலெல்லாம் பூசி யாலமரத்தின் கீழே யெறிந்துவிட்டு, நீ கூட்டங்களோடுகூட மலையின்மேற் போயிருந்தாற் கோட்டான்கள் தங்கள் பகைவர்களுக்கு இவன் விரோதியா யிருக்கின்றானென் றெண்ணிக்கொள்ளுவார்கள் ; பிறகு நானவர்கட்கு நம்பிக்கை வருவித்துத் துர்க்கமுதலானவற்றின் உளவறிந்து சத்துருநாசம் பண்ணுவேன் ; அதுவரைக்கும் நீ யங்கேயிரு ; இவ்வாலோசனை நான் முன்னமேசெய்து இப்போது உனக்குச் சொன்னேன் " என, அப்படி யதனுள்ளுறையைக்கேட்டு மேகவர்ணன் " அத்தியந்தம் பிரியமான உன் பிராணனை நீ துரும்புபோல் நினைத்தாய் " என, பிரதானி " இராசகாரியத்துக்காகச் சேவகர்கள் இப்படியே செய்யவேண்டும் ; இடர்வருங்காலத்திற் சேவகர்கள் உதவுவார்களென்று அரசர்கள் தாம் அபிமானத்தினா லவர்களைப் பரிபாலிக்கின்றார்கள் ; அப்படி யுதவாவிட்டாற் பரிபாலனத்துக்குப் பயனென்னை ?" என்று இப்படிச்சொல்லிப் போய்க் கலகத்துக்கு ஆரம்பித்தது. இவ்விரகசிய மிரண்டாம்பேருக்குத் தெரியாது. அதனால் மற்றைப்பறவைகளதைக் கொல்லத் தீர்மானிக்க, அப்போது மேகவர்ணன் " நீங்களவனைத் தண்டிக்கவேண்டாம் ; இவன் பகையாளிக்கு நன்மைபண்ணுகின்ற

துஷ்ட னாகையால் இவனை நானே சிக்ஷித்துக் கோபமாறுவேன்” என்றுசொல்லி யெழும்பி யெழும்பி மூக்குமுனையா லதைப் பொய்யாகக் குத்திச் சங்கேதப்படி யாலமரத்தின்கீ ழெறிந்து, கூட்டத்தோடுகூட வேற்றிடத்திற்குச் சென்றது. பொழுதுபோனவுடனே இராஜகோட்டான் அவ்விடத்திற்குவந்து மரத்தைச் சுற்றி முற்றுகை போட்டுக்கொண்டு காகங்களைப் பார்க்கும்போது யாதொன்று மங்கே யில்லாமையாற் றன்கூட்டத்தைப் பார்த்துக் “காகங்க ளெவ்வழியாய்ப் போயின? அவ்வழி யுங்களுக்குத் தெரிந்திருந்தால் இப்போதே யவர்களைக் கொல்லுவோம்; பகைவர்கள் துர்க்கம் முதலியவற்றைச் சேர்வதற்கு முன்னேயானா லவர்களை வெல்லலாம்; பின்பு வெல்லக் கூடாது” என்றிப்படிச் சொல்லிக்கொண்டிருக்கையிற் சிரஞ்சீவி மெல்லெனக் கத்தினான். அதைக் கேட்டமாத்திரத்தில் வெகு கோட்டான்கள்போய் அதைக் கொல்லத் தொடங்கும்போது, சிரஞ்சீவி “நான் மேகவர்ணன் மந்திரி, என்பெயர் சிரஞ்சீவி, அக்கொடியவன் எனக்கு இப்படிப்பட்ட அவஸ்தையை யுண்டாக்கினான்; ஆகையால் நான் உங்கள் அரசனைச் சரணமாக அடைகின்றேன்” என, இதைக்கேட்டுச் சேவகர்கள் உருமர்த்தனனுக்குச் சொல்ல, அவன் அதைக்கேட்டு ஆச்சரியமாய் அதனருகே போய், ‘ஓ சிரஞ்சீவி! உனக்கிந்த ஸ்திதியேன் நேரிட்டது?’ என, சிரஞ்சீவி கைகூப்பிக்கொண்டு “முன்னாள் நீர் காகங்களை யடித்தீரென்று கோபமாய் அந்தக் கொடிய மேகவர்ணன் உம்முடனே போர்செய்ய ஆயத்தப்பட, அப்போது நான், ‘இராசனே! இஃதுனக்குத் தக்கதன்று; வலியவனுடனே எளியவன் போர்செய்தால் விளக்கை யவிக்க விட்டில்போய் விழுகின்றாற் போலக் கெடுதி யுண்டாகும்; ஆதலா லவருடன் சமாதானம் பேசி யவர்கள் கேட்பதைக் கொடுத்துப் புத்திமானானவன் உயிரைக் காப்பாற்றவேண்டும்; பண மெப்போதும் ஈட்டிக் கொள்ளலாம்; உயிரிழந்தாற் பெறக்கூடாது’ என்றிப்படிச் சொல்ல, என்னை நீ பகைவர் பக்கமாய்ப் பேசுகின்றாயென்று வைது இந்த உபத்திரவம் பண்ணினான்; இப்போது எனக்கு உம்முடைய திருவடிகளே

துணை; எனக்கு இந்தக்காயங் குணப்பட்டாற் காகங்கள் முழுதை யுங் கொன்று உமக்குக் கீழ்ப்பட்டிருப்பேன்" என்று இப்படி யது சொல்லக்கேட்டு உலூகராஜன், குருதிக்கண்ணன், கொடுங்கண் ணன், கொள்ளிக்கண்ணன், குரூர நாசன், பிரகார நாசனென் னுந் தன்னுடைய ஐந்துமந்திரிகளையும் பார்த்துச் "சத்துரு மந்தி ரியாகிய இவன் நமக்குக் கைவசமானான்; இவனை யென்னசெய் யலாம்?" என, அப்போது, குருதிக்கண்ணன் "இவன் அவனுக்கு மூதன் மந்திரி; காலவிசேஷத்தா லவனுக்கு இவன் பிரதிகூல மாய்த் தோற்றப்பட்டான்; அவன் ஒரு நாளு மிவன் வார்த்தை க்கு வேறாக நடப்பவனல்லன்; ஆதலால் இவனைத் தம்மிடத்தில் வைத்துக்கொண்டு இவன்கையாலே சத்துருவோடு சந்திசெய்ய வேண்டும்; இதுவே தக்கது; சாமமுதலாக நான்குபாயத்தில் தண் டங் கடைப்பட்டது; ஆகையாலே யந்தப் பிரயோகங் கடைசி யிற் பண்ணவேண்டும்; சாமத்தினாற் செய்கின்ற காரியம் எப்போ துங் கெடுவதில்லை; ஆகையால் அவர்களிடத்தில் தண்டத்தை யா லோசிக்க லாகாது; சருக்கரையைத்தின்று பித்தம் போமானாற் கைப்பான மருந்தை யேன் தின்னவேண்டும்? ஆதலாற் சாமோபாய மே யென் சம்மதம்; இதுவே நல்லது" என, இதைக்கேட்ட உரு மர்த்தனன் இரண்டாம் அமைச்சனைப் பார்த்து "உன்னுள்ளுறை யாது? அதனைச்சொல்" என, கொடுங்கண்ணன், "வேந்தனே! இக்காகங்கள் நமக்கியல்பான வைரிகள், ஆகையா லிவர்கள் சமா தானந் தக்கதன்று; தண்டமே தகுந்தது; வெல்லக்கூடாத பகை வர்க ளிருந்தால் அவர்கட்கு விரோதமாகிய தாயாதிகளை வருவிக்க வேண்டும்; இல்லாவிட்டாற் பணங்கொடுத்தாவது பொய்ப்பத்திரம் பிறப்பித்தாவது அவர்களுள் ஒருவர்க்கொருவர் பகையை யெழுப் பிவிடவேண்டும்; நடுவிற் புரைசலுண்டானால் முத்தும் பந்தப்படு கின்றது; ஆதலால் இதைக்குறித்து என் சொல்லைக்கேட்டுச் சுவய பக்ஷத்தை இரக்ஷித்துக்கொண்டு பரபக்ஷத்தைப் பேதிக்கவேண் டும்; இக்காகம் வைரியாயினுங் கொல்வது நன்றன்று; ஒருவேளை பகைவனும் நன்மை சொல்லுகின்றான்; ஒரு திருட னொருவனைப்

பிழைப்பித்ததும், ஓர் இராட்சதன் இரண்டு பசுக்களைப் பிழைப்பித்ததும் அறியீரோ?" என, அரசன் அதைக்கேட்டு "அஃதெப்படி" என, கொடுங்கண்ணன் சொல்லத் தொடங்கிற்று :—

"ஒரு நகரத்திலிருந்த ஓ ரேழைப்பார்ப்பான் தனக்கொருவன் கொடுத்த பசுவின் கன்றுகளிரண்டையும் புல் முதலானவைகள் போட்டு மிகவும் பெருத்துக்கொழுக்க வளர்த்தான். அக்கடாரிகளைப் பார்த்து அவற்றைக்கொண்டு போக ஒரு திருடன் தும்பெடுத்துக்கொண்டு புறப்பட்டு வரும் வழியில், கோரப்பல்லும் நீண்ட மூக்குஞ் செம்பட்டமயிருஞ் சிவந்தகண்ணுங் கறுத்தவுடம்புமாகவிருந்த ஓரிராட்சதனைக்கண்டு பயந்து அவனைப்பார்த்து 'நீயார்?' என, அவன் 'நான் சத்தியவசன னென்னும் இராக்ஷதன். நீயார்? சொல்' என, இவன் 'நான் திருடன்; ஒரு வறிய பிராமணன் வைத்துக்கொண்டிருக்கின்ற இரண்டு பசுக்களைத் திருடப் போகின்றேன்' என, இராக்ஷதன் 'மித்திரா! அவ்வந்தணன் பரிசுத்தனாகையால் நானும் அவனைத்தின்பேன்; பின்பிருவர் காரியமுமாகும்' என, இப்படிப்பேசிக்கொண்டு இருவரு மங்கே போகும்போது அந்தணன் தூங்கிக்கொண்டிருந்தமையால் அவனைத் தின்ன இராக்கதன் போக, அவனைப்பார்த்துச் சோரன், 'மித்திரா! நான் பசுவிரண்டையுங் களவுசெய்தபிறகு நீ யவனைத்தின்' என, இராக்ஷதன், 'சிநேகிதனே! பசுக் கூச்சலாற் பார்ப்பான் விழித்துக்கொண்டால் நம்முடைய காரிய மெல்லாங் கெட்டுப்போம், ஆதலால் நான் முன்னே யவனைப் புசிக்கின்றேன், பின்னர் நீ யச்சமில்லாமற் கோக்களைக் கொண்டுபோ' என, கள்வன் 'நீயவனைத் தின்னத் தொடங்கு மரவத்தால் வேறொருவன் வந்தால் அவனென்னைக் கொண்டுபோகவொட்டான்; ஆதலாற் பசுக்களிரண்டையுங் கொண்டுபோன பின்பு நீ யவனைத் தின்' என்று இப்படி யிருவர்க்கும் வாக்குவாதம் நடக்கையில் அவ்வேதியன் விழித்துக்கொண்டான். அப்போது கள்வன் 'ஓ பிராமணா! இவ்வரக்க னுன்னைத் தின்பேனென்கின்றான்' என, அதைக்கேட்டு இராக்கதன் 'இக்கள்வன் உன் மாடுகளைக் களவாடவந்தான்' என, இப்படி யிருவர் பேச்சையுங் கேட்டுப் பார்ப்பான்

மெலுக்குலைவப்பட்டு இஷ்டதேவதைத் தியானத்தால் இராக்ஷதனி னின்றுந் தன்னைக் காப்பாற்றிக்கொண்டு, கையிற்றடி யெடுத்து வந்து கள்வனை யடித்துத் துரத்தினன். ஆதலால் மாற்றானும் ஒரு கால் இதஞ் சொல்லுகின்றான். என்கின்றேன்" என, இப்படி யவ னுள்ளத்தையறிந்து அரிமர்த்தனன் கொள்ளிக்கண்ணனைப் பார்த்து "உன் மனத்தைச் சொல்வாய்" என, அவன் "மகாராஜனே! சாம மும் பேதமும் எனக்குடன்பாடல்ல; சமாதானத்தாற் பகைவனுக் குச் செருக்குண்டாகும்; மற்று மமது பேதத்தை யவனறிந்தால் ஒருவேளை மோசமுஞ் செய்வான்; ஆதலால் விவேகி கொடையாற் பகைவனை வசம்பண்ணி அதை மேன்மேலும் பெருகச் செய்தாற் பின்பு அவன்றனக்குத்தானே கைவசமாவான்; மேலும் இவர்க ளோடு வருத்தமாய் நம்மிடத்தில் வந்தமையால் விரோதிகளிடத்தி லிருக்கின்ற குறைச்சல்களை யறிவித்து நமக்குச் சந்தோஷம் வருவிப் பான், அதுபற்றி யிவனைப் பாதுகாக்கவேண்டும்; இங்ஙனஞ் செய் தால் ஒருவர்க்கொருவர் இன்சொற்களாற் காலப்போக்குஞ் சம்ப விக்கும்; மேலும் நம்முடைய மர்மங்களையும் வெளிவிடான்; இங்ங னமன்றி யொருவர்க்கொருவர் இரகசியங்களை வெளிவிட்டால் அவர் கள் வயிற்றிலிருந்த பாம்பும் புற்றிலிருந்த பாம்பும் நாசமடைந்தாற் போற் கெடுவார்கள்" என, உலூகராஜன் "அஃதெப்படி?" என, கொள்ளிக்கண்ணன் சொல்லுகின்றது:—

"விஷ்ணுவர்ம னென்னு மொரு மன்னனுக்கு வயிற்றிலொரு நோயுண்டாகி நாளுக்கு நாள் உடம்பு மெலிந்து போகின்றதனால் அவன் தேசாந்தரங்கட்குப்போய் ஒரு கோயிலி லிருக்கையில் அவ் வூரிலிருந்து அரசுசெய்துகொண்டிருக்கின்ற பலி யென்பவனு டைய குமாரிகளிருவரும் பலியினிடத்திற்கு வந்தபோது அவர்களி லொருத்தி யரசனை நோக்கி 'இராசனே! வெற்றியடைவாய்' என் றாள், மற்றொருத்தி 'நல்லபோசனம் பண்ணுவாய்' என, அதைக் கேட்டவுடனே யரசனுக்குக் கண்கள் சிவந்து அமைச்சர்களைப் பார்த்து 'இந்தக்கெட்ட பேச்சுக்காரியை நோயாளிக்குக்கொடுத்தால் இவள்நல்ல போஜனங்களை யனுபவிப்பாள்' என, அமைச்சர்கள்

இராசன் கட்டளையிட்டபடியே கோயிலிலிருந்த இராஜகுமாரனாகிய பிணியாளிக்கு அவளைக் கொடுத்தார்கள். பின்பு அவள் கணவனை யீச்சுரனைப்போல வெண்ணிப் பணிவிடைகள் செய்து அவனை யிட்டுக்கொண்டு மற்றொரு தேசத்துக்குப் போகும்போது வழியில் ஓரிடத்திலிறங்கி வேலைக்காரனைக் கூடவழைத்துக்கொண்டு சமையலுக்கான கடைச்சரக்குகள் வாங்கப்போனபோது, வியாதிஸ்தனாகிய இராஜகுமாரன் நித்திரைபோனான். அவ்வேளையில் அங்கொரு புற்றிலிருந்து பாம்பு இராசன் கிட்டவந்து பேச, அவ்வொலியைக் கேட்டு அவன் வயிற்றிலிருந்த பாம்புஞ் சந்தித்தது. அப்போது இரண்டுக்கும் வாக்குவாதமுண்டாக, இதற்குள்ளே யவன் பெண்டாட்டிவந்து மரத்தின்மறைவில் நின்று அவற்றின் பேச்சுக்களைக் கேட்டுக்கொண்டிருந்தாள். புற்றுப்பாம்பு வயிற்றுப்பாம்பைப் பார்த்து 'அடா துராத்மாவே! இந்த அழகுள்ள இராஜபுத்திரனை யேன் வருத்துகின்றாய்?' என, வயிற்றரவு 'ஆகார நிறைந்த குடத்திலிருக்கின்ற வென்னை நீ யேன் நிந்திக்கின்றாய்?' என, புற்றரவு 'துஷ்டா கடுகு தின்றானால் நீ யிறப்பாய்; அவன் சுகமடைவான்; இஃது ஒருவர்க்குந் தெரியாது' என, பின் அவ்வயிற்றரவு 'வெந்நீராலுனக்கும் லயம் வரும்' என, இப்படி யவ்விரண்டு இரகசியங்களையுங் கேட்டு அவள் அவ்வண்ணமே செய்து அப்பாம்பைக் கொன்றாள். அதனால் மன்னன் நோய்தீர்ந்து தன் நகரத்திற்கு மனைவியோடுகூட வரும்போது அந்நெறியில் அவள் தந்தையுஞ் சுற்றமும் பார்த்து இருவர்க்குஞ் சற்காரம்பண்ணி யவர்களை வழியனுப்ப, பின்னிருவருந் தங்க டேசத்துக்குப்போய் அரசாண்டு கொண்டிருந்தார்கள். ஆகையாற் பரஸ்பரம் இரகசியங்களைக் காப்பாற்றாவிடின் இப்படி நஷ்டம்நேரிடும்'' என, இதைக்கேட்டு இறைவன் குரூரநாசனைப் பார்த்து "உன்னிஷ்டமெது?" என, அஃது "இம்மூவர் சொன்னதும் உத்தமமாக விருக்கவில்லை; சாமதான பேதமென்னு முபாயங்கள் வலியில்லாதவர்களைக் குறித்திருக்கின்றன; வலியுள்ளவர்கள் சத்துருக்களிடத்திற் றண்டமே செய்யவேண்டும்; அதைத் துறந்து சாமம் முதலாகிய தந்திரத்தை யோசிக்கின்றவனைப் பகைவர் பயங்

தவனென் றெண்ணி அவன்மேல் வருவார்கள்; ஆகையால் வேந்தன் றண்டத்தினாலேயே பாக்கியஞ் சேகரிக்கவேண்டும்; பராக்கிரமமில்லாவிடின் எது தெய்வத்தால் நேரிடுகின்றதோ அதை நுகரவேண்டும்; மேலும் உலகத்தி லெல்லோரும் இலட்சுமியை விரும்புகின்றார்கள்; அப்படி விரும்பினாலும் மனவூக்கத்தோடு தண்டத்தா லெதிரிகளை யவமானம் பண்ணுகின்றவர்களுக்கே யிலட்சுமி கைவசமாகின்றாள்; சோம்பலானவர்கள் அருமையான பொருளைக் குறித்து இலக்குமியைப் பிரார்த்திக்கின்றார்கள்; பராக்கிரமமுள்ளவனோ தன் சௌகரியத்தினால் இலக்குமியைப் பலவிதமாக அநுபவிக்கின்றான்; ஆதலாற் பகவான் பகைவனைக் கொல்லவேண்டும்" என, இதைக்கேட்டு அரசன் பிரகாரநாசனைநோக்கி "உன்மனத்திலென்னையிருக்கின்றது?" என, அவன் "இராசாவே! இவன்றங்களை யடைக்கலமாக அடைந்தபடியினால் இவனைத் தலைவனாக்கி, முற்காலத்தில் இராமசந்திரன் விபீஷணனைத் தலைவனாக்கி, இராவணாதிகளை யெப்படி யழித்தானோ, அப்படியே சத்துருக்களைத் தாமழிக்கவேண்டும்; மேலுஞ் சரணமடைந்தவனைக் கொல்லுகின்றவன் ரௌரவ நரகத்தை யடைவானென்று சிபிச்சக்கரவர்த்தி தன் மாமிசத்தை வேடனுக்குக் கொடுத்துப் புறாவை விடுவித்தானென்று பாரதத்திற் சொல்லியிருக்கின்றது; அப்படியே யொருவனிடத்தில் அவன் பகைவன்வந்து நடுக்குறும்போது அவனுக்கு ஆதித்யஞ் செய்வதைக் குறித்து அவன் நெருப்பிற் குதித்தான்" என, இதைக்கேட்டு அரிமர்த்தனன் "அஃதெப்படி? சொல்" என, பிரகாரநாசன் சொல்லுகின்றது:—

"ஒருவனத்தில் ஒருவேடன் கையிற் குருவிக்கூடுங் கண்ணியுந் தடிமுதலான வேட்டைக்கருவிகளும் எடுத்துக்கொண்டு திரியகிற்கையில், அசநியிற் பெருமழைவந்து இருட்டிக்கொண்டு பிரளயகாலம்போலக் காற்றெழும்ப, அப்போது அவ்வனசரன் நடுக்கலெடுத்து மரத்தின்சார்பில் நின்று 'பகவானே! இந்தவேளையிலுன்னைவிட வேறொருவருங் காப்பாற்றுவாரில்லை' என, அவ்வேளையில் அம்மரத்தின்மே லிருக்கும் புறாத் தன் பெட்டை வரவில்லையென்று

வியசனமாய் 'இன்றைக்கு என்னுயகி வரவில்லை; அவளை யாரா
யினும் பிடித்தார்களோ வென்னவோ? அவளில்லாமல் இங்கெங்
கும் பாழாகத்தோன்றுகின்றது; மனையாளில்லாதவீடு சுடுகாட்
டைப் போலிருக்கின்றது; கற்புங் கணவனின்புறுவகைச்செயலும்
உள்ள இல்லாளையுடையா னெவனோ அவனே பாக்கியவான்'
என்றிப்படி யவன் புலம்புகின்றதைக்கேட்டு அவ்வேடன் கைக்கூட்
டில் அகப்பட்டிருக்கின்ற பெண்புறா துக்கித்து 'முன்பிறப்பிற்
றீவினை செய்தவர்களுக்குப் பலவகைப்பட்ட தளையுஞ்சிறையும்
நோயும் வறுமையுஞ் சம்பவிக்கின்றன; அஃதிருக்கட்டும்; எச்ச
மயத்தில் எது நேரிடுமோ அஃதெப்போதும் பிசகுகின்றதில்லை'
என்று சொல்லிப் பிறகு தன்பதியைக்குறித்து 'ஓ ஓ என் பிராண
நாதா! நமது வீட்டுக்குவந்த இவ்வேடனுக்குக் குளிர்முதலாகிய
துன்பத்தைநீக்கி யுதவி செய்யவேண்டும்; வந்தவிருந்தை யோம்பா
விட்டால் அவன் றன்பாதகத்தை யில்வாழ்வானுக்குக் கொடுத்து
இல்வாழ்பவன் புண்ணியத்தைக் கொண்டுபோகின்றான்? ஆத
லால் இவன் நம்முடைய பெண்டினைப் பிடித்தா னென்னுந்
துக்கத்தை மனத்தில் வையாமல் இவனுக்கு இயன்றமாத்திரம் பூசி
க்கவேண்டும்' என, இப்படிப் பெண்புறாவின் வாக்கியத்தைக்
கேட்டு, வேடா! உன்வரவு நல்வரவாக; நீ மனத்திற் சிறிதும்
ஐயமில்லாமல், உன் வீடாக நினைத்து வேண்டுவதைக்கேள்' என,
வில்லி 'கபோதமே! என்குளிரைப் போக்கடி' என, கபோதங் காட்டி
லிருந்து ஒருகொள்ளி யெடுத்துக்கொண்டுவந்து சருகுகளின்மேல்
வைத்து மூட்டி, வேடனைப்பார்த்து 'நெருப்பு மூண்டெரிகின்றது;
இதில் நீ குளிர்காய்; முன்றீவினையால் நான் பறவையாயிருக்கி
ன்றமையால் என்னண்டை யுன்பசிக்கேற்ற பதார்த்தமில்லை; இப்
போது அநேக துன்பங்கட்கு இடமாயும் பரோபகாரமாகாமலும்
இருக்கின்ற இச்சரீரத்தை வைத்துக்கொண்டிருந்து பலனென்ன?
இதனால் நீ யுன்னாத்மாவைச் சந்துஷ்டிசெய்' என்றிப்படிச் சொல்
லிக்கொண்டே பிறருதவியின்பொருட்டு எரிகின்ற அழலில் ஆனந்
தத்தோடு விழ, அப்போது வேடன் 'ஆ ஆ! என்பொருட்டு இஃ

துடலைத் துறந்தது ; மேலும் நான் நீயொழுக்க முள்ளவன் ; வேறொன்றன் றசையினுற் சீவனம் பண்ணுகின்றேன் ; பரோபகாரமுஞ் சிறிதாயினுந் தயையுங் கனவிலும் அறியேன் ; ஆதலால் ஊனைத்தின் றூனைப் பெருக்கின பாவியேன் கோரநரகத்திற்குப் போவேன் ; இதை எனக்கு திருஷ்டாந்தமாய் இந்தப்புறா காண்பித்ததினுல் இது முதலாகப் பசி தாகங் குளிர் வெயில் பொறுத்தல் இவற்றா லுடம்பை யுலர்த்தி நான் பாவமில்லாதவனுகக் கடவேன்' என்று சொல்லிப் பச்சாத்தாபத் துடனே தன் கூடு தடி கண்ணி முதலான ஆயுதங்களை முறித்து எறிந்துவிட்டு, அந்தப் பெண்புறாவை விட்டுவிட, அஃது உயிரிலுஞ் சிறந்த தன்னாயகன் றருமத்தின்பொருட்டு உடலைக் கொடுத்தா னென்றெண்ணி அதுவு மந்த நெருப்பிற் குதித்து இறந்த வுடனே அஃது ஒரு திவ்விய ஸ்திரீயாகிக் கணவனோடுகூடச் சொர்க்கத்துக்குப் போயிற்று. வேடனும் இரக்கத்தினுற் பரிசுத்தனாய் நெருப்பிற் றேகத்தைப் போட்டுவிட்டு நற்கதியை யடைந்தான். ஆதலால் அபயமென் றடைந்தவர்களைக் காக்கவேண்டும்" என இதைக்கேட்டு அரிமர்த்தனன் "எனக்குமிப்படியே யபிப்பிராய மிருக்கின்றது ; இவன் சத்தியவானும் புத்திமானுமா யிருக்கின்றான் ; கபடியல்லன் ; இவற்றை யறியாமல் மேகவர்ணன் இவனை மானபங்கஞ் செய்தான் ; இவனைக்கொன்றால் நான் விசுவாசகாதகனுவேன்; பிரமகத்தி, கள்ளுண்டல், களவாடலிவற்றிற்குப் பிராயச்சித்தமுண்டு; விசுவாசகாதகத்துக்கு அஃதில்லையன்றோ ? ஆகையா லிவனுக்குச் சன்மானம் பண்ணி நமது தூர்க்கத்தில் இட்டுக்கொண்டு போகவேண்டும்" என்று உறுதிசெய்து, இராசன் சிரஞ்சீவியைப் பார்த்துச் சொல்லுகின்றது: "நீ யென் கோட்டையில் வந்து சுகமாயிரு ; நானுன்னைப்பாதுகாப்பேன்" என, இதைக்கேட்டுச் சிரஞ்சீவி களிப்புற்று "மகாராஜாவே ! நான் விஸ்தரித்துச் சொல்வதென்னை ? என் குடிப்பிறப்பும் பிரபுவுக்குச் சகவாசத்தால் வரவரத்தெரியும்" என, அப்போது குரூரநாசன் "இப்போது கோட்டான் குலமெல்லாம் இராசன் குற்றத்தாற் பாழாகும் ; பிறர் குற்றங்களை யரசனுக்கு அறிவிக்கவேண்டும் ; அரசன் இதத்

தைக் கேளாவிடில் அதற் கென்னையுபாய மிருக்கின்றது ?" என்று இங்ஙனஞ் சொல்ல அரசன் அதைக்கேளாமற் சிரஞ்சீவியைத் தன்னரணிற் கொண்டுபோய் வைக்க, பின்னர்ச் சிரஞ்சீவி "நம்மைக் கொல்லவேண்டுமென்றவ னெல்லாரிலுங் கெட்டிக்காரன், மேலும் எசமானனுக்கு நன்மையையே செய்பவன், மற்றவர்கள் எசமானனைப்போல மூடர்களாகையால் அவனொருவன் இல்லாவிடில் இவர்களை வெல்வதருமையன்று" என்று இப்படி மனத்துக்குட் குதூகலிப்புடனே யாலோசித்துக்கொண் டிருக்கையில், அரிமர்த்தனன் காரியகாரர்களைப் பார்த்து "இச்சிரஞ்சீவிக்குத் தூக்க மெல்லாங் காட்டுங்கள்" என, சிரஞ்சீவி இராசகட்டளையின்படி யெல்லாம் பார்த்து 'நாம் இதற்கு ளிருந்தால் நமதெண்ணம் முடியாது ; பின்னும் நம்முடைய வஞ்சனைகளையுந் தெரிந்துகொள்வார்கள் ; ஆதலாற் கோட்டைத் தலைவாசலிலிருந்து மனோபீஷ்டத்தை முடிக்கவேண்டு' மென்று தனக்குள்ளே தீர்மானித்து அரசனை நோக்கிச் சொல்லுகின்றது : " மகாராஜனே ! நான் வாயசம் ; ஆதலாலுள்ளேயிருக்கத்தக்கவ னல்லேன் ; உமது கடைவாசலிற் காத்திருந்து கபடமில்லாமற் சேவித்துக் காலந் தள்ளுவேன்; அன்புள்ளவனும் மனத்தழுக்கில்லாதவனுமாகிய சேவக னெங்கிருந்தாலுஞ் சிந்தையிலலை" என்று இவ்வண்ணஞ் சொல்லிக் காக யங்கையே யிருந்தது. அப்போது குரூரநாசன் "இராஜா அமைச்சர் முதலிய நீவிரெல்லீரும் மூர்க்கர்களா யிருக்கின்றீர்களென் றெண்ணுகின்றேன் ; முற்காலத்தில் நடந்த ஒருகதையுமிருக்கின்றது ; முதல்மூடன் நான், இரண்டாவன் வேடன், மூன்றாவன் அரசன் ; நான்காவன் அமைச்சனென்று சொல்லிவிட்டு ஒரு பறவை பறந்துபோயிற்று" என அப்போது அவர்கள் "அஃதெப்படி?" என, குரூரநாசன் சொல்லுகின்றது:—

" பொன்னுக வெச்சமிடுகின்ற வொருபறவை மலையின்மேல் நெடுநாளா யிருக்கையில், அங்கே யொருநாட் போனவேடன் அது பொன்னுக மலவிசர்ச்சனம் பண்ணப்பார்த்து மிகவு மாச்சரியமாய், 'நான் பாலியமுதலாகத் திரிந்துவருகின்ற வெங்காடுக

ளிற் பார்த்த பலசாதிப் பறவைகளிலு மிப்படி யொன்றைப் பார்த்
ததில்லை; ஆதலால் இதையுயிருடனே பிடித்துக் கொண்டுபோவோ
மென்றெண்ணி மரத்தில் வலைகட்ட, அப்போது அப்பறவை வழக்
கப்படிவந்து சடிதியில் அவ்வலையிற் சிக்கிற்று. வேடன் அதைக்
கூட்டிலடைத்துத் தன் குடிசைக்குக் கொண்டுவந்து ‘இது நம்மி
டத்திருப்பதை அரசனறிந்தால் இப்பறவையைக் கொண்டுபோ
வதுமன்றி நம்முயிரையும் வாங்குவான்; ஆதலால் இக்குணநிதியை
யரசனுக்குக் கொடுப்போ’ மென்று நிச்சயித்துப் பறவையைத்தந்து
அரசனுடனே நடந்தசெய்தியை விண்ணப்பம்பண்ண, அப்போது
அவனிரத்தின மிழைத்த வொரு கூட்டில் அதனைவைக்க அதைப்
பார்த்து மந்திரி ‘அசம்பாவிதமான இவ்வேடன் பேச்சைக்கேட்டு
இதை யேன்வாங்கினீர்? விட்டுவிடும்’ என, இதைக்கேட்டு அப்ப
றவையை மன்னவன் விட்டவுடனே அஃது இராசனரண்மனைச்
சிகரத்தி லுட்கார்ந்துகொண்டு ‘முன்னே நான் மூடன், இரண்
டாவன் வலைஞன், மூன்றாவன் இராசன், நான்காவன் மந்திரி’
என்று இப்படிச் சொல்லிப் பறந்துபோய் விட்டது” என்று இச்
சங்கதியைச் சொல்லிப் பின் இஷ்ட மித்திரர்களைப் பார்த்து ‘இன்
றை வரைக்கும் இவ்விராஜாவின் சார்பிலிருந்தேன்; இனிவே
றொரு மலையைச்சார்ந் திருக்கவேண்டும்; நரியானது குகையைப்
பார்த்துக் கூப்பிட்டுச் சுகமடைந்தாற்போல வருவதற்கு முன்னரே
யாலோசிப்பவ னின்பமடைவான்” என, அப்போது அவைகள்
“இஃதெப்படி?” என, குரூரநாசன், “ஒரு வனத்தில் வசித்திருந்த
கிரகிரனென்னுஞ் சிங்கம் ஒருநாள் இரைக்கு நெடுநேரந் திரிந்தும்
யாதொரு பக்ஷணமுங் கிடையாமையினாற் போதுபோனவுடனே
யொரு பெருங்குகையைப்பார்த்து இதிலடைவதற்கு யாதேனு
மொருபிராணிவரும்; அதைத்தின்று பசியாறலாமென்று தனக்
குட் டீர்மானித்து அதிலொளித்துக் கொண்டிருக்கையில் அக்கு
கையில் வசிக்கும் அவிபுச்சனென்னும் நரிவந்து அங்கே சிங்கத்
தின் காற்சுவடுகளைக் கண்டு சந்தேகித்துச் சிங்கமிதிலிருக்கின்ற
தையு மில்லாததையுஞ் சோதித்துப் பின்பு உள்ளே புகவேண்டு

மென்றெண்ணித் தூரத்தில் நின்றுகொண்டு, ‘ஓ குகையே! குகையே!’ என்று இரண்டுதரங் கூவியழைத்துக் ‘குகாய்! நீ யென்னோடு பேசாமலிருக்கின்றதென்னை? உனக்கு மெனக்கும் பிரதிதினஞ் சம்பாஷணை நடந்துகொண்டிருந்ததே; இன்றைக்கேன் நீ பேசவில்லை? விரைவாய்ச்சொல்; இல்லாவிட்டால் நான் மற்றோரிடத்திற்குப் போய்விடுவேன்’ என்றுசொல்லி மீண்டுங் கூப்பிட்டது. அப்போது சிங்கம் நினைக்கின்றது: ‘இக்குகை நாடோறும் பேசிக்கொண்டிருக்கும் போலும்; இன்றைக்கு நமது பயத்தினால் அதனோடு பேசவில்லை; இதற்குப்பதிலாக நாம் உத்தரங் கொடுப்போம்’ என்று ஆலோசித்துப் பிரதித்தொனியினால் அருகேயிருந்த பிராணிகளெல்லாந் திடுக்கிடும்படி அந்நரியைக் கூவ, நரி ‘அப்பா நான் பிழைத்தேன்’ என்று வேறோரிடத்திற்கு ஓடிப்போய்விட்டது. ஆதலால் ஒவ்வொன்றையும் முன்னே யாலோசித்துச் செய்யவேண்டும்” என்று தன் மித்திரர்கட்குச்சொல்லி அவர்களோடு குரூரநாச மந்திரி தேசாந்தரம் போயிற்று. பின்னர்க் காகமந்திரி “இப்போது கோட்டான் கூட்டத்தைக் கொல்வதற்கு வருத்தமில்லை; விவேகமில்லா மந்திரியையுடைய அரசன் சீக்கிரத்திற்கெடுவான்; விவேக மந்திரிவஞ்சனையான மித்திரர்களைப் பகைவரென்று அறிந்துகொள்வான்; இப்படியறிகின்றவன் இவனிடத்தில் இப்போது ஒருவனுமில்லை. ஆதலால் நங்குலத்தின் மங்களத்தைக்குறித்து யாதாயினும் பிரயத்தனஞ் செய்யவேண்டும்” என்று மனத்தில் நிச்சயித்து, அன்றுமுதற் றினந்தோறும் ஒவ்வொரு விறகு கொண்டுவந்து வழியண்டை போட்டுக்கொண்டேவந்து போராகக் குவிந்தமாத்திரத்தில் அதைப்பார்த்துச் சூரியனுதித்தவுடனே கோட்டான்களெல்லாம் குருடுகொண்டிருக்கையில் விறகுகளையுஞ் சுள்ளிகளையுங் குகையின்வழியிற் கும்பலாகச்சேர்த்துத் தான் மெள்ள மேகவர்ணனிடத்திற்கு வந்தது. அப்போது மேகவர்ணராசன் “என்ன செய்தி?” என, சிரஞ்சீவி “நான் பகைவர் குலவேரைப்பிடுங்கத் தக்கவுபாயஞ் செய்திருக்கின்றேன்; நீங்கள் ஒவ்வொருத்தரும் ஒவ்வோரெரிகொள்ளி விழுக்காடு கொண்டுவந்து என் சாகையின்மேற்

போட்டாற் கோட்டான்களெல்லாமிறக்கும்" என, இதைக்கேட்டுக் காகராஜன் "என்னவுபாயஞ்செய்தாய்? சொல்" என, மந்திரி மகாராஜாவே! இது சொல்லத்தக்க சமயமன்று; நான் சொல்லுகின்றசெய்தியைப் பகைவரறிந்து வேறோரிடத்தி லோடிப்போனால் நம்முடைய இத்தனை முயற்சியும் வீணாய்ப்போம்; மேலும் கடிதிற் செய்யத்தக்க காரியத்திற் றாமதஞ் செய்யலாகாது" எனக் கேட்டு, காகராசன் தன் பரிவாரத்தோடு கூட எரிகொள்ளிகளைக் கொண்டுவந்து உலூகங்களிருக்குங் குகைவழியிற்போட, அந்தப்புகையினாற் கோட்டான்கள் பயந்து கலக்கமுற்று இரைச்சலிட்டுக் கொண்டு வெளியே வருகையிற் போக வழியில்லாமையால் அப்போது குரூரநாசன் சொன்னதை நினைத்துக்கொண்டு 'அவன் வார்த்தையைக் கேளாமைக்குப் பலன் இதுதான் இதுதான்' என்று அழுகுரலோடு சொல்லிக் கொண்டிருக்கையில் நெருப்புசுவாலையதிகரித்துக் கோட்டான்க ளிறந்தன. பின்பு மேகவர்ணராசன் முன்விட்ட தன்மரத்திற் குடிபோய்ச் சுகமாக இராச்சியத்தை யநுபவித்துக் கொண்டிருக்கையிற் சிரஞ்சீவியைப் பார்த்து "நீ பகையாளி வீட்டிலிருந்து எவ்வாறு காரியத்தை முடித்தாய்?" என, சிரஞ்சீவி "குரூரநாசன்றவிர மற்றவர்களெல்லாரும் மூடராகையால் அவர்கள் அவன் புத்தியைக்கேளாமல் அவனை யவமானம் பண்ணி யென்னைத் தங்கள் துர்க்கத்தில் இட்டுக்கொண்டுபோனார்கள்; அதனால் அவன்றன் சிநேகபந்துக்களோடுகூட மறுதேயத்திற்குப்போனான்; மற்றைக் கோட்டான்கள் மூடராகையால் எரிந்திறந்தார்கள்; இவ்வாறே முன்னொருகாலத்திற் சத்துருநாசத்தின் பொருட்டு ஒரு கிருஷ்ணசர்ப்பந் தவளைகளைத் தோளிற் சுமந்து கெடுத்தது" என, அதைக்கேட்டுக் காகராசன் நகைத்துப் "பாம்பு தவளைகளைத் தோளிற் சுமந்து கொன்ற விதமென்னை? சொல்லும் ஐயா' என, சிரஞ்சீவி சொல்லலுற்றது:—

"ஒரு தேசத்தில் மந்தவிஷனென்னும் பாம்பு இரைகிடையாமல் மிகவும் பசித்து ஓரேரிகரையண்டை வரும்போது அதிலே

தவளைகள் நிரம்பி யிருப்பதைக்கண்டு 'இங்கே யேதேனுமொருகபடம் பண்ணினாலல்லாமல் நமக்கிரை யகப்படாது' என நிச்சயித்துக் கண்ணைவிழித்துக்கொண்டு உட்கார்ந்திருக்க, அப்போது ஒரு தவளை 'பாம்பே! நீ யிரைதேடும் முயற்சியைவிட்டுச் சும்மா எனுட்கார்ந்திருக்கின்றாய்?' என, அதைக்கேட்டுச் சர்ப்பம் 'அபாக்கியனாகின்ற எனக்கு ஆகார மெங்கிருந்துகிடைக்கும்? இன்றைக்குப் பிரதோஷ காலத்தில் இரைக்காகத் திரிந்துகொண்டிருக்கையி லொருதவளையைப்பார்த்து அதைப் பிடிக்கப் போகையில் அஃது அங்கிருந்த மிகவுஞ் சற்பாத்திரனாகிய வொரு பிராமணனண்டை யோடிப்போயிற்று; அது தெரியாமல் நான் இங்குமங்கும் பார்த்துக்கொண்டியிருக்கையில் அங்கே நீராடிக்கொண்டிருந்த வொரு பிராமணப்பிள்ளையின் காலை யிதுதான் றவளையென்று நினைத்து அவன் காலைக் கடித்தேன்; அவன் அக்கணமே யிறந்தான்; அப்பிள்ளையின் பிதா மிகவுந்துக்கத்தாலே யென்னைப்பார்த்துத் 'துஷ்டப்பாம்பே! யாதொரு குற்றஞ் செய்யாத வென்பிள்ளையைக் கடித்தபடியினால் நீ மண்டூகங்களுக்கு வாகனமாகக்கடவாய்; மற்றும் அவைகளுடைய சேர்க்கையாற் சீவனமும் பண்ணக்கடவாய்' என்று இப்படிச் சபித்ததனால் நானுங்கட்கு ஊழியஞ்செய்ய வந்தேன்' என, இங்ஙனம் அப்பாம்பின் பேச்சைக்கேட்டு அஃது எல்லாத் தவளைகட்குஞ் சொல்லத் தவளைகளெல்லாந் தங்கள் அரசனுடனே கூட வெளியேவந்து மிகவுங் களிப்புடனே யந்த விஷசர்ப்பத்தின்மேலுட்கார்ந்தன. அஃது அவற்றிற்குப் பலவிதகதிகளைக் காண்பிக்கும்போது, 'தவளைகள் யானை குதிரை தேர்களிலும் இவ்வாகனம் நன்றா யிருக்கின்றது' என்று மெய்ச்சிச் சந்தோஷிக்க, பின்பு அந்தப் பாம்பு இரண்டு மூன்று நாள் வரைக்கும் அப்படியே நடந்து பிறகு மந்தகதியாய்ப் போகத்தொடங்கிற்று. அப்போது அவைகள் 'இன்றைக்கு மெல்லெனவே நடக்கின்றாய்?' என, அப்போது புசங்கம் 'நான் பசித்திருக்கின்றதனால் நடக்கக்கூடவில்லை' என, மண்டூகராசன் 'நீ சிறுதவளையாகப் பார்த்துத் தின்றுகொண்டிரு' என இதைக்கேட்டுச் சர்ப்பம் 'எனக்கு இவ்வண்ணமே அந்தணன்

சாப மிருக்கின்றது; அப்படியே தாமுங் கட்டளையிட்டனர்' என்று சொல்லி நாடோறும் தவளைகளைத் தின்றுகொண்டிருக்கும்போது, அங்கே வேறொரரா வந்து இவன் நடத்தையைப்பார்த்து 'நம்முடைய பக்ஷணங்களை நீயேன் சுமக்கின்றாய்? இதுமிகவும் விருத்தம்; உனக்கு இது யோக்கியமன்று' என, அதற்கு மந்தவிடன் 'நானிவையெல்லா மறிவேன்; சிலநாளில் என்கருத்து நிறைவேறும்; அக்காலத்தை யெதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றேன்?' என்று இவ்வாறுசொல்லிப் புன்சிரிப்புடனே பழையபடி நடந்துகொண்டிருந்தது. இப்படியெல்லா மண்டூகங்களையுந் தின்று கடைசியில் அவற்றி னரசனையும் பக்ஷித்தது. எந்தச்சமயத்தில் எது செய்யவேண்டுமோ அந்தச்சமயத்தில் அதனைச் செய்து சத்துருக்களை வேரோடு கூட நாசம் பண்ணவேண்டும். நெருப்புத் தன் பராக்கிரமத்தாற் காடுமுழுதையுந் தகிக்கின்றது; மரவேர்கள் பூமியிலிருக்கின்றன; மிருதுத்தன்மையினாற் றண்ணீருங் காற்றுஞ் செடி மரங்களை வேரோடுபிடுங்குகின்றன" என, இங்ஙனம் அதன் வாக்கியங்களைக்கேட்டு மேகவர்ணன் "கடையானவ ரிடையூறு வருமென்று பயத்தினாற் காரியங்களைத் தொடங்குகின்றதில்லை; இடையாவர் காரியங்களைத் தொடங்கி விக்கினம் வந்தால் விட்டுவிடுகின்றார்கள்; ஆயிரமிடையூறுகள் வந்தாலு மெடுத்த கருமத்தை முடிக்கின்றவர்கள் தலையாய ராவர்; ஆதலால் நீ அநேகவிதமும் கஷ்டப்பட்டுப் புத்தியினாலே வெகு பகைவர்களைக் கொன்றாய்; இது யோக்கியமாகவே யிருக்கின்றது; சத்துரு, அக்கினி, இரணம் இவற்றின் சேஷம் வைத்தால் மீண்டும் வளருமென்றறிந்து நீ வைரியைக் களைந்தாய்; ஆயுதத்தா லொருவன் சாகின்றான்; புத்தியினால் அநேகம்பெயர் ஒருமிக்கச் சாகின்றார்கள்" என்று இராஜன் சொன்ன மொழியைக் கேட்டு, சிரஞ்சீவி "எல்லாம் உன் பிரதாபத்தா லாயின; உன்னைப் போலிருக்கின்ற சத்துக்களுக்கு ஈசுவரனும் விதியும் நல்ல புத்தியைக் கொடுக்கும்; அசத்துக்களுக்குத் துர்ப்புத்தியைக்கொடாநிற்கும்; இஃதல்லாமல் தடியெடுத்துக் கொண்டு அடிக்கிறதில்லை; கர்மத்தை யநுசரித்துக் கொண்டிருக்கின்ற புத்தியினாற் பயன்களை யடைகின்றார்

கள்" என்றிப்படிச்சொல்லக்கேட்டு மேகவர்ணன் அம்மரத்தின்மேற் சுகமாய் அரசு செய்துகொண்டிருந்தது.'

இங்ஙனம் சோமசன்மா இராஜகுமாரர்கட்குக் காக கூகைகளின் கதையாகச் சந்திவிக்கிரகமென மூன்றுந்தந்திரஞ் சொல்லினான்.

நான்காவது.

லப்தஹானி.

அல்லது.

பேறழிவு.

சோமசன்மா அரசகுமாரரை நோக்கி "இடருற்ற காலையில் அறிவுகுன்றாதவன், குரங்கு முதலையினின்றும் விடுபட்டாற்போற் பெருந்துன்பத்தினின்றும் மீளுவான்" என, சிறுவர்கள் "அஃதெவ்வணம்? சொல்வாய்" என, ஆசிரியன் சொல்லலுற்றனன்:—

"கங்கைக் கரையில் நாவன் மரத்தின்மேற் சுமுகனென்னுமொருவானரம் சிலகாலம் வாசம் பண்ணிக்கொண்டிருக்கையில் அங்கே வந்த ஓரிளைத்த முதலையைப்பார்த்து 'நீ யென்கிருகத்துக்கு விருந்தாக வந்தமையால் உனக்கு நாவற்பழந் தருகின்றேன்' என்று சில பழங்கொடுக்கத் தின்று அத்தியந்த சந்தோஷத்துடனே தன்னிடத்திற்குப்போய் அன்று தொடங்கித் தினந்தினம் வந்து நானாவார்த்தைகள் பேசிக்கொண்டு இரண்டும் அந்நியோந்நியமாயிருக்கையில் ஒருநாள் முதலை சிலகனிகள் கொண்டுவந்து தன்னில்லாட்குக் கொடுக்க, அது தின்று அக்கனி அமிர்தம்போ விருக்கக்கண்டு தன்னாயகனைப்பார்த்துப் 'பிராணநாதா! இந்தத் தித்திப்பான கனிகளெங்கிருந்து கொண்டுவந்தாய்?' என, ஆண்முதலை 'சுமுகவானரனென்னு மென்னண்பன் எனக்கு நாடோறுங் கொடுக்க நான் அங்கே தானே யவற்றைப் புசித்துக்கொண்டு வந்தேன்: இன்றைக்குத் தின்று மிகுந்ததை யுனக்குக் கொணர்ந்தேன்' என, இம்மொழிகளைக் கேட்டுப் பெண்முதலை 'இத்தீங்கனி தின்பவன் ஈரல் அமிர்தத்திற்கொப்பாயிருக்கும்; அதைக்கொணர்ந்து எனக்குக்கொடு; அதனால் நான் மூப்புச்சாக்காடுகள் இல்லாமல் உன்னோடு நெடுங்காலஞ் சுகித்திருப்பேன்' என, இதைக்கேட்டு முசலி 'எனக்குயிர்க்குயிராயிருக்கின்ற நட்டோனாகிய வானரத்துக்கு நீயேன் இந்தத் தீங்கு

நினைக்கின்றாய் ?' என, அது 'நான் உனக்கு அகத்திமாயிருந்தால் அதனீரலைக் கொணர்ந்து கொடு ; இல்லாவிட்டால் நானுயிர் வைத்துக்கொண்டிரேன்' என, ஆண்முதலை 'காதலியே ! சகோதரனினு மித்திரன் அதிகமாதலால் அவனைக்குறித்து நீ யடம் பண்ணவேண்டாம்' என்று மோவாய்க் கட்டையைப் பிடித்து வேண்டிக்கொள்ள, பெண் முதலை 'நீ யென்றைக்கும் என்பேச்சுக்குக் குறுக்குச் சொன்னதில்லை ; இன்றைக்குமாத்திர மெனக்குக் குறைச்சற் பண்ணுகின்றாய் ; ஆதலால் இதோ நான் சீவனைவிடுகின்றேன்' எனப் பிடிவாதஞ்செய்ய, கரா பெண்ணின் நிச்சயத்தையறிந்து 'அச்சுமுகன்யான் கொல்லக்கூடாதவனா யிருக்கின்றான் ; நீயோ பிடித்ததை விடாமலிருக்கின்றாய் ; ஆதலால் நானிருதலைக்கொள்ளி யெறும்புபோலாயினேன்' என்று இங்ஙனஞ்சொல்லிச் சுமுகனிடத்திற்குப் போயிற்று. அப்போது சுமுகன், 'நண்பனே ! இன்றைக்கேன் வியசனமா யிருக்கின்றாய் ?' என, முதலை 'மற்றொன்றுமில்லை ; உன் மச்சினிச்சி யென்னைப்பார்த்துத் 'துஷ்டா ! நன்றிகெட்டவனே ! நீ யாராலே சீவனம் பண்ணுகின்றனையோ அவனையொரு நாளைக்காயினும் நமதுவீட்டிற்கு அழைத்துவந்து விருந்திடவேண்டாமோ ? அவன் வீட்டுக்குமாத்திரம் வெட்க மில்லாமற்போய்ப்போய் நல்ல பழங்களைத் தின்னுகின்றனையே' யென்று இப்படித் திட்டிக்கோபித்தாள் ; ஆதலால் நீயென் வீட்டுக்குவா ; உன்னைக்குறித்துப் பலபல பதார்த்தங்கள் தேடி வைத்துக்கொண்டு வழிபார்த்து உட்கார்ந்து கொண்டிருக்கின்றாள்' என, வானரம் 'நண்பனே ! என்னால் தண்ணீரில் வரக்கூடாது ; நீ யென்பிரியமுள்ள மச்சினியை யிங்கே கூட்டிக்கொண்டுவா' என, மகரம் 'சுமுகனே ! நான் கங்கைக் கரையிலிருக்கின்றேன், நீ யென் முதுகின்மேல் உட்கார்ந்துகொண்டுவா ; நோவாமற் கொண்டுபோவேன்' என, அதன்கண் நம்பிக்கைவைத்துக் குரங்கு அப்படியே யுட்கார்ந்து கொண்டமாத்திரத்தில் முதலை தண்ணீரிற்குதித்துப்போகையில் வானரம் 'எனக்குஅச்சமா யிருக்கின்றது ; மெள்ளமெள்ள நட' என்றது ;அதைக்கேட்டு முதலைஇப்போதுசுமுகன் நம்முடைய சுவாதீனத்தி லிருக்கின்றான் ; இனி யிவனுக்கு நங்கருத்தை வெளி

யிடுவதற்குக் குறையென்னை யிருக்கின்றது? உரலிலகப்பட்டது உலக்கைக்குத் தப்புமோ?' என்ன இங்ஙனந் தனக்குள் தீர்மானித்துக்கொண்டு முதலை 'மித்திரா! உன்னிஷ்ட தேவதையை நினை; என்பெண்சாதியின்பிடிவாதத்தா லுன்னைக்கொண்டு போகின்றேன்; என, 'நீ நேற்றுக்கொடுத்த நறுங்கனிகளை யென்மனைவி தின்ற தன்மேல் இத்தன்மையான தீங்கனியைத் தினந்தின்னுகின்ற பாக்கியவானீரல் கேவலம் அமிழ்தத்தை யொத்திருக்கும்; ஆதலால் நீயவனீரலை யெனக்குக் கொணர்ந்து கொடாவிடில் நான் பிராணனை வைத்திரேனென்றாள். யான் அதைக்குறித்துத்தான் உன்னைக் கொண்டுபோகின்றேன்' என, அதைக்கேட்டு வானரம் 'ஓகோ! இப்படியென்று எனக்கு முன்னரே தெரிந்திருந்தால் அந்தமரத்தின் மேலொளித்து வைத்திருக்கின்ற அந்த ஈரலை யுனக்கு அங்கேயே கொடுத்திருப்பேன்; வெற்றிருதயத்தோ டிருக்கையில் என்னை வீணுகக்கொண்டு வந்தாய்' எனக் கிலேசப்பட, அப்போது மகரம் 'என் பிராணமித்திரா! அதைக்கொடுத்தால் அவள் சந்தோஷமாவாள்' என்றுசொல்லி வானரத்தை யதிசீக்கிரத்தில் முன்னிடத்திற் கொண்டுவந்து விட்டவுடனே, வானரங் குதித்து மரத்தின்மேலேறிக்கொண்டு 'இன்றைக்குக் காலன் கையிலிருந்து விடுபட்டேன்' என்று எண்ணிக்கொண் டிருக்கையில், முதலை 'மித்திரா! ஈரலைச் சுருக்காய்க் கொடு; உன் அண்ணியாருக்குக் கொடுத்துவிட்டு வருகின்றேன்' எனக்கேட்டு, வானரம் நகைத்து 'மூடா! துஷ்டா! ஈரலுடம்பை விட்டிருக்குமோ? அஃதிருக்கட்டும், நீ விசுவாச காதகனாதலால் இங்கிருக்க வேண்டாம்; சீக்கிரத்திற் புறப்பட்டுப்போ; உன்னைப் பார்க்க வென்கண்கள் நாணுகின்றன' என்று இங்ஙனஞ் சுமுகன் சொன்னவுடனே முதலை பச்சாத்தாபப்பட்டு, 'நான் இவனுக்கு வழியிலுண்மைசொல்லி யிழந்தேன்; இப்போது மறுபடி விசுவாசம் வரப்பேசி யிவனைக்கொண்டுபோகவேண்டும்' என்று ஆலோசித்து, 'மித்திரா! நானுன்னைப் பரீக்ஷிக்கலாமென்று இவ்வாறு சொன்னேன்; மேலும் உலகத்தில் நடவாத வுன்பேச்சை நிசமென்று எண்ணித் திருப்பிக்கொண்டு வரவில்லை; ஈரல் சரீரத்தை விட்டு வேறி

டத்தி விராதென்பது சிறுபிள்ளைக்குந் தெரிந்ததுதானே ; நானிது
விளையாட்டுக்குச் செய்தேன் ; ஆதலால் நீயென் வீட்டுக்குக் கிலேச
மும் பயமுமில்லாமல் வா ; உன்பொருட்டு என் பெண்டாட்டி வழி
நோக்கிக் கண் பூத்துப்போகக் காத்துக்கொண் டிருப்பாள்" என
சமுகன் 'பசித்தவனது விசுவாசத்தில் நம்பிக்கைவைக்கலாகாது; பிரி
யதரிசனனைக் கங்காதத்தன் அஞ்சி மீண்டுங் காணவில்லை' என அப்
போது முதலை 'பிரியதரிசனனுக்கு அவனேன் அஞ்சினான் ?' என,
வானரஞ் சொல்லலுற்றது:—

"ஒரு கிணற்றிலிருந்த கங்காதத்தனென்னு மொரு பெருந்தவ
ளையை மற்றைத் தவளைகள் மிகவும் வருத்தப்படுத்திக் கொண்டிருந்
ததனால் அஃது இராட்டினத்தோண்டி நெறியே வெளியில் வந்தி
ருந்து 'இந்தத் தாயாதிகள் வலியவரும் பலருமா யிருக்கிறார்கள் ;
இதற்கென்ன செய்வோம்' என்று எண்ணமிட்டுக்கொண் டிருக்கை
யில் ஒரு பாம்பின் புற்றைப்பார்த்து வழிப்போக்கர் காலிற்றைத்த
முள்ளை முள்ளாலேயே வாங்குவதுபோல் இந்தப்பாம்பை நமது
வீட்டுக்குக் கொண்டுபோய்ப் பங்காளிகளைக் கொல்லவேண்டும்' என
நிச்சயித்து வளையின்கிட்ட இருந்து பாம்பைக்கூவ, பாம்பு 'இவன்
மாந்திரிகனோ அன்றி நம்மைக்கொல்ல வந்தவனோ ? கூப்பிடுகின்
றவன் இன்னவன் என்று தெரியவில்லை. ஆதலால் இவனை யிங்
கிருந்தே கேட்கவேண்டும், என்று தீர்மானித்து 'நீ யார் ?' என,
மண்டூகம் 'நான் கங்காதத்தனென்னும் மண்டூகராசன் ; உன்னைச்
சரணமாக வடைந்தேன்' என, கேட்டுப் பிரியதரிசனன் 'நெருப்புக்
குத் துரும்புகளின் சேர்க்கை யில்லாததுபோல நான் உன் பரம
சத்துருவா யிருக்கையில் நீ இங்கேவந்து இந்த விபரீதபாஷண
மேன் பண்ணுகின்றாய் ?' என, கங்காதத்தன் 'என்னை மாற்றார்
வருத்துகின்றார்களென்று உன்னிடத்திற்கு வந்தேன் ; நீ யெங்
கள் சன்மசத்துரு வென்பதுமெய்யே ; ஆனாலும் வலிய பகைவர்களை
வைரிகளைக் கொண்டே யடிக்கவேண்டு மென நீதி நூலிருக்கின்றது'
எனக்கேட்டு, இச்சர்ப்பம் 'என்வரவு அங்கெப்படிக் கிடைக்கும் ?

என, மண்டூகம் 'உன்னை நான் அனாயாசமாகக் கொண்டுபோவேன்' என, அதைக்கேட்டுப் பிரிய தரிசனன் 'நாம் தீனியைக்குறித்து என்றைக்கும் விசாரப்பட்டுக் கொண்டிருக்கின்றோம்; அவ்வாகாரந் தானேவந்து இன்றைக்கு நம்மை யழைத்துக் கொண்டுபோக விருக்கையில் ஆலசிய மேன் பண்ணவேண்டும்? வலியவந்த ஸ்ரீதேவியை வேண்டாமென்று தள்ளலாமோ?' என்று தனக்குள்ளாலோசித்துக்கொண்டு தவளையின்பின்னேவர, தவளை அதை யிராட்டினத்தின் வழியாய்க் கொண்டுபோய்த் தன்வீட்டில் வைத்துக்கொண்டது. அந்தப்பாம்பு தவளைகளையெல்லாந் தின்றது. பிறகு கங்காதத்தனைப் பார்த்து 'மித்திரா! உன் சத்துருக்களை யெல்லாங் கொன்றபடியினால் எனக்கேதாவது ஆகாரங்கொடு' என, தவளை 'நீ யுன் சிநேகிதன் காரியத்தைச் செய்தாய்; இப்போது வந்தவழியே வீட்டுக்குப் போகலாம்' என, அதைக்கேட்டுப் பாம்பு 'கங்காதத்தா! அந்தப் பிலத்தில் வேறே யேதாவது வந்து தங்கியிருக்கும்; யானங்கே போ யென்ன செய்வேன்? நீயே யுன் சமுதாயத்திலிருந்து நித்தியமெனக்கு ஒவ்வொருதவளை கொடுத்துக் கொண்டுவா; இல்லாவிட்டால் நானெல்லோரையு மொருங்கே கொல்லுவேன்' என, இவ்வுத்தரவைக்கேட்டுக் கங்காதத்தன் பயப்பட்டு நித்தமொருதவளை விழுக்காடு கொடுத்துக்கொண்டிருக்கத் தின்று கடைசியில் ஒருநாள் கங்காதத்தன், புத்திரனையுந் தின்றது. அதைக் கங்காதத்தன் மனைவி பார்த்து மிகவு மிடும்பையுற்றுக் 'கங்காதத்தரே! நீர் இக்கொடியோனைக் கொண்டுவந்து குலத்தை நாசம்பண்ணினீர்; இனி யிவ்விடம் விட்டுப் புறப்படும்; இல்லாவிடில் இவனைக் கொலைசெய்யச் சூழ்ச்சி செய்யும்' என, இதைக்கேட்டு ஆராய்ச்சி செய்துகொண்டிருக்கையிற் பாம்பு 'எனக்கேதாயினுந் தின்னக்கொடு' என, கங்காதத்தன் 'மித்திரா! நானிருக்கையில் நீ தீனிக்கேன் விசாரப்படுகின்றாய்? இப்போது என் மனைவியை யனுப்பி வேறுகிணற்றிலிருந்து இன்னும் மண்டூகங்களை யழைப்பிக்கின்றேன்; அதுவரையும் நீ சும்மா விரு' எனக் கேட்டுப் பிரிய தரிசனன் 'நீ எனக்கன்னதாதா, ஆதலாற் பிதாவாகவிருக்கின்றாய்

உடனே, தவளைகளை யழைப்பி’ என, பின்னர் மனைவியை மற்றொரு கூபத்திற்போக்கிப் ‘போனவளின்னும் வரவில்லை; நானேபோய் அநேகந் தவளைகளைக் கொண்டுவருகின்றேன் நீ யிங்கே சுகமாகவிரு’ என்றுசொல்லித் தானும் இராட்டினவழியே புறப்பட்டுப் போயிற்று. பின்பு பிரியதரிசனன் தவளைகளைக்குறித்து வழிபார்த்துக்கொண்டு அங்கேயிருந்து அப்படி வெகுநாட் கழிக்கையில், மற்றொரு வளையி லிருந்த பல்லியைப்பார்த்துப் பிரார்த்தித்து ‘ஓ பல்லியே! உனக்குங் கங்காதத்தனுக்கும் மிகவுஞ் சிநேகமாகையா லவனிருக்கின்ற விடத்திற்குப்போய் உன்னைப் பிரியதரிசனனழைக்கின்றா னென்றும் இனி யுனக்குத் துரோகம் பண்ணினால் எனக் காணையிருக்கின்றது; நீ மனத்திற் சிறிதும் ஐயப்படாதே யென்றும் இவ்வாறு சொல்’ என, அநுத்தரவைப் பெற்றுக்கொண்டு அக்கவுளி கங்காதத்தன்பாற்போய் எல்லாச்செய்தியையும் சொல்லக் கங்காதத்தன் ‘பசித்தவன் விசுவாசத்தை நம்பலாகாது; நீ போய்ப் பிரிய தரிசனனுடனே துஷ்டா! இனிக் கங்காதத்தன் வாரானென்று சொல்’ என, கவுளிபோய்ப் பாம்புக்கு இவற்றை யெல்லாஞ் சொல்லிற்று. அப்படிப்போல நான் மீண்டும் உன்வீட்டுக்கு வாரேன்’ என, இதைக்கேட்டு முதலை நீ வாராவிடில் எனக்கு நன்றிமறந்தமை சம்பவிக்கும்; ஆதலால் நான்பட்டினியிருந்து உன்னைக்குறித்து இங்கேயே பிராணனை விடுவேன்’ என, அப்போது வானரமானது ‘நரி நீள்செவியனுக்கு நம்பிக்கை வருவித்து எப்படிக் கொன்றதோ அப்படி நீயுமென்னைக் கொலைசெய்ய விரும்புகின்றாய்’ என, முதலை அதைக்கேட்டு ‘அஃதெப்படி?’ என, குரங்கு சொல்லுகின்றது:—

“ஓ ரடவியிலிருக்கின்ற கராளகேசரி யென்னுஞ் சிங்கத்துக்குத் தேகமேதோ குணமில்லா திருந்தமையால் தூசர னென்னு நரியைப்பார்த்துப் ‘பிரதானியே! இன்றைக் கெனக்கு எங்கும் போகக்கூடாது; நீயே போய் யாதாயினு மிரை கொண்டுவா’ என நரி நாலன்டையும் ஓடித்திரிகையில் ஒரு கழுதையைப்பார்த்து ‘மாமா

கும்பிடுகின்றேன், நீ யிப்போது மிகவு மிளைத்துப்போனாய்' என, அப்போது கழுதை 'மருமகனே! என்ன சொல்வேன்? எனக்குத் தலைவன் வண்ணான்; அவனைத்தியந்தங் கண்டகன்; என்மேற் பெருஞ்சுமைகளைப் போட்டுக் கொல்லுகின்றதே யன்றி வயிற்றுக்குப் புல்லுச்செத்தை போடுகின்றதில்லை; புழுதியிலிருக்கும் அறுகங் கட்டையைத் தின்றுகொண்டிருக்கின்றேன்; அஃதுடம்புக்கு எங்ஙனம் புஷ்டிகொடுக்கும்? என் பிழைப்பொரு பிழைப்போ?' என, நரி 'இப்படி யிருந்தால் நீ என்னோடு கூட வா; ஆற்றங்கரையிற் பச்சைப்புல் நிரம்ப இருக்குமிடம் உனக்குக் காண்பிக்கின்றேன்' என, அதைக்கேட்டுக் கழுதை 'அவ்விடம் நன்றாயிருக்கும்; அங்கே நானொன்றியா யெப்படி யிருப்பேன்' என, தூசரன் 'மாமா! அங்கே புருஷனில்லாமல் விஸ்தாரமா யிருக்கின்ற பெட்டைக் கழுதைகள் எங்களுக்குத் தக்கபுருஷ னகப்பட்டாற் கொண்டுவர வேண்டுமென் றெனக்குச்சொல்லி யிருக்கின்றமையா லுனக்குரைத்தேன்' என, அதைக்கேட்டு ஆசையினாற் கார்த்தபம் பின்னே போக, அதைக்கண்ட சிங்கம் பாய்ந்தவுடனே நீள்செவியனோட்டம் பிடித்தது; பின்னர் நரிகோபித்துக் கண்டீரவத்தைப் பார்த்து 'இன்றைக்குன் வீரத்தை நான் பார்த்தேன்; உன்முன்னெதிர்ப்பட்ட கழுதையு மோடிப்போயிற்று; இனிநீ யானையை யெவ்வாறடிப்பாய்?' என அதைக்கேட்டுக் கராளகேசரி தலையிறக்கமா யிருக்க, மீட்டும் நரி 'மற்று மொருதரம் நானவனை யுன்னண்டை கொண்டுவருகின்றேன்; அப்போதாயினும் ஏமாறாமல் அவனை அடிக்கவேண்டும்' என்று சொல்லி, நீள்செவிய னருகே போய் 'நீயே னோடிப்போகின்றாய்?' என, கழுதை 'மருமகனே! என்னை யிந்நேரம் எமன்வாயிற் கொடுத்திருப்பாய்; அதிர்ஷ்டத்தினாற் பிழைத்தேன்; வச்சிரம்போல் நகத்தையுடைய அப்பிராணி யார்?' என, அப்போது நரிநகைத்து 'அம்மான்! அந்தப் பெண்கழுதை உன்னைப்பார்த்து மிதமற்ற களிப்போடு யுன்னண்டை வருகையில் நீ வீணாய்ப் பயந்தோடினாய்; அவளிப்போது நீள்செவிய னென்னைக் கல்யாணம் பண்ணிக்கொள்ளாவிட்டால் நானுயிர்

வைத்திரே னென்று நிச்சயித்திருக்கின்றபடியால் நீ விளைவாய் வரவேண்டும்; வாராவிடிற் பெண்கொலை நேரிடுவதன்றிக் காமதேவனாலுஞ் சபிக்கப்படுவாய்; அவன்முத்திரை சர்வார்த்தசாதனமான ஸ்திரீவடிவா யிருக்கின்றதை யவமானம் பண்ணுகின்றவர்களைச் சடைச் சாம்பலாண்டி யாக்கிக் காமதேவன் காட்டிலனுப்புவான்' என்றிப்படி நரி யுரைக்கக்கேட்டுக் குண்டுக்கழுதை யதன்பின்னே போகச் சிங்கந் தட்சணமேயடித்து நண்டைச்சுட்டு நரியைக்காவல்வைத்தாற்போல அதற்கு நரியைக் காவல்வைத்து நீராடப்போக, இதற்குள்ளே நரி யதனீலைரயுங் காதையுந் தின்றது. பின் சிங்கம் வந்து பார்க்கையி லீரலுங் காதுமில்லாமையாற் சம்புகத்தைப் பார்த்து 'இதையார் தின்றது?' என 'இக்கழுதைக் கீரலுங் காதுமில்லை; இருந்தால் அது மறுபடியு முன்னண்டை வருமா?' என, அஃது இதை யுண்மையென்று நம்பி நரிக்குள்ள மாம்சபாகங் கொடுத்து மற்றதைத் தின்றது. அப்படி நீ யென்னைக் கொல்ல விரும்புகின்றாய்' என, முதலை 'எவன் றன் பிரயோசனத்தை விட்டுள்ளதைச் சொல்லுகின்றானோ அவன் யுதிஷ்டிரனென்னுங் குசவனைப்போற் றுன்ப மடைவான்' என, வானரம் 'அஃதெப்படி?' என்றுகேட்க, மகரஞ் சொல்லுகின்றது:—

"ஒரு குப்பத்தில் யுதிஷ்டிரனென்னுங் குயவன் பானைகளை யெடுக்கையில் ஓட்டாங்குச்சொன்று கபாலத்திற் றாக்கிக் கத்திவெட்டுப்போற் காயம்பட்டது. பிறகு சிலநாட்கழித்து அத்தேசத்திற் கருப்புவந்தமையால் அவன் மறுதேசத்திற்குப்போய் இராஜனிடத்திற் சேவகத்தி லமர, அவ்வரசனவ்வடுவைக்கண்டு இவன் போர்க்களத்தின் முன்காயம் வாங்கின சூரனென்றெண்ணி யவனை மிகவு முபசரித்து அவனிடத்திற் றயையாயிருந்தான். அது முதற்கொண்டு மற்றைச் சேவகர்கள் அவன்மேற் பொறாமையாயிருக்கத் தலைப்பட்டு இராஜன் றயையிருக்கையா லொன்றும் பேசாம லிருந்தார்கள். அப்படியிருக்கையில் ஒருநாள் இராசன் ஏகாந்தமாய் யுதிஷ்டிரனைப் பார்த்து 'உனக்குக் கத்திவெட்டு யாருடைய சண்

டையிற் பட்டது?" என, குசச்சேவகன் இராஜனே! நான் குளை போட்டுக் கொண்டிருக்கையில் விழுந்து ஒடுபட்டு இக்காயம்பட்டது' என, இதைக் கேட்டமாத்திரத்தில் இராசன் நாணிக் குலாலனைப்பார்த்து 'நான் மோசம் போனேன்; இஃது இரண்டாம் பெயர்க்குத் தெரிவதற்குள்ளே நீ யோடிப்போ; சூரர்கள் கண்டால் நீ யுன்னுயிர் காணமாட்டாய்' என, குயவன் 'சுவாமி! என் கை கால்களைக்கட்டி யிரணரங்கத்திற்போட்டு என், அஸ்தலாகவத்தைப் பார்த்தருளும்; வாய் புளித்ததோ மாங்காய் புளித்ததோ வென்று சொல்லலாமோ?' என, இராசன் 'நீ பிறந்தகுலம் போர்க்களத்தில் வருவதன்று; அங்ஙனமாக நீ நரிக்குட்டிப்போல் என் சும்மா துள்ளுகின்றாய்? குலைக்கின்றநாய் வேட்டை பிடிக்குமோ?' என, குலாலன் 'அந்நரிக்குட்டி யாரிடத்திற் றன்னைப் புகழ்ந்து கொண்டது? சொல்லும் ஐயா!' என, அரசன் சொல்லுகின்றான்:—

"ஒரு வனத்திற் பெட்டைச் சிங்கத்தோடு கூடியிருந்த ஆண் சிங்கத்துக்கு இரண்டு குட்டிகளுண்டானவுடனே பல விலங்குகளைக் கொன்று தன் பெண்சிங்கத்தின் கையிற்கொடுத்து அதைப்பார்த்து 'இப்பிள்ளைகளுக்கு வினாத் தெரிகின்றவரைக்கும் இவர்களை நம்பித் தனியே விட்டிராதே' என்று பத்திரஞ்சொல்லி நித்தியந்தான்மாத்திரம்போய் மிருகங்களைக்கொன்று கொண்டுவந்து கொடுத்துக்கொண்டிருக்கையில், ஒருநாள் அதற்கொன்றுங் கிடையாமற் றிரும்பி வீட்டுக்குவரும்போது, வழியிற் கையிலகப்பட்ட வொரு நரிக்குட்டியை யடியாமற் பிடித்துப் பெட்டையண்டை கொண்டுவந்து 'இன்றைக்கு இதைவிட வேறொன்றுங் கிடைக்கவில்லை' என, அப்பெட்டை யக்குட்டி மிகவுஞ் சிறிதா யிருக்கின்றதைப் பார்த்துத் தன் குழந்தைகளிலொன்றாய்க் காப்பாற்றிக்கொண்டு வருகையில், அம்மூன்றும் பெரியனவாய் ஒருநாட் காட்டுக்குப்போனபோது அங்கொரு யானையைக்கண்டு இதன்கிட்டப் போகலாகாதென்று சொல்லிவிட்டு நரிக்குட்டி வீட்டுக்கு ஓடிப்போயிற்று; மற்றிரண்டும் அதைப்பார்த்த தன்பின்னே வீட்டுக்குவந்து தன் தாயுடனே அந்தநரியின் காரியத்

தைச் சொல்ல, நரிக்குட்டி அதைக்கேட்டு மிகவுங்கோபித்து, நான் இவர்களிலுஞ் சௌரியத்திற் குறைந்தவனோ? இவர்க ளென்னைப் பழித்து நகைப்பானேன்?" கூழுக்கு மாங்காய் தோற்குமே? நான் இவர்களைத் தண்டித்து என் பராக்கிரமத்தைக் காட்டுவேன்; கொட்டினுற்றேன் கொட்டாவிட்டாற் பிள்ளைப்பூச்சியா?' என, அதைக் கேட்டுப் பெண்சிங்கம் நரியை யேகாந்தமாய் ஓரிடத்திற் கொண்டு போய் 'நீ நரிக்குட்டி; உன்குலத்தில் யானையைக்கொல்லுகின்றசக்தி யில்லை; உன்னை நான் என்பால் கொடுத்து வளர்த்தமையால் இந்தப் பராக்கிரமஞ் சொல்லிக் கொள்ளுகின்றாய்; இவர்கள் இனி யுன்னை யின்னானென்று அறிவதற்கு முன்னே நீ புறப்பட்டு ஓடிப் போ; இல்லாவிட்டா லவர்கள் கையில் அடியுண்டிறந்து போவாய்' என, அதைக் கேள்விப்பட்டவுடனே சம்புக மோடிப்போயிற்று. ஆதலால் நீ குசவனென்று வெளிப்படுவதன் முன்னே விரைவாய் இதைவிட்டுப்போ' என, அவன் அந்த இராசாவினுத்தரவுப்படி யோடிப்போனான்" என இப்படி முதலையின் பேச்சைக் கேட்டுச் சுமுகன் "ஸ்திரீகளின் கிருத்திரம மொருவருக்குந்தெரியாது; ஆகை யால் அவர்கள் விசுவாசத்தை நம்பலாகாது" என, முதலை இஃதெ தனாற் சொல்லுகின்றாய்?" என, வானரஞ் சொல்லத்தொடங்கிற்று:-

"தாராநகரத்திற் குடும்பத்தோடு கூட விருந்த சத்தியவிரத னென்னும் வேதியன்றனது மனையாட்டி யெல்லாரோடுங் கலகம் பண்ணிக்கொண்டிருக்கையால் அவன் அவள்மே லிருக்கின்ற மோகத்தினாற் றன்றேயத்தைத் துறந்து அவளை யழைத்துக் கொண்டு தேசாந்தரம் போகையில் அவ்வழியிற் பார்ப்பினி, 'நாயகா! எனக்கு மிகவுந் தாகமெடுக்கின்றது; எங்கிருந்தாயினுந் தண்ணீர்கொண்டு வா' என, அவன் அவளை யாங்கேயே வைத்துவிட்டுத் தண்ணீர்க்குப் போய்வந்து அவளிறந்து பிணமாய்க்கிடக்கின்றதைப்பார்த்து மிகவும் புலம்பி வருத்தப்படுகையில் 'உன் வயதிற்பாதி யிவட்குக் கொடுத் தாயானால் மீண்டெழுந்திருப்பாள்' என்று ஆகாசவாணியுண்டாக, அதைக்கேட்டுப் பார்ப்பான் பவித்திரத்தோடே பாதிவயதை மூன்

றுதர முச்சரித்துக் கொடுக்க அதனால் அவள் சீவித்தெழுந்து சலபானம் பண்ணினாள். பின்பு ஒருபட்டணத்திற் போயிறங்கி யந்தணன் செலவுவாங்கக் கடைக்குப்போனபோது அங்கே யொருமுடவன் நேர்த்தியாய்ச் சங்கீதம் பாட அதைக்கேட்டு அவள் மோகித்து அவனருகிற் போய்ச் 'சிநேகா! என்னை யங்கீகாரஞ் செய்; இல்லாவிட்டால் உனக்குப் பெண் கொலைவரும்' என, அதைக்கேட்டு அவன் 'இதோ முடவனுக்குக் கொம்புத்தேன் கிடைத்ததே' என்று பொங்கி அவள் கையைப் பிடித்துக்கொள்ள, அப்போது அவள் 'இவ்வுடம்பை யுனக்கு அர்ப்பணம் பண்ணினேன்; இனி நீ பயமில்லாமல் என்னுடனே கூடவா' என, அப்படியே அம்முடவன் அவளண்டை உட்கார்ந்திருந்தான். இதற்குள்ளே கடைச்சரக்குக்கள் வாங்கிக்கொண்டுவந்த அந்தப்பிராமணனுக்குச் சமையற் பண்ணி யிலைபோட்டு இம் முடவனுக்குக் கொஞ்சம் அன்னம் கொடுக்க வேண்டுமெனச் சொல்லி, அவனுடன்பாட்டினால் அம்முடத்துக்கு அன்னங் கொடுத்து இருவருஞ் சாப்பிட்டபிறகு பார்ப்பனத்தி 'நாயகனே! நீயென்னைத் தனியாகவிட்டுப் போம்போது எனக்குத் துணையில்லாமையால் இம்முடவன் எனக்குத் துணையிருக்கட்டும்' என, அதைக்கேட்டு அந்தணன் 'இம்முடவனை யெப்படிக் கொண்டு போகலாம்?' என, அவள் நான் என்முதுகிற் கட்டிக்கொண்டு வருவேன்' என, 'நல்லது' என்று அவள் கபடத்தை நிசமென்றெண்ணி அதற்குட்பட்டான். பின்பு அதனைப் புடவையிற்சுற்றி முதுகிற் கட்டிக்கொண்டு நடக்கையில் அவ்வழியிற் பிராமணன் இளைப்பாய்க் கிணற்றங்கரையிற் படுத்துக் கண்ணயர்ந்ததைப் பார்த்து, அம்முடவனிடத்து ஆசக்தியினாற் புருஷனைத் தூரவிலுருட்டிச் சனி தொலைந்ததென்று அம்முடவனை யொரு பெட்டியில் வைத்து நோவாமலெடுத்துக்கொண்டு தேசாந்தரம் போகையில் அங்கே சேவகர்கள் அவடலைமேற் பெட்டியிருப்பதைக் கண்டு அவளைப் பெட்டித்தலையுடனே யரசன் சமுகத்திற் பிடித்துக் கொண்டு போய் விட்டார்கள். அப்போது அரசன் பெட்டியைத் திறப்பித்துப் பார்த்து அதன்கண் ஒரு முடவனைக்கண்டு, 'இவன் யார்?

என்னசெய்தி?' எனப் பார்ப்பனியைக்கேட்க, அவள் 'இவரென் பர்த்தா; இவர் நோயாளியா யிருக்கின்றதனா லிப்படித் தலையிற் சுமந்துகொண்டு போகின்றேன்' அரசன் அதைக்கேட்டு அவள் கற்புடைமைக்கு மகிழ்ந்து, இவள் நமக்கு உடன்பிறப்பென்றெண்ணி அவளைத் தன்னிடத்தில் நிறுத்திக்கொண்டான். இங்கேயிப்படி யிருக்கையில் அங்கே யவ்வழியிற்போன வழிப்போக்கனொருவன் தாகத்துக்குக் கிணற்றினுள்ளே யிறங்கினபோது விழுந்து கிடக்கின்றவனைப் பார்த்து இறங்கி யெடுத்து வெளியே விட்டுப்போக அவன் அங்கே பங்குவையுங் மனைவியையுங் காணாமல் அங்கங்கே திரிந்து தேடிக்கொண்டு அந்நகரத்திற் குள்ளே போனான். இவன் வருவதை அவ்வியபிசாரி பார்த்து வேந்தனுடனே 'இதோ வருகின்ற இச்சண்டாளன் என்பதிக்கு விரோதி' என்று முறையிட, அவ்வேந்தன் 'இவனைப் பிடித்துக் காவலில் வையுங்கள்' எனச் சேவகர்கட்கு உத்தரவுசெய்ய, அவர்கள் அப்படியே செய்யத்தொடங்குகையில் அவன் இறைவனைப்பார்த்து 'ஓ அரசசிகாமணியே! நீர் தருமகுண முள்ளவரா யிருக்கின்றீர்; ஆதலாற் றேறவிசாரியும்' என்று தன் குறைகளையெல்லாஞ் சொன்னான். அரசன் அதைக் கேட்டு ஒரு பஞ்சாயத்து நியமித்து அவர்களால் 'இப்பார்ப்பான் குற்றவாளியல்லன்; அவளே துஷ்டை' யென்றறிந்து, அவட்குத் தக்க தண்டனைசெய்து வேதியனைச் சமாதானம் பண்ணினான். ஆதலான் மாதர்கள் அநர்த்தங்கட்கு மூலமா யிருக்கின்றார்கள். விவேகிகள் அவர்கள் பேச்சுக்குக் காது கொடுக்கலாகாது. அப்பேச்சுக்குக் காதுகொடுத்து முற்காலத்திலே நந்தனராஜ னென்பவனும் வரருசியென்னும் பிரதானியுஞ் சபைநடுவிலே யீனன மடைந்தார்கள்' என, முதலை 'அஃதெப்படி?' என, வானரஞ் சொல்லலுற்றது:—

"பராக்கிரம சாலியான நந்தனராஜ னென்பவன் துரைத்தனம் பண்ணிக் கொண்டிருக்கையில் அவன் மனையாட்டி யேதோ வொருகாரணத்தாற் பிணங்கிக்கொண்டதைக் குறித்து அரசன்

எவ்வித சமாதானஞ்செய்தும் கேளாமல் நீ வாயிற்கடிவாளம் போட்டுக்கொண்டு உன் முதுகின்மே லென்னை யெடுத்துக்கொண்டு குதிரைபோலக் கனைத்தால் நானுன் பேச்சிற்குச் செவி கொடுப்பேன்' என, அப்போது நிருபன் அவள் பிரீதிக்காகச் சொன்னவண்ணஞ் செய்ய, அதைப் பிரதானியின் மனைக்கிழத்தி கேள்விப்பட்டு அவளுங் கோபமாய்த் தன்பதியுடனே பேசாமல் முறுக்காயிருக்க, அவ்வேளையில் முழுது மறிந்தவனாகிய வரருசியென்னும் மந்திரி, தன் மனைவிக்கு எவ்வித வாறுதல் சொல்லியும் அவளுடன்படாமல் 'நீ தலைமொட்டை யிட்டுக்கொண்டு என்னை வலசாரி யிடசாரியாகச் சூழவந்து சாஷ்டாங்க நமஸ்காரம் பண்ணுவாயானால் உனக்கு நானுட்படுவேன்' என, மந்திரி அவள் பிடிவாதத்துக்காக அங்ஙனஞ்செய்து மறுநாளுதயத்திற் சபையில் வந்திருந்த அரசனிடத்திற்குப் போக அரசன் பிரதானியைப்பார்த்து 'நீ யெதற்காக முண்டனம் பண்ணிக்கொண்டாய்?' என, மந்திரி 'மகாராஜாவவர்கள் குதிரையைப்போலக் கனைத்தபடியால் அடியேன் மழுங்க மொட்டை யிட்டுக்கொண்டேன்' என, இப்படி யிருவர்பேச்சையுங் கேட்டுச் சனங்கள் நடந்த செய்தியெல்லா மறிந்துகொண்டார்கள். ஆதலால் மாதர்களுடைய அநுசித வார்த்தைகளைக் கேட்டு மௌனமாக இருக்கவேண்டும்; அங்ஙனஞ் செய்யாதவரோடு மறுமொழி சொல்லுகின்றவன் புலித்தோலைப் போர்த்துக்கொண்டிருந்த கழுதையைப்போற் கிலேசமடைவான்' என, 'அஃதெப்படி?' என்று முதலை வினவ, குரங்கு விடுக்கின்றது:—

“நருமதை யாற்றங்கரையிற் பவானியென்னு மோரேழை வண்ணான் தன்கழுதை தீனியில்லாமல் நாளுக்குநாள் இளைத்துப் போவதைக் குறித்து விசனப்பட்டுக்கொண் டிருக்கையில் ஒரு நாள் வினையாமற்கிடைத்த புலித்தோலைக் கொண்டுவந்து களிப்புடனே யிரவில் அக்கழுதைமேற் போர்த்து ஊரார்பயிர்களின் மேய்வித்துக்கொண்டிருக்கும்போது, குடிகள் இது புலியென்றுநினைத்து ஓடிப் போவார்கள். இப்படி யிருக்கையில் இப்பெருவாயன் மிக

வும் பெருத்து ஒருநாட் பயிரிற் றானியத்தைத் தின்றுகொண்டிருக்கும்போது ஒரு பெண்கழுதையின் கூச்சலைக்கேட்டு மிகவும் பெருங்கூச்சலிடத் தொடங்கிற்று. அப்போது அக்கொல்லைக்காரன் இது புலியன்று என்று நிச்சயித்து அதைப் பிடித்து இடுப்பொடிய அடித்தான். ஆதலான் மாதர்களுடனே வீணைப்பேசலாகாது. இப்படி யிருக்கையில் நீ யவளைக்குறித்து என்னைக் கொல்லவிருந்தாய். இஃது உன்குற்றமன்று. விசுவாசகாதகம் பண்ணுதல் உன்சாதிக்கே யியல்பாயிருக்கின்றது. அது சாதுக்களின் சேர்க்கையாலுங் குணமாகாது. மேலுந் துஷ்டர்கட்கு உபதேசித்துப் பயனில்லை" என்று இப்படிப் பேசிக்கொண்டிருக்கையிற் சலத்திலிருந்து ஒரு சலசரம்வந்து 'என்மனையாள் எதிர்பார்த்துக்கொண்டிருந்து பட்டினியாயிறந்தாள்' என, அந்த நாராசஞ் செவியிலேறினவுடனே முதலை "நான் கொடியோனாதலின் இத்தன்மைய் இடரிலகப்பட்டேன்; முதலில் நண்பனுக்குப் பொல்லாவதனாயினேன்; இரண்டாவது மனைக்கிழத்தியு மிறந்தாள்; வீடுங்காடாயிற்று; இல்லக்கிழத்தி யில்லாத இல்லஞ் சுடலையன்றோ? ஆதலான் மித்திரா! என்பிழையைப் பொறுத்துக்கொள்; நானுனக்குத் துரோகம் நினைத்ததனாற் றீக்குதிக்கின்றேன்" என, இதைக்கேட்டு வானரம் எவள் பேச்சினால் நீ கொலைத்தொழிற்கு ஏற்பட்டனையோ அவள் சாவைக்குறித்து இப்போது கிலேசித்து உயிர்விட நினைக்கின்றாய்; அப்படிப்பட்ட துர்க்குணியின் சாவுக்குக் களிக்க வேண்டும்; பதியைவிட்டுப் பிறனுக்கு உடன்பட்டிருந்ததனான் முன்னொருத்தியை நரியுஞ் சிரித்தது" என, அப்போது மகரம் 'நரி யாரைப் பார்த்து நகைத்தது?' என, சமுகன் சொல்லுகின்றது :—

"சம்பகாவதி நகரத்திற் கிழவனாயிருந்த தேவதத்த னென்னுமொரு சாவகாரியின் பெண்சாதி அந்நிய புருஷர்களிடத்தில் ஆசைகொண்டிருக்கையில் அவ்வவாவைக்கண்ட ஒருவிடன் அவளைக்கண்டு 'பெண்ணே! என்பெண்சாதி யிறந்தபடியினால் நான் மிகவுந் துக்கித்துக்கொண்டிருக்கின்றேன்; நீ யென்றுக்கத்தைப்

பரிகரித்தால் உனக்குப் புண்ணியமுண்டு ; உன்னைப்பார்த்துமிகவு
மானந்த மாயினேன்' என, அதைக்கேட்டு அவளும் 'மனத்தி
லிங்ஙனமிருந்தால் என் கிழக்கணவன் பணத்தையெடுத்துக்கொ
ண்டு நீயும் நானும் பரதேசத்திற் போய் வாழ்ந்திருப்போம்' என,
அவன் 'நீ மிகவும் நல்லகாரியஞ் சொன்னாய் ; நீ கணப்போதாயி
னும் அட்டியில்லாமல் இக்காரியத்தின் முயற்சி செய்யலாம்' என,
அப்படியே மறுநாள் வெளிச்சேறும்வேளையில் வெகுதிரவியங்
களை யெடுத்துக்கொண்டு சங்கேதப்படி யிருவருந் தேசாந்தரம்
போகையைக்குறித்து இருகாத வழி போகையில் அங்கே யொரு
பேராற்றைப் பார்த்தவளவில் அவன் 'பின்னே யிவளை யாராயி
னுந் தேடிக்கொண்டு ஓடிவந்தாற் பணத்தையு மவளையுங் கொண்
டுபோவது மன்றி, நம்முடைய ஜீவனையும் வாங்குவார்கள் ; ஆதலால்
இவளைவிட்டுப் பொருளைமாத்திரம் ஏமாற்றிக்கொண்டுபோகவேண்
டும்' என்று மனத்திலேயே யாராய்ந்து நிச்சயித்துப் பின்பு அவளை
நோக்கி 'இந்நதிமிகவுங் கடினமானது ; தண்ணீரும் நிரம்பிவருகின்
றது ; ஆதலால் முன்னே யெல்லாவற்றையு மக்கரையில்வைத்துவிட்
டுப் பின்பு உன்னை நோவாமற் கொண்டுபோய்க் கரைசேர்க்கின்றேன்'
என, அவள் 'உன்மனத்தின்படி செய்' என, பின்பு அவளிடத்திருந்த
பணமுழுவதும் வாங்கிக்கொண்டு 'என் பிரியநாயகி ! உன் புடவை
யையும் அவிழ்த்துக் கொடுத்தாயானால் உன்னை மறுபடியுங் கொ
ண்டுபோதல் வருத்தமாயிராது' எனச் சொல்லி, அவள் அப்படியே
அவிழ்த்துக்கொடுக்க அதையுங் கைக்கொண்டு, இவள் வெட்கத்தினால்
அங்கிங்கோடி யாரோடுஞ் சொல்லமாட்டாள் என்றெண்ணிக்
கொண்டு அபகரித்த பொருள்களோடு கூடப்போய்விட்டான். பிறகு
அவள் அதைப்பார்த்துத் தன்மனத்தில் வியாகுலித்து நான்செய்த
வேலைக்குப்பலன் உடனேதானே கிடைத்தது. இதையக்கிழப்பிணை
மறிந்தா லென்னசெய்யுமோ ?' என் றெண்ணிக்கொண்டு நாணத்தி
னாலே தண்ணீரிலிறங்கி யுட்கார்ந்துகொண் டிருக்கையில் ஒரிறை
ச்சித் துணிக்கையை வாயிற் கௌவிக்கொண்டு ஓடிவந்த நரி தண்
ணீரினின்றுந் துள்ளிக் கரையில்விழுந்த மீனைப் பிடிக்க நினைத்து

வாயிறைச்சியைப் பூமியிற்போட்டுக் கௌவப்போகையில் அம்மீன் றண்ணீரிற் குதித்தது. நரி திரும்பி அத்தசையண்டை வருவதற்குள்ளே அதை யொருபருந்து அறைந்துபோக, இதைப்பார்த்திருந்த வம்மாது சிரித்து 'மாமிசமும் மச்சமும் போன பிறகு வானத்தைப் பார்த்து ஆவதென்னை?' என, அதைக்கேட்டுச் சம்புகங் குரோதத்தோடே 'எனக்குநேரிட்டதுபோலவே நீயுமுன்பதியையுஞ் சாரனையுமிழந்து இப்போது நிர்வாணத்தோடு என்ன வெண்ணமிடுகின்றாய்?' என, இப்படி யிருவர்க்கும் வாக்குவாதம் நடந்துகொண்டிருக்கையில் இஃதவள் கணவனுக்குத் தெரிந்து அவன் அவளைமிகவுந் தண்டித்து ஓட்டிவிட்டான். ஆதலால் அந்தத் துஷ்டையைக்குறித்துச் சோகமுறாமல், முதலாய்! நீ யுன் சாகைக்குப்போ, என, மகரந் தன்வீட்டுக்குப் போனவிடத்தில் அங்கே வேறொருமுதலை யிருக்கக்கண்டு, 'நம்மிடத்தையும் ஒருவன் கைக்கொண்டான் இதற்குச் சாம பேத தான தண்டங்களில் ஓருபாயஞ் செய்வதைக்குறித்து நம்முடைய சிநேகிதனைவிடச்சொல்லுகின்றவர்களில்லை, அவனையேவினவவேண்டும்' என்று உறுதிசெய்து, மீண்டும் நாவன்மரணத்தண்டை வந்து சுமுகனைப்பார்த்து 'மித்திரா! பட்டகாலிலேபடுங் கெட்டகுடியே கெடும் என்றாற்போல வென்னபாக்கியத்தினா லென்வீட்டையு மொருவன் பிடுங்கிக்கொண்டான்; இனி நானென்ன செய்வேன்?' என்று முறையிட, வானரம் 'நன்றிகெட்டவனே! எனக்குப் பொல்லாங்குதேடின நீ மறித்தும் முட்டாட்டனமாய் என்னிடத்துக்கேன்வந்தாய்? மூடனுக்கு உபதேசித்தால் அவன் வீடுடையவனை வீடிழக்கப் பண்ணுவான்' என, முதலை இஃதெங்ஙனம்?' என குரங்கு சொல்லத்தொடங்கிற்று:—

"ஒரு மரத்தின்மேற் கூடுகட்டி அதில்வாழ்ந்துகொண்டிருந்த விரண்டு தூக்கணங்குருவி ஆலங்கட்டியுடனே கூடப் பெருமழை பெய்கையிற் குளிரினாலே நளிர்பிடித்துப் பல்லுக்கிட்ட நடுங்கிக்கொண்டு ஒருமரத்தடியில் ஒதுங்கியிருந்து வருந்துகின்ற வானரத்தைக் கண்டு, 'உனக்குக் கால்கைகளிருந்தும் குளிர் காற்று முதலிய துக்கத்தை ஐயையோ! நீயேனனுபவிக்கின்றாய்? நீயேன் வீடுகட்டிக்

கொள்ளவில்லை?' என்று இரக்கத்தாற் சொல்ல, இதைக்கேட்டு அத்துஷ்டக் குரங்கு 'ஊசிமூஞ்சி மூடா! நீ வல்லவனுக்குப் புத்தி சொல்லுகின்றனையோ? எனக்கு வீடு கட்டுகின்ற சக்தியில்லை அதைப் பிரித்தெறிகின்ற சாமர்த்தியமுண்டு; இதோபார்' என்று அதன் கூட்டைப் பிரித்தெறிந்தது. ஆதலாற் கீழானோர்கட்கு உபதேசிக்கலாகாது' என, முதலை, "அன்பனே! நான் குற்றவாளி யென்பது மெய்யே; ஆயினும் பழைய சிநேகிதனாதலால் உன்னைக் கேட்கின்றேன்" என, வானரம் "நீ யங்கேபோய்ப் பகையாளியோடு போர்செய்; மடிந்தாற் சொர்க்கமடைவாய்; வென்றால் வீடடைந்து சுகமுறுவாய்; முன்னொரு புத்திசாலி யுத்தமனுக்குக் கும்பிடும், சூரனுக்குப் பேதமும், காரியகாரனுக்குத் தானமும், ஈடானவனுக்குத் தண்டமுஞ்செய்தாற்போலச் செய்யவேண்டும்" என, முதலை "அஃதெங்ஙனம்?" என, சுமுகன் சொல்லலுற்றது :—

"இம்மலையின்மேற் சதுரனென்னு மொருநரி பசியுடனே யங்கங்கே திரியுங்கால் ஒரு செத்த யானையைக் கண்டு, அதன் றோலைக் கிழித்து இறைச்சியைத் தின்னும் வல்லமை யதற்கின்மையால் அஃதங்கு உட்கார்ந்திருக்கையில் அங்கேவந்த சிங்கத்தைக்கண்டு தண்டனிட, 'அது நீ யார்?' என, நரி 'நான் றங்களடியேன்; தாங்களடித்த யானையைக்காத்து உட்கார்ந்திருக்கின்றேன்' என, சிங்கம் 'இது நான் கொன்றதன்று; வேறொருவன் கொன்றெறிந்தானோ அன்றித் தானேய் மடிந்ததோ? எப்படியிருந்தாலும் அதை நான் புசியேன்; இஃது உனக்கு வேண்டுமானா லெடுத்துக்கொள்' என, நரி 'சுவாமி! இது யோக்கியந்தான்; பெரியோர்கள் தம்மாண்மையாலே சம்பாதிக்கின்றார்கள்' என, சிங்கம் அதைக்கேட்டு வேறொரு வனத்திற்குப்போகப் பின்னு மங்கே வந்த ஒரு புலியைப்பார்த்து 'அம்மான்! நீ இக்காலன் முகத்திலே னெதிர்ப்பட்டாய்? இவ்வானையைக் கொன்ற மிருகேந்திரன் இங்கே யாதேனுமொரு புலி வந்தால் அதற்குத் தெரியாமல் எனக்குவந்து சொல்லுவாயானால் நானதைக் கொன்றெறிவேன்; நான் முன்னே யொரு யானையை யடித்து மூழ்கப்போன விடத்தில் ஒரு புலி அதை யெச்சிற்பண்

ணிற்று ; அது முதலாகப் புலியைத் தேடிப்பார்த்தும் அகப்படவில்லையென்று என்னுடன் சொல்லியிருக்கின்றான்' என, புலி அச்சிங்கத்தினுத்தரவைக்கேட்டு மிகவும் பயந்து 'மருமகனே ! நீ எனக்குப் பிராணதானங் கொடு' எனச் சொல்லிக்கொண்டே யோடிப் போயிற்று. மறுபடியொரு வானரத்தைக் கண்டு 'முன்னே வந்த துஷ்டனைக் கும்பிட்டுப் போக்கினேம் ; இரண்டாமவனைப் பேதித்தோம் ; இப்போது இதன் கையால் இதைக்கிழிப்பிக்க வேண்டும்' என்று இப்படித் தன்னுள்ளே நிச்சயித்துப் பின்பு 'வானரா ! நீ நெடுநாளைக்குப்பின்பு வந்தாய் ; மற்றும் பசித்திருக்கின்றாய் ; எனக்குச் சிங்கங்கொடுத்த இவ்வானையிறைச்சியை நீ கொஞ்சந்தின்று சிங்கம் வருவதற்கு முன்னே சீக்கிரமா யோடிப்போ' என, குரங்கு அதைக்கேட்டு யானையைக் கிழிக்க, அதைப்பார்த்து நரி 'வானரா ! சிங்கஞ் சமீபத்தில் வந்தது ; இனி நீ விரைவி லோடிப்போ' என, அதைக்கேட்டுக் குரங்கு பறந்தது. பின்பு அது பிளந்தவிடத்திலிருந்த மாம்சத்தை நரி தின்னுகையில் அங்கேவந்த வேறொரு நரியைச் சண்டையிட்டுத் துரத்தித் தான் வேண்டுமட்டும் இறைச்சிகளைத் தின்றது. ஆதலால் நீ யம்மகரத்தைக்கொன்று உன் வீட்டிற் சுகமாயிரு. வேறொரு தேயத்திற் சௌக்கியமெல்லாங் கிடைக்குமாயினுந் தனக்குச் சிநேகன் அங்கொருவனும் அல்லாவிட்டாற் சித்திராங்கன் போற் றீங்குக ளனுபவிக்கவரும்'' என, 'முதலை சித்திராங்கனுக் கெப்படி யவஸ்தை நேரிட்டது ?' என, வானரஞ் சொல்லத் தொடங்கிற்று:—

" அயோத்தியா நகரத்திலிருந்த சித்திராங்கனென்னு மொரு நாய் பஞ்சத்தினுற் சோறுகிட்டாமல் மறுதேயத்திற் சென்று ஒரு கிருகஸ்தன் வீட்டுக்குப்போய் அவ்வீட்டுக்காரி சோறுபோட்டு ஆதரித்ததனுல் அன்றுமுதல் வெகுநாள்வரைக்கும் அங்கேயிருந்து ஒரு நாட் சுகசமாய் வீட்டுக்கு வெளியே வந்தது. வந்தவுடனே அவ்வூர் மற்ற நாய்கள் இதன்மேலே விழுந்து அநேகவிடத்திற் கடித்து அதனுதிர மாம்சங்களை வெளிப்படுத்தினதனுற் சித்திராங்கன் மிகவும் துக்கமடைந்து 'என்ன பஞ்சம் வந்தாலுஞ் சுவயதேசத்தை விட்டு

வரலாகாது' எனத் தனக்குட்டேறி மீண்டும் அயோத்திக்கு ஓடிவந்த மாத்திரத்தில் அதற்கு உறவாகிய நாய்கள் 'சித்திராங்கா! அத்தேய மெப்படி யிருக்கிறது?' என, சித்திராங்கன் 'அத்தேயஞ் செழிப்பாயிருக்கின்றது; மாதர்களுந் தயாசாலிகளா யிருக்கின்றார்கள்! சுஜாதி மித்திரத்துவ மில்லை; ஆதலால் இவ்வவஸ்தை நேரிட்டது' என்றது. ஆனதுகொண்டு தன்னிடத்தி லிருப்பதுபோலச் சுகம் வேறில்லை யென்கின்றேன்'' என, முதலை அவ்வார்த்தைகளைக் கேட்டுப்போய் அவ்வண்ணமே யெதிரியுடனே பொருது தன்வீட்டை மீட்டுக்கொண்டு அங்கேயே வாழ்ந்திருந்தது. ஆதலாற் பராக்கிரமத்தினாற் பாக்கியம் வழிதேடி வந்தடைகின்றது.''

ஐந்தாவது

அசம்பிரேக்ஷிய காரித்துவம்.

அல்லது

ஆராயாது செயல்.

சோமசருமன் அரையன் மக்களை நோக்கி "யாவனொருவனுடைய தீச்செயல்களைக் கண்ணுற்றாயினுஞ் செவியுற்றாயினும் அறிவுடையோன் அவற்றைப் புரியலாகாது. அங்ஙனமாகையில் வெள்ளறிவனென்னும் பெயரிய ஒரு மயிர்வினைஞன் மணிபத்திரனென்போனது கருமங்கண்டெழீத் தேறாமல் அங்ஙனம் புரிந்து இடருற்றனன்" என, அதைக்கேள்வியுற்ற இளங்குமரர் "அஃதெவ்வாறு? இயம்புதி" என வினவ, ஆசிரியனுரைக்கலாயினன்:—

"அவாசிக்கண்ணதாய பைடணபுரி வாசியாகிய **மணிபத்திர**னென்போன் நன்னெறிபற்றி யொழுகலானுளதாய நல்குரவாற் பரிபவமுற்று 'இவ்வறுமை கெட்டது; சீச்சீ! தயை சாந்தி முதலாகிய குணங்கள் பொருளில்லாதாரிடத்தில் விபரீதமாகத் தோன்றுகின்றன' என்று கணந்தோறும் ஆகுலித்துக் 'குடும்பப் பாதுகாப்பின் ஏக்கத்தினால் அறிவு மழுக்கமடைகின்றது; தானிய முதலிய பொருளிலா வீடுகொடொக்கும்; அவன் கல்விமுதலிய குணச் சிறப்புற்றோனாயினும் மனித ரெண்ணிக்கையி லுறான்; இங்ஙனம் பலவகைத்தாய கவற்சி மிடிமையினா லெய்துகின்றது; ஆதலாற் பட்டினியிருந்து உயிர் துறப்பல்' எனத்துணிந்து மணிபத்திரன் கண்வளர்கையில், **பதுமநிதி** நீத்தோன் படிவமாய் அவன் கனவிலடைந்து 'யானுன் னொழுக்கத்தாற் கட்புலனாக நாளையிவ்வுருவத்தோடு வருவேன்; அப்போழ்து என் சென்னிமேற் றண்டத்தாற் புடைப்பையாயின் யான் குன்றாப் பொற்குவையாவேன்' எனக்கேட்டு, அவன்றுயி லொழிந்து 'இக்கனவுண்மையோ? அன்றேல் இஃதெப்போழ்தும் எனக்குளதாய பொருட்சிந்தையின்

ரேற்றமோ ?' என்று இங்ஙனம் மறுநாட் கருதிக்கொண் டிருக்குங்கால், இரவிற் கண்டாங்கு வந்த அந்நீத்தோனைக்கண்டு நிகழ்ந்த கனவு மெய்யெனத் துணிவுற்று அவன் சிரமேல் ஒரு தண்டங்கொடு தாக்க, அவன் பொன்மயமா யொளிவிட்டு நின்றமையால் ஒன்றிற்பொதிந்து வீட்டில் வையாநிற்புழி, அவனில்லாட்கு நகங்களைந்துகொண்டிருந்த மயிர்வினைஞனை நோக்கி 'உனக்குச் சிறிது அருத்தந் தருவேன் ; இவ்வற்புதத்தை யெங்கணுஞ் சிறிதும் புலப்படுத்தற்க' என வற்புறுத்தி விடுக்க, அவன் 'அந்நெறி நிற்பல்' என மேற்கொண்டு வீட்டிற் சென்று அறிவின் சிறுமையாற் றன்னுள் ஆராய்வானாயினான் : 'வைகறையிலொரு துறவியை யழைத்துவந்து அன்னோன் மண்டையிற் கோல்கொண் டறைவன் ; அவன் சுடர்விரி பசும்பொன்னாவன்' எனத்தேறி, மற்றைநாட்டுறவிகள் குழுவிற் சென்று மிகவணங்கி 'நீவி ரெத்திறத்தோர்க்கு மறிவுணர்த்திக் கரையேற்று நிற்கின்றனிர் ; மற்றுமெவ்வெவ ரில்லத்தும் பிச்சைக்கேகாநிற்கின்றீர் ; ஆதலாலித்தினம் நாயினேன் சிறுகுடிலுக்குத் தேவரீர் திருக்கூட்டத்தோ டெழுந்தருள்வீராக' என, அவர்களிற்றலைவன் இம்மாசு தீர்ப்போனை நோக்கி 'நாடோறும் அந்தணருன்மனைக்கு வாராநிற்க, நீ யின்றைக்கெமக்கே னியம்புகின்றனை ? அவ்வேதியரை யழையாய்' என, அக்காலை நாவிதன் 'நும்மாட்டுப் பேரறச்செயல்க ளிருக்கின்றமை யானறிகின்றேன் ; ஆதலால் நீவி ரென்வேண்டுகையை யெட்டுணையும் மறுமற் றிருவுளம் வைத்தருள்வீர்' எனப் பணிவாக மொழிந்து, அவர் கரத்தைப்பற்றி யில்லிற்கொடுவந்து அம்முனியின் கபாலத்தி லுலக்கையாற் சாத்தினவளவில் அவன் களைத்து நிலத்தில் அடியற்ற பனைபோல் வீழ்ந்தனன். இதற்குட் டபசிக்குழாம் வந்து மெய்ம்மறந்து கிடக்கின்றவனைப் பார்த்தவளவிற் பேரிரைச்சலிட்டு இக்கலிபலியை யவ்வூராள்வோன் காலாட்கள் கண்டு ஆண்டெய்தி யந்நாவிதனைப் பிணித்துத் தந்தலைவன்பாற் கொடுபோய்விட, அவ்வூராளி மஞ்சிகனை நோக்கி 'இஃதென் செய்தனை ?' என வுறுக்கி வினவ, அம்மங்கலன் 'மணிபத்திர னகத்துக்கண்டாங்கு யான் செய்தனன்'

என, அத்தலைவ னவ்வணிகனை விளித்து 'உன்பால் நிகழ்ந்ததென் னையோ ?' என, அவனொன்று முரையா திருந்தனன். அதன்மேல் அதிகாரத்தலைவ னம்பட்டனைப் பார்த்து 'இவ னாராயாமலிக்கருமம் புரிந்தனன் ; ஆதலாலிவனைக் கழுவேற்றுக. இங்ஙனம் முன்னொரு பார்ப்பினி பராமரிசியாம லியற்றின கருமத்தான் மூங்காவைக் குறித்து ஆகுலித்தாள் ' என, மணிபத்திரன் ' இஃதெங்ஙனம் ? அருள்வாய் ' என, அவ்வாராளி சொல்வானாயினன்:—

" உச்சயினிபுரத்தில் வதிந்த தேவநாமவேதிய னென்போன் மனையோ டில்லற நடாத்தும் நாளிற் குழவியில்லாக் குறையாலிருவரு மொரு கீரிப்பிள்ளையை மைந்தனைப்போற் கருதிவளர்ப்புழி யொருமகவுண்டாயிற்று. அம்மதலையை யொருநாள் தூங்குவித்துக் கணவனைப்பார்த்து 'யானுதகத்தின் பொருட்டுச் சொல்லாநின்றேன்; நீர் நங் கான்முளையைப் பார்த்திரும் ; ஒருவேளை கீரி கடிக்கும் ' என் றிங்ஙனம் வகுத்துத் தண்ணீர்க்குச் செல்ல,பின்னரக்குழந்தை தொட்டிலிற் கண்வளர்ந்தமை யறிந்து அவ்வந்தணனு மொரு தடாக கரும வயத்தனாய்ப் புறஞ்செல்ல அத்தருணத்தி லொரு கிருஷ்ண சருப்பம் பிலத்தினின்று புறம்போந்து தொட்டிலின்மேற் செல்லா நிற்கக் கண்ணுற்ற நகுலம் அதை யக்கணமே விரைந்துபற்றி யுதறிக் கொன்று பலகண்டங்கண்டு குருதியாற் பூசுற்ற முகத்துடனே தனதாற்றலைக்காட்ட விரும்பி விரைந்து துவாரமுகமாக வருகையில் வந்த பார்ப்பினி செந்நீரால் நிறைந்த அதன் வதனத்தைப் பார்த்த வளவில் அது தன்பிள்ளையைக்கடித்து மடித்ததென்று துள்ளித்துள்ளித் துணுக்குற்று நீர்க்குடஞ் சிதைவுறும்படி யதன்றலைமேற்போட்டுக்கொன்று உடனே யுட்புகாநிற்கையின் மகனுறங்குதலையு மருகே கரும்பாம்பின் துணிக்கைக் குவையையுங் கண்டு ' அந்தோ ! கெட்டேன் ; யானென்னருங்குழவியை நன்காராய்வின்றிக் கொலை செய்தேன் ' எனச் சோகமுற்றுப் புலம்பா நிற்புழி, அவடலைவனுண்டெய்திக் ' குழந்தை யிதோ விருக்கையில் நீ வெறுமை யென் மகவிழந்தேனென்று ஏன் கழறிக் கலுழ்கின்றனை ? என்னேடி ?

பேதாய் !' என, மனைவி ' நீர் யாதோ பேரவாவா லென்மொழி தள்ளிப் போனமையால் அதன்பய னிதோ வாய்த்தது ; இது மிக்க வவாவினன் முடிமேற் சக்கிரஞ் சுழன்றதை யொத்தது ' என, அவன் ' அஃதெவ்வண்ணம்? உரைத்தி ' என, உரைப்பாளாயினள்:-

" அமராவதிநகரத் தின்புறத்திருந்த வேதியர்நால்வர் மிடியாற் றுன்புற்று ' இப்பொழுது யாமடைந்த பொருளின்மையை யின்மை யாக்குமிடம் நாடிச் செல்வேமாக. பொருளில்லார்க்கு வனநடு வதிதலினு மின்பிலை ' யென் றிங்ஙனம் கடைப்பிடித்து நால்வரும் மறுதேயம் போகாநிற்கையில், ஸிப்ரா நதிக்கரை யணித்தாகப் பைரவாநந்தியென்னும் யோகியொருவ னெல்லாம் வல்லோனாய் வீற்றிருக்கின்றன னென வறிந்தும் அம்மடத்தி லவனுழைசென்று இயன்றமட்டும் பூசிக்க, அத்துறவி யவர்கள் வழிபாட்டிற் கிரங்கி ' உம் வரவின் காரணம் ஏது ?' என, அவர்கள் ' அடிகளே ! எம்மை நலிகின்ற நல்குரவைத் தொலைப்பான் மிக்கபொருள்விழைவால் எந்நாடு துறந்து புறம்போந்தனம் ; பொருட்குவை துணிவின் செய்கையாலன்றி யெய்துவதன்று ; ஆதலின் இதனிமித்தஞ் சாந்துணையும் முயலவேண்டும் என்று துணிந்து ஈண்டு நுஞ்சரணடைந் தேம் ; இனித் தேவரீரெம்விழைவை முடிப்பீர் ; மறுப்பிரேல் எம்முயிரை நும்பால் விடுக்குதும் ' என, யோகி யிவர்கள் பரபரப்பையுங் கடைப்பிடியையு முணர்ந்து, நான்கு சித்தியைச் சிந்தித்து அன்னோரை நோக்கி, 'நீவிர் இமயகிரி நெறிபற்றிப் பிசகாது போமின்; போவுழி யெவன் வர்த்தி யாண்டு வீழுமோ வவற்கு ஆண்டுச் சித்தியாம்' என்றுரைத்து அவர்க டலைமீது நான்கு திரிச்சிலைகளை வைத்தபின் அப்பொன் விருப்போர் அங்ஙன மவராணையைச் சிரமேற்றாங்கி யிமயமலை யிடத்திற்போகச் சிறிதாறு கடக்கையி லொருவன் வர்த்தி வீழ்ந்தது. அக்காலை யன்னவ னக்குத் தொட்டுப்பார்ப்புழித் தாமிரக்கனியாயிருக்க அவன்றனைவிட்டு நடந்த வேனையோரை ' மித்திரரே ! நும் மவாக்கெடத் தாமிரங் கொண்மின் ' எனக்கேட்டு, மூவரும் ' பேதாய் ! இதனு லென்னபயன் ? இஃதெத்துணை பெறினு

நம்மிடிமை யெட்டுணையுமகலாது ; ஆதலான் யாமுன் செல்லுதும்
என வுரையாடி அவர் முற்செல்லாநிற்க, அவன் றன்னாற்றலளவு
செம்புவாரிக்கொடு வந்தநெறிசென்றனன். பின்னர்முன்னர்க்கூறிய
அம்மூவரு மொருகூப்பாடு சேய்மை போகுழி யாங்கொருத்தன்
றலைத்திரி வீழ அவன் அங்ஙனந்தொட்டு மற்றோரை நோக்கி ' இவ்
வெள்ளிகளைக் கைக்கொடுமீள்வோம் ' என அவ்விருவரும் 'முற்படப்
பொற்குவையிருக்குமாதலால் யாம்போகுதும் ' என, அவர்போய்பின்
அவனும் வெண்பொ னிராசியிற் றன்வலிக்கியன்றன சுமந்து சென்ற
னன். பின்பு அவ்வெஞ்சிய விருவரும் நடக்கையி லொருவன் சிரத்
திரிநிலத்தில் வீழ்வுற, அவன் றோண்டிக் காண்புழிப் பொற்றிர ளிரு
ந்தமையா லவன் களிப்பின்பெருக்கி லமிழ்ந்தினவனாய் 'நண்பனே !
நம்மிச்சை மட்டுஞ் சொன்னத் திரட்கொடு செல்லுதும், வருதி'
என, அப்பேராசைப்பேதை ' அறிவிலாய் ! முன்னே மணித்திரளிரு
ப்பனவா மாதலாற் செல்லல்' என, பின் அவன் ' யானிச்செம்பொ
னேற்றுக்கொண்டு உன்வர னோக்கிக்கொண் டிருப்பல் ; நீ விரைவில்
வருதி ' என, அவன் 'அங்ஙனமாக ' என்று அவண் விட்டகல்வுழி
வெயிலின்வருந்திப் பசி நீர் வேட்கையாற் சித்திநெறி தப்பி இவன்
அவனுழல்கையில் அங்கொருமனிதன் றலையிலொருசக்கிரஞ் சுழலவு
மவனுடலெங்குஞ் செந்நீரான்மூழ்கி யிருக்கவுங்கண்டு, அவனைநோக்
குற்று ' நீயாவன் ? உன்றலைமேலிந்நேமிசுழல்வ தென்னை ?' என்
றிம்மாற்றம் வினாயவளவில் அவ்வாழி யிவனுச்சிமீது வந்திருக்க, அவ்
வேதியன்றுணுக்குற்று ' இஃதென்னை ? கிணறுவெட்டப் பூதம்
புறப்பட்டாற் போலாயிற்று ' எனக்கவலையுற்று ' இந்நேமி யென்
மத்தகத்தின்மீ துறுவதென்னை?' என, முன்சக்கிரி மொழியலுற்ற
னன் ; ' இதுகாறு மெனக்கநுபவ மிருந்தது ; இக்காலையின் மற்
றொருவன் சித்தித்திரியோடெய்தி யுசாவுவன் : அப்போழ்து இவ்
வாழியவன் றலையைப் பற்றிக்கொளுமென் றெனக்குக் குபேரன் வர
மிருக்கின்றது' என, அச்சக்கிரத்தலைப் புதியோன் 'பிள்ளையார் பிடிக்
கக் குரங்காய் முடிந்ததுபோல் எனக்காயிற்று ' என்று தன்னிற்
கவன்று நெட்டுயிர்ப்பெறிந்து பண்டைய நேமித்தலையனை நோக்கி

‘நீ யிங்கெய்தி யெத்தனைநா ளாயின? விளம்புதி’ என அவன்
‘எனக்குக் காலவரையறை தெரியாது: இராமனரசியற்றுங் காலை
யில் நான் மிடிபட்டு இங்கிச்சக்கிரத்தாற் பிடிபட்டனன்’ என,
அதைக்கேட்ட வேதியன் ‘ஈங்குவல்சி நீர் தருபவ ரெவர்?’ என
பூர்வசக்கிரி ‘பசிதாகமிவ்வுழி வருத்துதலில்லை; முழுது மித்துன்
பே நுகரவேண்டும்; இது நிதிக்கோ னிதியைக் கவர்வான் வருப
வர்க்கு அச்சுறுத்தும்பொருட்டு வைத்திருக்கின்றது; இவ்வச்சத்
தால் யாவரு மிங்கு வாரார்’ என் றிங்ஙனம் நிகழ்வன யாவுஞ்
சொல்லி, ‘இப்போழ் தென் மெய்க்காற்றப்பெறாத வேதனை யுள
தாயிற்று; ஆதலால் நான் செல்வன்’ எனச் செல்வுழிச் சென்ற
னன். பின்னர் முற்கூறிய சுவர்ணசித்தி சொல்லியாங்கு நெடு
நேர மிவன் வருநெறி நோக்குற்றிருந்துங் காணாமையாற் றேடி
வந்து அவன் சென்னியிற் சக்கிரஞ் சுற்றுகின்றமை கண்டு ஐயுற்றரு
கெய்தி ‘நண்பனே! இஃதென்னை யென்னை?’ என, அவன் ‘இது
பேராசையின் பயன்’ என, சுவர்ணசித்தி ‘ஓகோ! இது பிள்ளை
வரத்துக்குப் போனவிடத்திற் புருடனைப் பறிகொடுத்தாற்போ லாயி
ற்றே’ எனச் சற்றுக்கலங்கிப் பின் வெள்ளறிவோர்க்குக் கல்விப்
பயிற்சி சிறிதுளதாயின் பிறவறிவைக் கேளாது செத்த சிங்கத்தை
யுயிர்ப்பிக்கின்றவர்போற் கெடுவார்கள்’ என அதைக்கேட்டுச் சக்
கிரதரன் ‘அஃதெங்ஙனம்?’ என வினவ, பொன்வாய்ப்பின னிறுக்
கின்றனன்.

“துளசாபுர மென்னு மூதூரில் நால்வ ரொருசாலை மாணாக்
கராய்க் கல்விபயில்கையில் அவர்களின் மூவர்க்கு மந்திரவித்தை
கைவர, அப்போதவர்கள் ‘அரசனையடுத்துப் பெரும்பொருளீட்டுத
லன்றோ வித்தையுயர்ச்சிக்குப் பயன்?’ என, அதுகேட்டு அவரு
ளொருவன் ‘வாருங்கள்; நம்மு ளவ்வொருவன் கல்வியறிவிலன்;
ஆகலாலிவற்கு ஈட்டு நம்பொருளிற் கூறுகொடோம்; ஆதலாலிவ
னிந் நொடியிற்றானே தன்னில்லத்திற் கேகற்பாலன்’ என, அதைக்
கேட்டு மற்றொருவன் ‘இவன் கல்விகல்லானாயினும் இளமைதொட்டு

நம்மோடு விளையாட் டயர்ந்தோ னாயினான்; அன்றியும் நம்மினு மூலகநடையிற் றேர்ந்தவன்; அரசன் மாட்டு உலகநடை யறிந் தவனினுங் கல்விமாத்திரம் பயின்றோன் புகழெய்தான்; ஆதலா லிவற்கு நாலிலோர்கூறு கொடுக்குதும்' என, அதை யெவருமொப் பிப் பின்பு நால்வரும் வேற்றுத் தேயம் நோக்கிப்போவுழி, அங் கே யோரடவியி லுயிர்நீத்த அரிமா கிடந்தமைகண்டு, ஒருவன் 'நாம்பிழைப்பிக்கக் கற்ற வித்தையை யிவ்விறந்ததன்பா லி யற்றித் தெளிவோம்' என, அதை யுலகநடை வல்லோன் கேள் வியுற்று இவ்வரிமாவைச் சீவிக்கச்செய்யி னிஃதெல்லோரையுந் தின் றொது விடாது; இதன்பாற் பரீக்ஷைசெய லொழியற்பாலது' எனப் பலவகையான் மறுத்தனன். அம்மூவரும் அந்நன்மொழியை யெறி ந்து செருக்கினால் அச்சிங்கத்தை யுயிர்ப்பிக்கத் தொடங்க, மற் றவன் 'இத்தகுதியில் செயற்குச் சதுரனாவான் சேய்மை யாகற்பா லன்' என்றுரைத்து, அவன் நீளப்போ யொரு நெடுமரத்தின் மிசை யிருக்க, பின்னரிவர்க ளம்மறவிலங்குக்கு உயிர் தந்தமாத்தி ரத்தில் அது மூவராவியையும் வாங்கிற்று. ஆதலாற் கல்வியினு மறிவு பெருமையது" என, அப்போது சக்கிரி 'இது காரணம ன்று; அறிவுடையோன் வீட்டிற் பல காப்பமைத்திருப்பினு நாச முறுகின்றான்; பேதையாயினான் காட்டகத்திற் றனித்திருந்து முய் கின்றனன்; முன்னாயிரம்புத்தி மல்லாந்ததையும், நூறு புத்தி தொங் கினதையும், ஒருபுத்தி நீரில் விளையாட்டயர்ந்ததையுங் கேட்டி லையோ ?' என, பொன்வாய்ப்பினன் 'அஃதெவ்வாறு ? அறைதி' என, நேமி திரிதலையன் விடை விடுக்கலாயினான்:—

"மகததேயத்தி லொருமலர்ப் பொய்கையில் அறிவாயிரத் தன் நூறறிவனென்னு மிரண்டு மீனங்கட்கும் ஓரறிவ னென் னுந் தவளைக்கும் நட்புளதா யிருக்குங்காலையில் ஒரு திவசம் ஆண்டொரு வலையன் வந்து 'பிற்றை ஞான்று ஈண்டுள கொழு மீன்களை வலையெறிந்து கவர்வேனாக' என் றுரைகூறி யிறந்த மையை யறிவுற்ற அம் மண்டூகந் தன்னுற்றார்க்கு அறிவுறுத்துழி, அறிவாயிரத்தன் 'நான் நீர் நடை பலவுங் கற்றுவல்லேன்' என,

நூறறிவன் 'யாம் நிலைபெயரலாகாது, யாது ஆகற்பாலதோ அஃதீண்டே யாகுக' என, அதைக்கேட்ட தவளை 'வாரீர், நாட்டோரே! நானிதோபோகின்றேன்; நீவிரும் நடமின்' என, அவ்விரண்டும் 'யோரறிவனாகின்றனை; ஆதலாற் போவையானாற்போ; யாம் வருவேமல்லேம்' என, பின் அத்தவளை தன்குழுவோடு வேற்றிடம் போயிற்று. மறுநாட் செம்படவன் வீசிய வலையிற் சிக்கிய பற்பல மற்சியங்களோடு அகப்பட்ட அடிவாயிரத்தனைத் தலைமேற் சுமந்து நூறறிவனை வாலைப்பற்றியும் நடக்கையில் இதை யோரறிவன் கண்டு தன் பெண்டிரை நோக்கி 'அறிவாயிரத்தனுக்கும் நூறறிவனுக்கு மிங்ஙனங் கேடெய்திற்று; நானோரறிவன் நீரில் விளையாடுகின்றேன்' எனக் குதுகுலித்துச் சொல்லிற்று. ஆதலான் மிக்கறிவோனுக்கு ஊழினு லிவ்வணந் துன்புளதாம்" என, பொன்வாய்ப்பினன் 'நீள்செவியனை நன்மதி தடாவிற்கையில் இசைபாடிக் கட்டுண்டாற்போல் உனக்கு இப்பேரிடருளதாயிற்று' என, சக்கிரதரன் 'அஃதெங்ஙன நிகழ்ந்தது? உரை' என, சுவர்ணசித்தி சொல்லலாயினான்:—

"நெடுஞ்செவியல் சுமதி யென்னுங் கழுதை நரிகளிரண்டும் இடைவிடாமல் ஊரினர் பைங்கூழை மேய்ந்து வனத்திற் றங்குழி, ஒருநாள் விலாப்புடைக்கத்தின்று இரண்டுந் தேக்கெறிந்து குந்தியிருக்கையில், நெடுஞ்செவியல் 'இந்நிலவெறிக்கு மிரவிலெனக்குப் பொழுது கழிவின்றாதலால் யான் கானஞ் செய்வன்' என சுமதி 'நீள்செவிய! நீ பாடற்க; உழவருன் குரலைக்கேட்டுத் துயிலொழிந்து உன்னைப் புடைப்பார்கள்: மௌனமாயிரு' என, நீள்செவியல் 'உனக்கு இவ்விசையைக் குறித்து உணர்வின்மையால் என்னைத் தடுக்கின்றாய்' என்று அந்நரியை வைது, கழுதை தன் பெருங்குரல் முழுதுந் திறந்து பாடிற்று. அப்போழ்து அவ்வுழவர் விழிப்புற்று அக்கழுதையைக் குண்டுருட்டாய்ப் பிணித்து நையப் புடைத்தனர். நரி அதைக்கண்டு 'மாமா! என் மொழி தள்ளி யிசைபாடினமையால் இப் பயனடைந்தனை' என்றிகழ்ந் துரைத்தது"

என, சக்கிரதரன் 'நன்மொழி வினவியு மந்தரனென்னுந் தந்துவாயன் மரணமுற்றனன்' என, பொன்வாய்ப்பினன் 'இஃதெவ்வண்ணமுளதாயிற்று? இயம்புதி' என, சக்கிரி சொல்லுவானாயினன்:—

“நாராயண நகரத்தில் மந்தரனென்னுந் தந்துவாயன் பலவகைப்பட்ட வத்திர நெய்து வரு மூதியத்தான் மனைவியோடு உண்டுடுத்துக் காலந்தள்ளி வருகையில், அவன் தறிமுறிந்தமையான் மரம் வேண்டுற்றுக் காட்டிற் புக்கானாகித் திரியாநிற்கையில், ஒருபெரிய வாகையைப்பார்த்து வெட்டத்தொடங்குழி அதன்மே லிருந்த யட்சன் 'இவ்வென்னிடத்தை வருத்தாதே; நீ விருப்புற்றதை வெறுப்பின்றித் தாராநிற்பேன்' என, சாலியன் 'நானென் னில்லம் புகுந்து எவரையுமுசாவி யவர் சொன்னவண்ணங் கேட்பேன்' என்றவ்வண்ணம் வீடுநோக்கி வருங்கால், நெறியி லெதிர்ந்த மித்திரனாய நாவிதனை 'என்செய்வது? இயம்புதி' என அன்னோன் 'நீ யிராச்சியங்கேள்; நீ யரசும் நான் அமைச்சுமாவேம்' என, அதைக்கேட்டபின் அந்நடந்த செய்தியைத் தன் மனைவியாகிய சாலிச்சிக்குத் தெரிவிக்க, அம்மடந்தை 'இராச்சியத்திற்கு வரம்பி லிடையூறுக ளிருக்கின்றன; ஆதலான் அது கேட்கற்பாற்றன்று; வேறொரு வதனமு மிருகரமுங் கேட்பையாயிற் றிவசத்திற்கு இருசினை நெய்தால் நம்மில்வாழ்க்கை செவ்வன் நடக்கும்' என, அதை மேற்கொண்டு மீட்டு மவ்வனத்தருகிற்சென்று அவ்வியக்கனை நோக்கி 'எனக்கு மற்றோர் சென்னியு மீரத்தமந்தருதி' என, அவன் 'அங்ஙனமாக' எனச் சொல்லியவளவில், வினாயவாறு அடைந்து உவப்பெய்தித் திரும்பிக் கிருகத்திற்கு வருகையில், மாக்களிவ்விபரீதத்தைக் கண்டு இவனோ னிராக்கதனென் றெண்ணுற்றுத் தலையா லொரு கல்லெறிந்து கொன்றனர். ஆதலால் வரற்பாலது பிழையாதென் றுணர்வுற்று வல்லோர் வீணாசைகொள்ளார். அங்ஙனம் வீணெண்ணங்கொடு கிருபணனென்போன் கேடுற்றனன்” என, சொன்னசித்தி 'அஃதெவ்வாறாயது? இயம்புதி' என, சக்கிரதரன் சாற்றலுற்றனன்:—

“பண்டாபுரத்திற் கிருபணசரும னென்னு மொரு வேதிய னிரந்து வயிறு நிரப்பி யெஞ்சிய தவசங்களைப் பெய்து நிரப்பியபானையைச் சிக்கத்தின்மீ திருத்தி அதனடியிற் படுப்பன். இங்ஙனமொழுகுகையி லொருநாட் கிடந்தவாறே சிறுவிலைக் காலமெய்தின் இப்பண்டம் விலைப்படுத்தி அப்பொருட்கொரு காராடு கொண்டு அது பல்கிய பின்னர் அவற்றை ஆவிற்குமாற்றி அவ்வாப் பெருகிய பின்னர் அவற்றிற்கீடாக வாம்பரி கொள்வேன் ; பின் அப்பரி குட்டிகளீன்று விருத்தியாயபின் அவற்றை விற்று யான் செல்வமுடைய னாவேன்; பின்னொரு பார்ப்பனக் கன்னிகையை நாடி மணம் புரிவேன் ; அம்மாதுகட்டொருமகவுளதாம்; அது தவழ்கையில் யான் அப்பெண்டினை நோக்கி, ‘அடி பெண்ணே ! குழவியை யெடு’ என்பேன் ; அவள் பணியூற்றத்தா லெடாள் ; அப்போழ்து யானவட்கு இங்ஙனமோருதை கொடுப்பல்’ என, இங்ஙனமெண்ணமிட்டு ஒருதை யுதைக்க வவ்வுதை அரிசிப்பானையிற் றாக்கி யஃதுடைபட்டு இருந்த பண்ட முழுவதுங் கொட்டுண்டு இறைந்து பயன் பெறாதாயிற்று. ஆதலால் வீண் கற்பனை கற்பித்த லாகாது’ என, அதைக்கேள்வியுற்ற பொன் வாய்ப்பினன், ‘உன்மீது குற்றம் யாது ? இது பற்றுள்ளத்தின் பெருமை ; கிருபணத்துவத்தினாற் சந்திரசேனராசன் மிகத் துன்புற்றனன்’ என, சக்கிரதரன் ‘அஃதெங்ஙனமாயது?’ என, சுவர்ணசித்தி சொல்லுகின்றனன் :—

“அயோந்தியா நகரத்திற் சந்திரசேன னென்னு மரையன்றன் மகன் வலிமுகத்தோடு ஆடலர்வதின் மிக்க வேட்கையுடையனாதல் கண்டு பற்பல வலிமுகங் கொணர்ந்துசாலையில் வளர்ப்பிப்புழி அங்கு மடையனுக்குங் குற்றேவல் செய்வோர்க்கும் பகைமூண்டமையறிந்து அவற்றுளொரு சதுரப்பாடுடையமுசு ‘இவண் கலாம்நிகழ்ந்திருக்கின்றமையால் இவ்விடந்துறந்து காட்டகம்புகுவேம்’ என, அதைக்கேட்ட வானரக்குழூ ‘நீ மூத்தமையாலறிவிழந்து பலபலபடி பிதற்றுகின்றாய் ; இங்கு அரையனையடுத்துப் பலவண்ண வுண்டிகளுண்டு குழீஇ யிருந்தேம் ; இந்நலத்தை வலியவீசி வனத்திற்றழை தின்று உழல்வது நன்றன்று ; யாதொன்றெய்தற் பாலதோ அஃதிங்

ஙனே யெய்துக' என, இம்மொழி கேட்டு அக்கிழக்குரங்கு தன் குடும்பத்தோடு வேறிடம் புக்கது. பின்ன ரொருநாட் பணிசெய்வோன் மடையனைக் கரத்தண்டத்தா லோச்சியெறிந்தமையால் அவன் மற்றவனை யெரிகொள்ளிகொண்டெறிந்தான். அக்கனற் பொறியைத்தூறிற் பற்றிக் குதிரைச்சாலை யாவற்றினு மூண்டு அதனகத்துள பரிகளிற் சிலவெரிந்திறந்தன ; சிலவுடற்பாதி கரிந்து வீழ்ந்தன ; சில கண்முதலிய வுறுப்புக்கள் வெந்தன. இச்செய்தி யரசனறிந்து அக்கணத்திற் குதிரை மருத்துவரைக்கூய், 'அவ்வசுவ வேக்காடொழிதற்கெது செய்யலாவது ?' என, அவ்வமாத்தியர் 'குரங்கினெய்யாலன்றிக் குணமிராது' என, அண்ணலுடனே யேவல்புரிவோரானனமேறிட்டு இவ்வானரக் குழுவைக் கொலைசெய்து இப்பண்டிதர் சொல்லியாங்கு புரிந்து குணமுறுவிமின்கள்' என்றேவ, அவரன்னவாறு செய்தனர். இதை யம்முதுகடுவனறிந்து பெரிதும் வருந்தி 'இப்பழி வாங்குவேன்' என்றுறுதிசெய்து காட்டகத்துத் திரிதருகையில், வழியின் மிகப் பொலிவுள்ள வொரு பெருஞ்சரசைக் கண்டு இக்குளத்தகத்து மக்கள் நடப்பின்மையின் இவணொரு பெரும்பேயிருக்கவேண்டும்' என்றுள்ளிச் செய்மைக்கணின்றோர் தாமரைத்தாளைப் பிடுங்கி யதனுளத்தினால் நீரையுரிந்து குடித்தது. இதை யாண்டுவதிந்த கணங்கண்டு அதனின்று மர்க்கடத்தி னருகுற்று 'உன் சதுரப்பாட்டை மெச்சி நான் பிரசன்னமாயினேன்: இவ்வென் மணிவடத்தை யேற்றுக்கொள்' எனத் தன் களத்தின் மாலையைக் கழற்றிக்கொடுத்தது. அப்போது குரங்கு பைசாசத்தை 'உதகத்தினுனக்கு வலியெவ்வள விருக்கின்றது ?' என வினவ, அப்பைசாசம் 'ஆயிரம்பெயரொருங்கே நீரிலிறங்கினு மவரைப் புறம்போகவொட்டேன்' என, இதைக்கேட்ட வலிமுகம் 'உனக்கு விரம்பவுணவு கொடுவருவல்' என்று அவ்விரத்தின மாலையைக் கழுத்திலணிந்துகொண்டு சந்திரசேன அரையன் பதிபுக்கு இறைவனைத் தரிசித்துச் 'சுவாமிகாள் ! நஞ்சோறு நெடுநாளுண்டு வளர்ந்தேன் ; ஆதலா லும்மைக்காண வரலாயினேன்' எனப் பணிந்து சொல்ல, அரையன் 'இவ்வரதன வட முனக்கு யாங்குக்

கிடைத்தது ?' என, வானரம் 'சுவாமிகாள் ! காட்டிலொரு மலர்த் தடமிராநின்றது ; அதில் வைகறையிற் குதிப்பவனுக்குஇன்னமணிக ளகப்படுகின்றன' என, அம்மொழிகேட்டுத் தோன்றல் 'யானங் கெய்துவல்' என, வானரம் 'மிகவுநன்கு' எனத்தாழ, பின் மன்னன் சேனைக்குழாஞ் சூழ வானரத்தின் பின்சென்று அச்சரசின் அணித் திறுத்துப் பின்னர் அக்கங்குற் கழித்து விடியற்காலையிற் சாகாமிருக மெழுந்து வந்தலை யெழுப்பினேக்கி, 'நுமக்கரதன விருப்புளதேல் இதே நற்பருவம்' எனக்கேட்டுக் காலாட்களோடு தடத்திற் செல்லா நிற்கையில் வானர மரையனைப் பார்த்து 'எல்லோரும் தடத்திற் புக்கு மணிகள் வாரிக்கொண் டெய்தியபிற்றை நா மிருவரும்புக்கு இம்மணிகள் கொள்ளுதும்' என, அவன் 'அங்ஙனமாக' எனப்போக் கிய பதாதிகள் வாவியிலிறங்கின மாத்திரையி லப்பாரிட மவர்களை யந்நீரி லமிழ்த்திச் சேரக்கொன்றது. பின்புசந்திரசேனன் 'சேவகர் கள் சென்று நெடுநேரஞ் சென்றது ; இதுகாறு மெய்தவில்லையென் ?' என்றுபிலவங்கத்தைக்கேட்க, வானரம் வானுறவோங்கிய வொருமர நெடுங்கிளையிற்பாய்ந்தேறி யரசைநோக்கி, 'நீயென் குலமுழுதையுங் கொல்வித்தாய் ; ஆதலாலக்கடனை நானிங்ஙனங் கைக்கொண் டேன் ; நீ யெனக்கன்னந் தந்தமைபற்றி யுன்னை யுய்வித்தேன்' என, இப்பேச்சைக்கேட்டு அண்ணலிரங்கி, அத்தியாசைகொண்டு முயலுங்கருமம் கேட்டைத் தாராநிற்கும்' என் றுள்ளினவனுகக் கோயில்புக்கனன். அங்ஙனமாய கருமம் நீபுரிந்தமையால் அஃதுனக் குத்துன்பம் பயந்தது ; நல்லது இனியா னேகுவென்'' என, அப்போ ழ்து சக்கிரதரன் 'குறைவுற்றகாலையில் நட்டோர் பயன்படுகிறார் கள் ;அங்ஙனமாக நீயெற்றுறந்து எவ்வா றகலுதி ?' என, சுவர்ண சித்தி 'கள்வ னிராக்கதனைப் பிடிப்புழி வானரம் பேசினமையா லது பிடிபட்டது ; ஆதலால் நானிவ்வாழியை யஞ்சுகின்றேன்' என, சக்கிரி 'இஃதெங்ஙனம் ?' என, பொன்வாய்ப்பினன் சொல்லுகின் றனன்:—

''மதுரைப்பதிக்காவலனாகிய பத்திரசேனக் கோமானுடைய இரத்தினவதியென்னும் பெயரிய கட்டழகியாகிய மகளைக் கவரக்

கருத்துற்று ஓரிராக்கதன் போந்து அற்றநோக்கிச் சின்றேட்டிரிவுற்று அவ்வுபாய நடவாமைகண்டு ஒருநாட் பதிவிருக்க, அக்கன்னிகை அதுகண்டு அடுத்துநின்ற தோழிமுகநோக்கி 'உயிர்ப்பாங்கி! இவ்வரக்க னென்னை யெல்லுமெல்லியும் வருத்துகின்றனன்; இதற்கே தேனு மொருசூழ்ச்சி செய்யவேண்டுவல்' என, அதுசெவிபுக்க இராக்கதன் இம்மாதைக் கவரும்பொருட்டு யாம் வந்திருக்கையில் இவ்வெண்ணங் கொண்டே யெம்மினும் வலிய மற்றொருவன் வந்திருந்தா லென் செய்வேம்' என் றச்சமுற்று அனையன் குதிரைச் சாலையி லொரு கலிங்க வுருக் கொண்டிருந்தனன். அங்ஙனமிருப் புழிப் பரிமாக்கொடு போம்பொருட்டு அவணுற்ற வொரு கள்வன் இஃதேனையவற்றினும் மிக நன்ற யிருந்தமைகண்டு அதன்வாயிற் கலினம்பெய்து புறத்தீர்த்துவந்து அதன் மீதூர்ந்து வீட்டின்பால் நடாத்தா நிற்கையில் அஃதிங்குமங்கு மோடத் தலைப்படுகையில் அவன் சம்மட்டியால் அறைந்துபார்த்துஞ் செவ்வனே செல்லாமையால் அக்கள்வன் 'இதுகாறும் யாங்கண்ட பற்பலமாக்களி லிஃதொத் ததைக் கண்டோமில்லை; ஆதலா லிஃதேதோ கிருத்திரமமா யிருக் கின்றது' எனவுறு உள்ளங் கலங்குறுகையில் அக்குதிரை தொன் மரத்தின்கீ ழீர்த்தோட அப்போது மேலிருந்த கள்வன் விரைந்து ஆலின் வீழைப்பற்றித் தொத்தி அத்தருமீதேற, இராக்கதன் விளாசலுக் கஞ்சி யோடினன். அதைக்கண்ட அம்மரமீதிருந்த வானரம் 'அடா! இவன் மனிதன். நீயரக்கனுயிருந்து மேனிரி கின்றனை?' என, அதைக்கேட்ட சோரன் வெகுண்டு கீசகத்தின் வாலத்தைப்பற்றி வருத்த, அரக்கன் குரங்கு வஞ்சகமுள்ளதென் றெண்ணி மீண்டும் விரைந்தோடினன். ஆதலால் அக்கவிக்கு எய்திய வின்னல்போல் எனக்கு முளதாமென்றிந் நேமியைக்குறித் தஞ்சுகின்றனன்" என, சக்கிரி 'தெய்வமெதிர்ப்பின் யாவரும் மிங்ஙனமிடுக்க ணனுபவிப்பர்; கேண்மோ: இலங்கேசன் றிரிகூடாசலமொத்த மலையும், கடலொத்த வகழியும், தானரக்கனும், பேராற்றலுடையானும், சுக்கிரன் குருவுமாக, இவ்வண்ண மொன் றற் கொன்று குறைபாடின்றியிருந்தும் அதனையொரு குரங்கு அவ

மானத்தாற் றலைதாழ்ப்பித்தது ; ஆதலான் விதிவலிமுன் யாவன் சூழ்ச்சி வலியாயினும் யாது பயன்படும் ? அவ்வூழொன்றிருப்பின் தீயவு நல்லவாய்விடும்; இவ்வண்ணமே சிதடன்கூனன் முக்கட்பெண்ணிவர்கட்கு முன்னர் நேரிட்டதொன்று கேட்கிலையோ ?' என பொன்வாய்ப்பினன் 'அஃதெங்ஙனமோ ? இயம்புதி' என சக்கிரதரன் சொல்வானாயினான்:—

"மதுபுரக்காவலனாகிய மதுசூதனனென்பவற்கு முக்கட்பெண்டோன்றினமையாற் சோதிடம் வல்லோரைக்கூய், இதற்குச்செயற்பாலதென் ?' எனக் கேட்புழி 'சார்வபௌம ! கேட்குதி ; எவனாயினுஞ் சொல்வதை முன்னர் நன்காராய்ந்து சொல்லவேண்டும் , அங்ஙனமாராயாது சொல்லின் சண்டகருமனைப் போலாகும்' என, அரையன் 'அவன் யாதுரைத்தனன் ?' என, சோதிடம் வல்லோன் சொல்லலுற்றனன்:—

"தண்டகாரணியத்திற் சஞ்சரிப்போனாகிய சண்டகருமனென்னு மோரிராக்கதத்தலைவன் அவணோரிட்ட வோரந்தணன் றோண்மேலேறி நடத்திக்கொண்டு போகுழி, அவ்வேதிய னவ்வரக்கனடிகண் மிகமெல்லியவா யிருப்பனவற்றைப் பார்த்து 'ஐயா அரக்கன் 'நானீராடி யீரம்புலரளவு நிலன்மீதுசெல்வேன்' எனக்கேட்டுச் சிறிதாறுமுன்னே தூக்கிப்போய்ப் பிறகிராக்கதனொரு குளனின் மூழ்கப்புக்குழிப் பார்ப்பானைப்பார்த்து 'யானித்தகருமஞ்செய்துவருங்காறும் நீ அடிபெயரற்க ; இங்குத்தானே நிற்றி' எனச்சொல்லி, பின்னர் ஸ்நானஞ் செய்தனன்; அந்தண னிதைப்பார்த்து 'இவன் மூழ்கிப் புறம்போந்தானானால் நாமிவன் வயிற்றழலின் மூழ்காதிரேம். ஆதலால் ஓடி யுய்ய விதுவே நல்ல வமயம். நீராடிக் காற்புலருமுன் இவனடவானன்றே' யென்று தனக்குட் டெரிந்துகொண்டு விரைந்தோடினான். அதுகண்ட அவுணன் 'யான்வாய்பதறிக் கைக்கெட்டினது வாய்க் கெட்டாம விழப்புற்றேன் ; கடிதிற் பிற்சென்று கவர்வேனெனினுங் கொண்ட நோன்பின் குறையுறுகின்றது' என்று மறுக்க

முற்று ஆங்கே நெட்டுயிர்த்து வாளாவின்றனன். ஆதலான் யாது முய்த்துணரா தியற்றலாகாது' எனச்சொல்லி, பின்னர்ப் பன்னூல் களையும் நன்காய்ந்து கடைப்பிடித்து 'இப்புஸ்தகக்ஷணரிவையைப் பார்க்க வொண்ணாது ; என்னையோ வெனின், விரூப மசுவுளதாயி னதைக் காணலாகாதென்பது நூற்றுணிபாம் ; மற்றும் இஃதான்றோ ரொழுக்கமுமாம்' என, எந்தல் அம்மொழி யுட்கொண்டு அக்கன்னிகையை வேற்றுழிவைத்து அளித்தபின்னர் அவள் பூத்தமையான்'இவள் மணத்திற்கியைபவளுக்குப் பெரும்பொருட்சுவை தருவ' லெனத் தேயர்தோறும் மணவோலை போக்கினமையைக்கேட்ட இரந்துண்ணு மண்டையராகிய இருவர் குருடனுங் கூனனும் விவாகவிருப்பான் மன்னன்பாற் புக்கனர். அவருட் குருட னரயனைநோக்கி 'நுங்கன்னிகையை யெமக்குத்தரிற்கோடும்' என, இறைவன் 'இச்சுயம்வரத்து நங்கன்னிகையைக் கடிபுரிவது தக்கது' என்றுள்ளி அவனுக்கு மகட் கொடைநேர்ந்து, அங்ஙனமே கடிமுடித்து அளவில் பொருடந்து 'நீகணமும் நீட்டியாமற் பரதேயம்போதி' என்றனன். அவ்விடைகொண்டு மூவரும் பரதேயம் புக்கிருப்பழி, அவளக்கூனற்கு வயமாய் அவனைநோக்கி, 'இக்குருட்டுச் சவத்தை நஞ்சிட்டுக்கொல்லின் நாமிடையூறின்றி யின்ப நுகர்வேம்' எனக்கேட்டு, அவன் செத்தபாம்பொன்றைத் தந்தனன். அவள் அங்கதை யேற்றுக் கண்டித்து அடுப்பின்மேல் வேகவைத்துப் பொறியிலியை 'இத்தசைவிற்குறித்துக் கொணர்ந்தேன்; இச்சுல்லி யெரித்துக்கொண்டிரு ; நான் வேறுகருமத்திற் புகுகின்றேன்' என, அக்கண்ணறை யவ்வாறே யிளந்தழலா லெரித்துக்கொண்டிருப்புழி அக்கிருட்டினசருப்பவாவி கண்ணிற்றாக்கி யவ்விடத்திற் கண்ணுரோகந் தீர்ந்து முன்போற் கண்டெரிந்தமையால் இவரிருவரும் இவன் குருடுதவியால் நகைத்து விளையாட்டயர்வதைக்கண்டு காலானெறி —ாணும் பண்டை மாட்சிபோல் வந்து கூனனைப்பற்றி யீர்த்துச் சீற்றத்தாற் றாக்கி அவண்முகத்தி லெற்றினவளவில் அவள் மூன்றும் பிழிமறைந்தது, இக்கூனன் கூனும் நிமிர்ந்தது. ஆதலாற் றெய்வவொற்றுமை யிருந்தால் யாவுநல்லவாம்" என, சக்கிரதரன் 'நல்லது யுன்கிருகத்துக்கேகுழி வழித்துணையோடேகு ; ஊர்வழித் தனித்

துச்சேறலு மெல்லோரு முறங்குகையில் விழித்திருக்கையுந் தலையாயபொருளு மின்பமுந் தனக்கே யுளவாகுக வென்னும் விருப்பமு மொழியற்பாலன என நூலறைகின்றது. இங்ஙன நூனெறி கடவா வொழுக்கின புயங்கத்தினின்று மொருவேதிய னுய்ந்த வண்ண முய்வான்' என, சுவர்ணசித்தி 'அப்ப! அவனுய்யலெவ்வாறு நிகழ்ந்தது?' என, சக்கிரி சொல்வானாயினன்:—

"நாசிகதேயத்தனாகிய தந்தனென்பவன் தன்னன்னையைநோக்கி, யான் ஆரியன் கருமத்தா லோரூர்க்குப்போகுவல் விடைதருகுதி' என அவ்வின்னுள் 'குழந்தாய்! ஒருவனு யேகற்க' எனக்கேட்டு,அவன் தாயே! நெரி யூறின்றி யிருக்கின்றதே, என, அவள் மீண்டும் 'அப்பனே! எஃதுளவாயினும் நீ நெறித்துணையின்றிச் சேறலாகாது' என்று கூபத்தி லொருநண்டைப்பற்றியொரு கலயத்திற் பெய்து கொடுத்து 'அதையேனுந் துணைக்கொடுபோக' என, அவ்வாறே யாய்மொழி மேற்கொண்டேகுழி, நெறியில் வேனிலால் வேதுற்று ஒருதருநீழலிற் கண்வளராநிற்குமிடத்து, யாண்டிருந்தோ அவற்றீண்ட வந்த வோரரா அம்மட்கலயத்திற் பெய்திருப்பதென்னென்று அதனுட் டலைநீட்டுகையில் அந்நெண்டு இஃதோர் காரரா வென்றுணர்வுற்றுக் கொடுக்கா லிடுக்கிக்கொன்றது. பின்னர் அந்தணன் விழித்துப் பணியைப்பார்த்து 'அஃதெங்ஙன மிறந்தது?' எனச் சூழ்வழி, அதன்சென்னியை அவ்வலவன் கத்திரித்திருக்கக்கண்டு இத்துணைச்செயலு மிதுவே புரிந்தது. மாதா தந்த வழித்துணையாற் பிழைத்தேன். "தாயிற் சிறந்தொரு கோயிலு மில்லை" என்றதுபொய்யாது' என்று அந்நண்டைக்கொடு இல்லம்புக்கு அன்னைக்கு அட்டாங்கமும் நிலந்தோய வீழ்ந்து பணிவுதோன்றத் தழுதழுத்த சொற்களால் வாழ்த்தி நிகழ்ந்த செய்திகளைவிளம்பி யின்புற்றிருந்தனன்" என, பொன்வாய்ப்பினன் 'இதுதக்கதேயாம், மந்திரந் தீர்த்தம் பெரியோர் சோதிடன் மருத்துவன் குரு வின்னோர்பால் எவனெவ்வணம் பாவனை புரிவானோ அவனவ்வணம் பேறுபெறுவன்' என்று இங்ஙனம் நேமியானைத் தேற்றித் தன் மனைக்கேகினன்" என்று தன்மனைவி யுரைப்பக்கேட்டுத் தேவ காமவேதியனும் அவளை

மூங்காவைக் குறித்து ஆகுலித்தலினின்றுந் தவிர்த்துத் தேற்றலும் அவள் தான் ஆராயாது செய்த செயல்பற்றி யிரங்கலொழிந்தனள்' என்று ஊர்காவலனுரைப்ப மணிபத்திரன் முதலிய யாவருங் கேட்டுணர்ந்தேகினர்."

இங்ஙனஞ் சோமசன்மனென்போன் அரயன் மக்கட்கு உரைத்த பஞ்சதந்திரம் நிறைவேறிற்று.

திருச்சிற்றம்பலம்.